R & C PROPERTY LAWYERS LLP
& NOTARY PUBLIC
10a Upper Tooting Road, London SW17 7PG
Telephone: 02087724920
Conveyancing Services:
Residential, Commercial Conveyancing,
Notarial Services:-
Notarisation & Legalisation of Documents
Power of Attorneys,
SENTHURAN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor

A Freely Circulated Monthly
புதினம்
PUTHINAM மலர் 21
NOVEMBER 2017 இதழ் 10

LINGA & CO
LEGAL ADVISORS AND IMMIGRATION SPECIALISTS

V.P.Lingajothy
LLB (Hons), MSc, Dip F.ms, Acilex
Principal, Immigration Specialist
46 HIGH STREET COLLIERS WOOD
LONDON SW19 2BY
TEL: (020) 8544 9265 FAX: (020) 8542 9530
EMAIL: LILEGALADVISORS@YAHOO.CO.UK
OISC

லண்டனில் முதலாவது தமிழர் நகை மாளிகை
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
WESTERN
Jewellers
230 Upper Tooting Road, London Sw17 7EW
Tel : 02087673445
5, Plaza Parade, 29-33 Ealing Road, Wembley, MiddX HA0 4YA
Tel : 02089030909



THARANI
JEWELLERY
அதி குறைந்த வட்டி வீதத்தில்
அடைவு பிடிக்கும் நகை மாளிகை
54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ.
Tel: 020 8902 7111, 020 8902 6777

# சுதந்திரப் பிரகடனம்

26 நாட்களுக்கு முன்பாக காட்டலோனிய தலைவர் கார்ல்ஸ் பியூச்டிமோண்ட் நடாத்திய சுதந்திர பிரகடன வாக்கெடுப்பு, பிரிந்து செல்லும் முடிவினை முன்மொழிந்தது.

இதனை நிராகரித்த ஸ்பானிய அதிபர் மரியானா ரஹோய் , காட்டலோனிய மாகாண அரசின் மீது அரசியலமைப்புச் சட்டத்தின் 155 சரத்தினை பிரயோகிக்கப்போவதாக மிரட்டினார்.

ஆனால் அவ் அச்சுறுத்தலையும் மீறி, காட்டலோனோனிய நாடாளுமன்றில் 27-10-2017 நடைபெற்ற சுதந்திர பிரகடன வாக்கெடுப்பு வெற்றிகரமாக (70-10) நிறைவேற்றப்பட்டது.

காட்டலோனிய அரசைக் கலைத்துவிட்டு, டிசெம்பர் 21 ஆம் திகதியன்று காட்டலோனியாவிற்கான புதிய மாகாணத் தேர்தலை நடத்தப்போவதாக ஸ்பெயின் அதிபர் ரஹோயின் நாடாளுமன்றம், தீர்மானமொன்றினை நிறைவேற்றியுள்ளது.

காட்டலோனியாவில் நடைபெற்ற பிரிந்து செல்வதற்கான வாக்கெடுப்பும் , காட்டலோனிய நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட சுதந்திர பிரகடனமும், ஸ்பானிய அரசியலமைப்பிற்கு முரணானது என்கிற வாதத்தை முன்வைக்கிறார் அதன் அதிபர் மரியனோ ரஹோய்.

ஒரு அரசை விட்டு பிரிந்து செல்வதற்கான தீர்மானத்தை காட்டலோனிய தேசிய இன மக்கள் முடிவு செய்த பின்னர், ஸ்பானிய அரசியலமைப்பிற்குக் கட்டுப்பட வேண்டிய அவசியம் இல்லையென்பதுகூட பலருக்குப் புரிவதில்லை.

காட்டலோனிய ஆட்சியைக் கலைத்துவிட்டு, டிசெம்பரில் தேர்தலை நடாத்தினாலும், மீண்டும் 'சுதந்திர பிரகடனம்' செய்தவர்களே ஆட்சியில் அமருவார்கள் என்பது நிஜம்.

ஆனாலும் ஸ்பானிய மத்திய அரசு வலிந்து திணிக்கும் தேர்தலில் , தனிநாடு பிரகடனம் செய்தோர் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

இப் பிரகடனம் வெளியானவுடன், பிரித்தானிய பிரதமரின் பேச்சாளர், 'சுதந்திர காட்டலோனியாவை அங்கீகரிக்க மாட்டோம்' என்கிற செய்தியைக் கூறியுள்ளார்.

ஸ்காட்லாந்து அரச பேச்சாளர் சுதந்திர பிரகடனத்தை வரவேற்றுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தலைவரோ, ஸ்பெயினை மட்டுமே தாம் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

ஒரு தேசிய இனத்தின் பிரிந்து செல்லும் பூரண சுயநிர்ணய உரிமையை , 'தாம் ஜனநாயகவாதிகள்' என்று பிரகடனம் செய்வோர் நிராகரிப்பதன் நோக்கம் என்ன?.

பூகோள அரசியல் நலனை மீறி எந்த ஜனநாயகமும் கிடையாது என்பதையே இவர்கள் எப்போதும் எமக்கு உணர்த்துகிறார்கள். ■

HYPERTECH,
Refrigeration/Shop Fitters
14. Whytecliffe Road, Purley, CR82AU. Ph: 079 1010 1022

Refrigeration and Air-condition Installations
Service & Preventative maintenance
Total Shop Fitting
Three and single phase wiring
20 years of experience in commercial refrigeration
used and refurbished remote chillers available from £2,500.00
Deal any noise issues with local councils
walk in Cold/freezer rooms are on sale at 20% discount


செல்வராஜா கோல்டு ஹவுஸ்
Tooting Broadway
16வது ஆண்டு நிறைவை முன்னிட்டு
நகைகள் அனைத்தும் செய்கூலியுடன்
£295 பவுண்கள் மட்டுமே
162 B, MITCHAM ROAD, LONDON SW17 9NJ
TEL: 020 87673795


LycaFly
call us 24X7
0207 132 32 32
Colombo பயணமா?
எங்குமில்லாத சிறப்பு சலுகை.
FREE LYCAMOBILE UK BUNDLE
WITH EVERY BOOKING YOU MAKE WITH US T&Cs Apply


தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448



Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
ஒருவருட
இணைப்புச் சந்தா
£69
புதுப்பித்தல்
£49
14 மாதங்கள்
SET TOP BOX
INCLUDED
LycaTV App ஐ
Download செய்து
பார்வையிடலாம்
ஒரு மாதச் சந்தா
£4.99
மட்டுமே
Google play
App Store
tv
Roku
AirPlay
chromecast
Samsung SMART TV
LG Smart
androidtv
amazon fireTV
kindle fire
XBOX
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
விஜய்
ZEE தமிழ்
KTV
JAYA TV HD
Lyca Classic
7000க்கும் அதிகமான TAMIL & HINDI திரைப்படங்கள்
கனவு உ தொழிற்சாலை
BAAR BAAR DEKHO
ROCK ON
SUBSCRIBE NOW!
0207 132 2727
FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCAMEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCAMEDIA LTD, THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THEREOF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.
www.lycatv.tv

பனங்காட்டான்

# பிறக்க முடியாது உருளும் பிள்ளைக்கு பிரேத பரிசோதனை செய்கிறது சிங்கள தேசம்

பிறக்க முடியாது உருண்டு புரண்டு தத்தளிக்கும் புதிய அரசியலமைப்பைக் கருவறையில் வைத்தே சிதைத்துவிட சிங்கள பௌத்த ஏகாதிபத்தியம் எடுக்கும் முயற்சிகளுக்கு தமிழர்களை பலிக்கடாவாக்க எத்தனிப்பதை மைத்திரி ரணில் அரசு எவ்வாறு தடுக்கப்போகிறது?

தமிழ் மக்களின் நிகழ்கால நியாயபூர்வமான போராட்டங்களை சிங்கள தேசமும் அதன் தலைமைகளும் ஒரு விளையாட்டாகவே பார்க்கிறார்கள் என்பதை நன்றாக அவதானிக்க முடிகிறது.

தமிழ் மக்களின் தீர்க்கப்படக்கூடிய பிரச்சனைகளைக்கூட தீர்க்காது அவர்கள் இழுத்தடித்துச் செல்வதில் தமிழ் அரசியல்வாதிகளும் உடன்பட்டிருப்பது வேதனையளிக்கிறது.

வவுனியாவிலிருந்து அநுரதபுரம் சிறைக்கு மாற்றப்பட்ட மூன்று தமிழ் இளைஞர்களும் தம்மை மீண்டும் வவுனியாவுக்கு மாற்றுமாறு உண்ணாவிரதம் ஆரம்பித்து ஒரு மாதம் முடிவடைந்துவிட்டது.

சாட்சிகளின் வேண்டுகோளுக்கிணங்கவே இவர்களை அநுரதபுரத்துக்கு மாற்றியதாக சட்ட மாஅதிபர் தம்மிடம் தெரிவித்ததாக கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

சாட்சிகள் எனப்படுபவர்கள் வழக்கு விசாரணைக் காலங்களில் மட்டும் நீதிமன்றம் சென்று திரும்புபவர்கள்.

எதிரிகளாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவர்கள் வழக்கு விசாரணை முடிவுற்று தீர்ப்பளிக்கப்படும்வரை அங்கேயே தடுத்து வைக்கப்படுபவர்கள்.

இலங்கை அரசியலமைப்பின் பிரகாரம் தங்கள் தாய்மொழியில் வழக்கு விசாரணையை எதிர்கொள்ளும் உரிமை எதிரிகளுக்குண்டு. ஆதலால், சிங்கள மொழியில் விசாரணை நடைபெறும் அநுரதபுரத்திலிருந்து தங்களை வவுனியாவுக்கு மாற்றுமாறு கேட்கும் அடிப்படை மனித உரிமை மூன்று இளைஞர்களுக்கும் உண்டு என்பது சட்டவாளரான சுமந்திரனுக்குத் தெரியாதிருக்க முடியாது.

கூட்டமைப்பின் தலைவரும் எதிர்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் மூத்த அரசியல்வாதி மட்டுமன்றி நீண்டகால அனுபவம் பெற்ற சட்டவாளரும்கூட. நேரடியாகச் சொல்வதானால் சகல விடயங்களிலும் சுமந்திரனிலும் பார்க்க மூத்தவராக விளங்குபவர்.

இவ்வாறான தகுதிபெற்ற சம்பந்தன் சில நாட்களுக்கு முன்னர் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டியதை வற்புறுத்தி ஜனாதிபதிக்கு ஒரு கடிதம் எழுதினார்.

இதுவரை அதற்கான பதில் ஜனாதிபதியிடமிருந்து அவருக்கு அனுப்பப்படவில்லை.

இங்கு எழுகின்ற முக்கிய கேள்வி என்னவெனில் சட்டம், அரசியல், பொது அறிவு அனைத்தும் கொண்ட சம்பந்தனுக்கு. சாட்சிகளின் கோரிக்கையின் அடிப்படையில்தான் கைதிகள் இடம் மாற்றப்பட்டனரென்பது தெரியாதிருக்குமா என்பதுதான்.

அப்படியானால், எல்லாவற்றையும் தெரிந்து கொண்டே தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காகவே ஜனாதிபதிக்கு அவர் கடிதம் எழுதினாரா என்ற கேள்வியும் பின்னால் எழுகிறது.

ஜனாதிபதிக்கு கடிதம் எழுதிய மறுநாள் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற தீபாவளி வைபவத்தில் அவருக்கருகில் அமர்ந்திருந்த சம்பந்தன் அநுரதபுரம் கைதிகள் விடயம் சம்பந்தமாக எதுவுமே பேசவில்லையென்று ஊடகங்கள் விமர்சித்து வருகின்றன.

கடந்த 14ம் திகதி யாழ்ப்பாணம் சென்ற ஜனாதிபதியுடன் வீதியில் நின்று உரையாடிய வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், ஒரு குழுவினருடன் கொழும்பு சென்று ஜனாதிபதியைச் சந்தித்து கைதிகள் விடயமாக உரையாடியது பத்திரிகைகளில் படங்களுடன் வெளியானது.





> தமிழ் மக்களின் தீர்க்கப்படக்கூடிய பிரச்சனைகளைக்கூட தீர்க்காது அவர்கள் இழுத்தடித்துச் செல்வதில் தமிழ் அரசியல்வாதிகளும் உடன்பட்டிருப்பது வேதனையளிக்கிறது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் இதே தினம் ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடினர். இரண்டு சந்திப்புகளுக்கும் ஏற்பாடு செய்த வடமாகாண ஆளுனர் றெஜினோல்ட் கூரேயும் இச்சந்திப்புகளில் பங்குபற்றினார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பு ஓர் ஏமாற்று நாடகம் என்று கூறி, மறுநாளே வகுப்புகளை புறக்கணிக்க ஆரம்பித்துவிட்டனர் பல்கலைக்கழக மாணவர்கள்.

ஆனால் ஜனாதிபதியின் கூற்றில் நம்பிக்கை வைத்து, அக்டோபர் 25ம் திகதிக்கு முன்னர் சாதகமான முடிவு வருமெனக் கூறிவந்த சிவாஜிலிங்கம், தாம் ஏமாற்றப்பட்டதை இப்போது உணருகிறார்.

அந்த 25ம் திகதி போய்விட்டது. ஜனாதிபதி எதுவும் செய்யவில்லை. அவரது அலுவலகத்திலிருந்து எந்த அறிவிப்பும் வரவில்லை. அவர் இரண்டு நாள் விஜயமாக கட்டார் நாட்டுக்குச் சென்றுவிட்டார்.

இது இவ்வாறிருக்க, அநுரதபுரம் நீதிமன்றில் 25ம் திகதி செவ்வாய்க்கிழமை மூன்று கைதிகளும் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, நீதவான் எதிர்பாராத கருத்தொன்றை அரசியல்வாதிகள் பாணியில் வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலோ வவுனியாவிலோ லண்டனிலோ ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதால் இந்த வழக்கை மீண்டும் வவுனியாவுக்கு மாற்ற முடியாதென்பதே கைதிகளுக்கு நீதவான் வழங்கிய அரசியல் அறிவுரை.

சிங்கள நீதவான் என்றால் அவருக்கு நீதிமன்றில் அரசியல் பேசும் உரிமையும் உண்டென்பதை இவர் செயலில் காட்டியுள்ளார்.

என்றோ ஒருநாள் இவர் நாடாளுமன்ற உறுப்பினராகலாம். அல்லது, பின்கதவால் உயர்நீதிமன்ற நீதியரசர் ஆகலாம். அதற்கான கன்னி உரையே இந்த அறிவுரை.

அரசியலமைப்பு அறிக்கை என்ன நிலையில் இருக்கிறது என்பதைச் சற்று நோக்கலாம்.

மூன்று நாட்களுக்கு இது தொடர்பான நாடாளுமன்ற விவாதம் நடைபெறுவதற்கு முன்னர் பல அதிரடி அறிவிப்புகள் அங்குமிங்குமாக பறந்து கொண்டிருக்கின்றன.

அரசியல் நாகரிகமற்ற வகையில் வீதிச் சண்டியர்கள் போன்று வரும் இந்த அறிவிப்புகள் இனவிரோத விதைகளைப் பரப்பி, சமூகத்தில் எதிர்பாராத பல அசம்பாவிதங்களை ஏற்படுத்தக்கூடியவையாக காட்சி தருகின்றன.

அரசியலமைப்புக்குத் திருத்தம் தேவையானால் தேர்தல் திருத்தத்துடன் நிறுத்திக் கொள்ள வேண்டுமென்றும், புதிய அரசியலமைப்பு தேவையில்லை என்றும் அமரபுர நிக்காய உட்பட மேலும் சில பௌத்த பீடங்கள் கூட்டாக அறிவித்துள்ளன.

புதிய அரசியலமைப்புத் தொடர்பாக ஜனாதிபதியும் பிரதமரும் முரண்பாடான கருத்துகளை வெளியிடுவதாகத் தெரிவித்துள்ள தாய்நாட்டைப் பாதுகாப்பதற்கான தேசிய அமைப்பின் தலைவர் முருத்தெட்டுவ ஆனந்த தேரர், புதிய அரசியலமைப்பை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லையென தூளுரைத்துள்ளார்.

அரசியலமைப்பு விவகாரத்தில் அரசு தனது எல்லை தாண்டக்கூடாது என்று அஸ்கிரிய பீடத்தின் செயற்குழு எச்சரித்துள்ளது. மல்வத்த பீடாதிபதி வேலி மீதமர்ந்து இருபுறமும் தலையசைத்துக் கொண்டிருக்கிறார்.

புதிய அரசியலமைப்பினூடாக தமிழருக்குத் தன்னாட்சியைக் கொடுப்பதைவிட, தமிழ் பேசும் ஒருவரை ஜனாதிபதியாகவோ அல்லது பிரதமராகவோ நியமிக்கலாமென்று இனவெறி ஆலோசனையை வழங்கியுள்ளார் கோதபாய ராஜபக்ச தலைமையிலான எலிய அமைப்பின் பிரமுகர் மிதகொட அபேதிஸ்ஸ தேரர்.

புதிய அரசியலமைப்பை ஆதரித்து வாக்களிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் ஊர்ப்பக்கம் தலைகாட்டக் கூடாதென்று மற்றொரு பிக்குகள் கூட்டம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பிக்குகளுக்கு நாங்கள் சளைத்தவர்களல்ல என்று இடித்துக் காட்டும் தோரணையில் சற்று வித்தியாசமான இரண்டு குரல்கள் வெளிவந்துள்ளன.

புதிய அரசியலமைப்பு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுமானால், நாடாளுமன்றத்தின்மீது குண்டு வீசப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் மகிந்த அணியின் பிரமுகருமான விமல் வீரவன்ச பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

இது மிகவும் அபாயகரமான ஓர் அறிவிப்பு.

1987ல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ராஜீவ் காந்தி ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர், அதேயாண்டு ஆகஸ்ட் மாதம் 18ம் திகதி இலங்கை நாடாளுமன்றத்தில் ஜே.ஆர். தலைமையில் அரச தரப்பு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது குண்டுத்தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது.

மாத்தறை மாவட்ட அமைச்சர் கீர்த்தி அபயவிக்கிரமவும், நாடாளுமன்ற உத்தியோகத்தர் ஒருவரும் கொல்லப்பட்டனர். அமைச்சர் அத்துலத் முதலி படுகாயமடைந்து சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

அப்படியான ஒரு தாக்குதலையே விமல் வீரவன்ச இப்போது அறிவித்திருப்பதாக பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம் எடுத்துக் கூறியதையடுத்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார்.

வன்னி யுத்தத்தின்போது பிரதான தளபதிகளில் ஒருவராகவிருந்த மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன, நாட்டின் துரோகிகள் கொல்லப்படுவரென முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார்.

அரசியலமைப்பை ஆதரித்து நாட்டைப் பிளவுபடுத்த முனைபவர்களையே தேசத்துரோகிகள் என்று அடையாளப்படுத்தியிருக்கும் இவர், இத்துரோகிகளின் மரணச் சடங்குகளில் மரியாதையாக எவரும் நடந்து கொள்ளக்கூடாதென்றும் தெரிவித்துள்ளார்.

கோதபாய ராஜபக்சவின் எலிய அமைப்பின் பிரதானியான கமால் குணரத்ன, கம்பகாவில் கோதபாய தலைமையிலான கூட்டமொன்றில் உரையாற்றும்போதே இந்த அறிவிப்பைக் கொடுத்தார்.

இதனூடாக கோதபாய ராஜபக்ச என்ன கொள்கையின் அடிப்படையில் எலிய அமைப்பை உருவாக்கியுள்ளார் என்பது நன்கு தெரிகிறது.

புதிய அரசியலமைப்பை தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டதாக தெரியவில்லை. பல கோணங்களிலிருந்தும் எதிர்ப்புக் குரல்களே வருகின்றன. அதேசமயம் சிங்கள பௌத்த இனவெறிக் கூட்டம் புதிய அரசியலமைப்பை எதிர்ப்பதென்ற பெயரில் தமிழ் மக்கள்மீது இனவெறியைக் கட்டவிழ்த்துவிட துடித்துக் கொண்டிருக்கிறது.

இவர்களின் ஆரம்பமே இப்படியாக இருக்குமாயின், அடுத்த கட்டங்கள் எத்தகைய வீச்சைக் கொண்டவையாக இருக்குமென்பதை அனுமானிக்கலாம்.

இதனைத்தான் மைத்திரி ரணில் அரசும் மறைமுகமாக ஆதரிக்கிறதோ என்ற ஐயமும் எழுகின்றது.

பிறக்க முடியாது உருண்டு புரண்டு தத்தளிக்கும் புதிய அரசியலமைப்பை, கருவறையில் வைத்தே சிதைத்துவிட சிங்கள பௌத்த ஏகாதிபத்தியம் எடுக்கும் முயற்சிகளுக்கு, தமிழர்களைப் பலிக்கடாவாக்க எத்தனிப்பதை மைத்திரி ரணில் அரசு எவ்வாறு தடுக்கப்போகிறது?

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இப்போது புதுவடிவில் வேஷம் கொள்ளும் இனவாதத்தை உணர்ந்து தெளிவு பெற்று உரிய நடவடிக்கையை உடனடியாக எடுக்கத் தவறின், குண்டுகளைச் சுமந்து துரோகிப் பட்டத்தையும் ஏற்றுக் கொள்ள நேரிடலாம். ■

# புதினம்
PUTHINAM

**லண்டன் தமிழர்களின் அபிமான இலவச இதழ்**

ஆசிரியர்:
**ஈ.கே.ராஜகோபால்**
**E.K.Rajagopal**

வடிவமைப்பு
சத்யன் லே-அவுட்
9551395516

அலுவலக முகவரி:
**PUTHINAM**
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk

'ஈழுகேசரி' வெளியீட்டு நிறுவனத்துக்காக 21 ஆண்டுகளாக வெளிவரும் இலவச இதழ். தபாலில் பெற விரும்புவோர் முத்திரைச் செலவான £25 பவுண்களை மட்டும் Puthinam என்ற பெயருக்கு காசோலையாக அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.


## சர்வதேச தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய மாநாடு

லண்டனைத் தளமாகக் கொண்டியங்கும் சர்வதேச தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடாத்திவரும் மாநாடு நவம்பர் 4ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இம்முறை 'இனப்படுகொலையை நினைவுகொள்வதிலும் அதனை எதிர்த்துச் செயற்படுதலிலும் ஊடகவியலாளர்களின் பங்கு' என்ற தலைப்பில் Khalili Lecture Theatre, School of Oriental and African Studies, Bloomsbury, London WC1H 0XG என்ற முகவரியில் காலை 9.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர். முழுநாள் நிகழ்ச்சியாக நடைபெறவுள்ள இம்மாநாட்டில் ஊடகவியலாளர்கள், கல்வியாளர்கள், அரசியற் செயற்பாட்டாளர்கள் உரையாற்றவுள்ளனர்.


**FOR SALE**



used & and new AMX 35 and TEGOMETALL shelving for sale.

14, Whytecliffe Road, Purley, CR82AU.
**Ph: 079 1010 1022**



யாழ் இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவிகள் சங்கம் (ஐ.இ)
Jaffna Hindu Ladies' College Old Girls' Association (UK)

## பௌர்ணமாலைப் பொழுது
கலை நிகழ்ச்சிகள்





An evening entertainment with dinner

From 5.30 pm till 10.30 pm
On Saturday, 9th December, 2017


At Valantine High School, Cranbrook Road, Ilford, IG2 6HX

Admission : Adults £15, Under 16 £6, Family £40

பழைய மாணவிகள், ஆசிரியர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் இந்த விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**Further Details**
Mrs Vinothini Barathan - 07919178006
Ms Thayalini Ratnam - 07548798973
Mrs Annapoorani Sathiyamoorthy - 07944059349
Mrs Kohilamathy Mylvaganam - 07460930751









*Royal Phoenix Hotel*
YOUR GREAT ESCAPE

Spend your holiday at Royal Phoenix Hotel for as low as
**$28 PER NIGHT**

Stay with us at Royal Phoenix Boutique Hotel this Holiday and experience the unique brand of hospitality in the Antique hotel in the city of Kochchikade, Negombo.

No: 15, Holy Trinity Church, Poruthota Rd, Kochchikade, Negombo, 11540, Negombo, Sri Lanka
For inquiries and reservations, please call/email us at
(031) 227-3177 or info@royalphoenixboutiquehotel.com


## உயர்வாசற்குன்று முருகன் கோவில்
## HIGHGATEHILL MURUGAN TEMPLE
200A, Archway Road, London N6 5BA Tel: 020 8348 9835 Fax: 020 8482 6508

### திருவிழாக்களும் விசேட பூசைகளும்
### Aupicious Days, Special Poojahs & Festivals - 2017

### November- 2017 நடைபெறும் நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| 01 Wednesday | Pirathosa Viratham | பிரதோச விரதம் |
| 03 Friday | Full Moon, Iyppasi Velli *3 | பூரணை, ஐப்பசி வெள்ளி *3 |
| 04 Saturday | Iyappasi Parani | ஐப்பசிப் பரணி |
| 05 Sunday | Karthigai Viratham * | கார்த்திகை விரதம் * |
| 06 Monday | Sankadakara Chathurthy * | சங்கடகர சதுர்த்தி * |
| 10 Friday | Iyppasi Velli Last * | ஐப்பசி வெள்ளி கடைசி* |
| 13 Monday | Ehathasi Viratham | ஏகாதசி விரதம் |
| 15 Wednesday | Pirathosa Viratham | பிரதோச விரதம் |
| 17 Friday | Amaavaasai Viratham | அமாவாசை விரதம் |
| 22 Wednesday | Chathurthi Viratham * | சதுர்த்தி விரதம் * |
| 24 Friday | Sasti Viratham, | சஷ்டி விரதம், |
| 29 Wednesday | Ehathasi Viratham | ஏகாதசி விரதம் |

09.12.2017 திருவாசக விழா சிறுவர்களின் போட்டிகள்

17.12.2017 ஆலய ஸ்தாபகரும், முன்னைநாள் தலைவருமான அமரர் சபாபதிப்பிள்ளை ஐயாவின் ஞாபகமாக நடைபெறும் திருவாசக விழா



# விமலின் பக்கம்

**2009**-ல் லங்காபுரியில் ராவணேசனும் சகோதரர்களும் தமிழர்கள் மீது நடாத்திய அதர்ம யுத்தத்தின் விளைவாக இன்று வடபுலத்தில் சுமார் 60 ஆயிரம் முதல் 80 ஆயிரம் இளம் பெண்கள் விதவைகளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இங்கு மேலை நாடுகளைப் போல அரசாங்க நிதி உதவி, நகராட்சி மன்ற மான்ய உதவி - இப்படி எதுவுமே இல்லாத காரணத்தால், தமது குழந்தைகளின் வயிற்றையும் தமது வயிற்றையும் நிரப்பவும் தமது குழந்தைகளின் பள்ளிப் படிப்புக்கான செலவுகளைச் சமாளிக்கவும் வழிதெரியாமல் தடுமாறுகிறார்கள் இந்த இளம் தமிழ் விதவைகள். குற்றம் எதுவுமே செய்யாமல் கடும் தண்டனையை அனுபவித்து வரும் இந்த அப்பாவிப் பெண்களை இலங்கையின் பிற ஊர்களில் இருந்து வரும் காமுக கும்பல்களும் இலங்கைக்கு வெளியே கடல் கடந்த நாடுகளில் இருந்து வீடியோ காமெராக்களுடன் பறந்து வரும் புலம் பெயர் காட்டுமிராண்டிக் கயவர்களும் வேட்டையாடி வருவதை நடுநிலை ஊடகங்கள் அவ்வப்போது சுட்டிக் காட்டி வந்திருக்கின்றன.

'யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்திற்கு வந்தது ஒரேயொரு 'வித்தியா வழக்கு!' மிரட்டல், பயமுறுத்தல் மூலமும் காவல் துறை செல்வாக்குகள் மூலமும் நீதிமன்றத்தை எட்டாமல் தடுக்கப்பட்ட 'வித்தியா வழக்குகள்!' பல நூறு நிச்சயம் இருக்கின்றன.

மனித நேயமும் இரக்க உணர்வும் மிக்க மேலை நாடுகளில் இப்படியான துர்ப்பாக்கியசாலி பெண்களை 'போர்க்கால விதவை', 'உறவுகளை தொலைத்தவள்' என்றெல்லாம் விபரிப்பது கிடையாது. வாழ்க்கைத் துணையைப் பிரிந்து குழந்தைகளைப் பராமரித்து வரும் ஒரு பெண்ணோ, (அல்லது ஆணோ) எல்லோருக்கும் ஒரே பெயர் 'சிங்கிள் பேரன்ற்'. அதாவது ஒற்றைப் பெற்றோர் என்று சொல்லலாம்.

சிங்கிள் பேரன்ற்களுக்கு பிரிட்டிஷ் அரசாங்கமும் மற்றும் அரச அமைப்புக்களும் சலுகைகளைக் காட்டுகின்றன. பாடசாலைகளில்கூட சிங்கிள் பேரன்ற் –அம்மாவால் அப்பாவால் வளர்க்கப்படும் ஒரு பிள்ளையின் மீது ஆசிரியர்களும் விசேஷ கவனம் செலுத்துகிறார்கள்.

இந்தச் செய்திகளின் பின்னணியில் கடந்த வாரம் நான் பார்த்த தமிழ் படம் ஒன்று பற்றிய என் கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்

படத்தின் பெயர் "தரமணி". தமிழ்நாடு சென்னையில் ஒரு நகரம்.

சென்னை என்றால், தியாகராயநகர், மைலாப்பூர், அடையாறு மட்டுமே தெரிந்த எம்மவர் பலருக்கு "தரமணி" தெரிந்திருக்க நியாயமில்லைத்தான்.

சென்னை திருவான்மியூர் வேளச்சேரி பகுதியில், பழைய மஹாபலிபுரம் சாலையில் அடையாறுக்கு அருகில் - எம்.ஜி.ஆர். திரைப்பட நகருக்கு அருகில் இருந்த வெற்று நிலத்தில் பல மாடிக் கட்டிடங்கள் எழுப்பப்பட்டு புதிய தரமணி உருவாக்கப்பட்டுள்ளது

உலக வங்கி உட்பட பல வெளிநாட்டு *IT* நி றுவனங்கள் தரமணியில் அமைந்துள்ளன - அந்த *IT* நிறுவனங்களில் பணியாற்றும் இளசுகள் - கைநிறைய சம்பளம் வாங்கும் இந்த இளசுகளின் வாழ்வே தனி வழி.

"தரமணி"யில் பணியாற்றும் ஒரு *IT* யுவதி. ஆனால் அவள் ஒரு சிங்கிள் பேரன்ற். அதாவது வாழ்க்கைத் துணையை இழந்தவள்; எட்டு வயதுப் பையனுக்கு அவள் தாய். இருந்தாலும் அவளது அழகு, கவர்ச்சியான, எடுப்பான தோற்றம் அவளைச் சுற்றியுள்ள இந்தியத் தமிழ் வாலிபர்களையும் ஏற்கனவே திருமணமான அதிகாரிகளையும் சபலமடையச் செய்கிறது.

திருமணமாகி விட்டாலும் - கணவனைப் பிரிந்து வாழும் யுவதி தனது மகனை வளர்க்கப் படும் பாட்டை மிகச் சிறப்பாக விளக்கியிருக்கிறார் "தரமணி" இயக்குநர் ராம். குத்துப்பாட்டு கிடையாது சண்டைக்காட்சிகள்,



போர் அடிக்கும் சலித்துப்போன "பகிடிகள்' எதுவுமே இல்லை.

சிங்கிள் பேரன்றாக நடித்திருப்பவர் ஆண்டிரியா ஜேர்மையா. கமலின் விஸ்வரூபம் படத்தில் துப்பறியும் அதிகாரி கமல் உடன் சக அதிகாரியாக நடித்தவர் - கதகளி நடனம் ஆடியவர். இசைப் புலமை மிக்கவர். இப்போதெல்லாம் தொலைக்காட்சிப் போட்டிகளில், பாடகர் பிரசன்னா, நரேஷ் ஐயர் ஆகியோருடன் இணைந்து இசை நடுவராக அடிக்கடி அழைக்கப்படுபவர்.

இந்தப் பெண் ஆண்டிரியாவிடம் இத்தனை திறமை ஒளிந்து கிடந்ததா? என்று நாம் வியப்படைகிறோம். அவருக்காகவே எழுதப்பட்டு படமாக்கப்பட்டது போல் இருக்கிறது "தரமணி."

கதையின்படி ஆண்டிரியா ஏற்றுள்ள பாத்திரம் 'அல்தியா ஜோன்சன்' - ஓர் ஆங்கிலோ இந்திய யுவதி. புடவை கட்டுவது குறைவு - ஸ்கேர்ட் அணிவாள் - ஸ்கூட்டர் ஓட்டுவாள் - சிகரெட் பிடிப்பாள். ஸ்டைலாக செக்ஸியாக இருப்பாள். கணவனைப் பிரிந்து வாழ்கிறாள் என்பதால் அவளை வளைத்துப் போட்டுவிட எண்ணும் ஆண்கள் பட்டாளம் பெரிது.

இந்தப் பட்டாளத்தில் ஒருவன் பிரபுநாத்(வசந்த் ரவி என்ற புதுமுக நடிகர் - கதாநாயகனாக ஜமாய்க்கிறார்!) பிரபுநாத்தும் ஒரு *IT* ஊழியன். ஒரு பெண்ணால் ஏமாற்றப்பட்டவன். மூன்று லட்சம் ரூபாவையும் தன் காதலையும் இழந்தவன். அல்தியாவுடனும் அவளது எட்டு வயது மகனுடனும் நட்பாகிறான். 'பியர்ட் அங்கிள்' - தாடி மாமாவை பையனுக்கு மிகவும் பிடித்து போகிறது.

"எங்கே உன் அப்பா?" என்று கேட்கிறான் பிரபு.

"என் அப்பா ஒஸ்ரேலியாவுக்குப் போய்விட்டார்!

"டுபாயில் இருக்கிறார்!

"இறந்து விட்டார்!

"கடலில் டொல்பின்களுடன் விளையாடுகிறார்" என்று பல்வேறு விதமான பதில்களை அந்தப் பையன் சொல்கிறான்.

உண்மையில் கணவர் எங்கே என்று அல்தியா சொன்னதைக் கேட்டதும் அதிர்ந்தது பிரபுநாத் மட்டுமல்ல, நாங்களும்தான்.... காரணம் - அந்தக் காட்சியையே படத்தில் காட்டுகிறார் இயக்குநர்.

திருமணம் முடிந்த சில் தினங்களில் அல்தியாவின் கணவர் இன்னோர் ஆண் நண்பனுடன் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டிருப்பதை அல்தியா நேரில் காண்கிறாள். சாமான்ய மனைவிகள் போல கத்திக் குளறி, ஊரைக் கூட்டாமல் அமைதியாக கணவனுடன் உட்கார்ந்து பேசும் காட்சியில் அல்தியா எங்கள் மனதைத் திருடுகிறாள்.

தொடர்ச்சி 28ம் பக்கம்








# SkyWings Ltd.

*Your Travel Is Our Passion...*

23 YEARS

## Talk to our Specialist in TAMIL

## 0208 672 9111

## COLOMBO SPECIALS







## SECURE YOUR BOOKING BY PAYING A £150 DEPOSIT

## Worldwide Specials

| | | | |
|---|---|---|---|
| MELBOURNE | fr £598 | CHENNAI | fr £387 |
| AUKLAND | fr £607 | TRICHY | fr £427 |
| NEW YORK | fr £324 | DELHI | fr £397 |
| SYDNEY | fr £590 | KUALA LUMPUR | fr £412 |
| TORONTO | fr £312 | SIGNAPORE | fr £419 |

119, Tooting High Street London, SW17 0SY | T: +44 (0) 20 8672 9111

* Above fares are subject to availability. T&Cs Apply.

IATA

# கலைஞர் எப்படி இருக்கிறார்?



கலைஞர் மு.கருணாநிதிக்கு இப்போது இரண்டு தமிழ்கள் மட்டும்தான் கையிருப்பு.

சங்கத் தமிழ், குறளோவியத் தமிழ், காப்பியத் தமிழ், வீரத் தமிழ், விவேகத் தமிழ், காதல் தமிழ், கற்பனைத் தமிழ், மேடைத் தமிழ், மாநாட்டுத் தமிழ், விவாதத் தமிழ், வாக்குவாதத் தமிழ், சட்டசபைத் தமிழ், எதிர்ப்புத் தமிழ், ஆதரவுத் தமிழ், கவிதைத் தமிழ், நாடகத் தமிழ், சிறுகதைத் தமிழ், நாவல் தமிழ், சரித்திரக் கதைத் தமிழ், பத்திரிகைத் தமிழ், கடிதத் தமிழ், நகைச்சுவைத் தமிழ், ஆதாரத் தமிழ், அலங்காரத் தமிழ், உணர்ச்சித் தமிழ், எழுச்சித் தமிழ் என எல்லாமும் தவழ்ந்த அவரது நாவில் இப்போது இருப்பது சிரிப்புத்தமிழ், அழுகைத் தமிழ் என்ற இரண்டு மட்டும்தான்.

அன்பானவர்களைப் பார்த்தால் சிரிக்கிறார். இன்னும் அன்பானவர்களைப் பார்த்தால் அழுகிறார். இந்த இரண்டு மட்டுமே தன்னிடம் எஞ்சி இருக்கின்றன என்பதை அவரே உணரவும் செய்கிறார். அந்த உணர்வுதான் அவரை சோகப்படுத்துகிறது.

எப்போதுமே கூடு தங்காத பறவை. கருணாநிதி. வேலையே இல்லாவிட்டாலும் பறந்து கொண்டே இருப்பது அவரது பழக்கம். சி.ஐ.டி. காலனி வீட்டில் அதிகாலையில் எழும் கருணாநிதி, தேனாம்பேட்டை அண்ணா அறிவாலயம் வந்து நடைப்பயிற்சி செய்துவிட்டு, கோபாலபுரம் வந்து காலை உணவை முடித்துவிட்டு, கோடம்பாக்கம் முரசொலி அலுவலகம் சென்று உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதித் தந்துவிட்டு, மதிய உணவுக்காக சி.ஐ.டி. காலனி வந்து, சிறிது ஓய்வுக்குப் பிறகு 4 மணிக்கு கோபாலபுரம் வந்து, பார்வையாளர்களைச் சந்தித்துவிட்டு, 6 மணிக்கு மீண்டும் அண்ணா அறிவாலயம் வந்து, 8.30 மணிக்கு சி.ஐ.டி. காலனி வீட்டுக்குச் செல்வது என்ற பயணத்திலேயே இருந்தார். முப்பது ஆண்டுகளாக மு.கவின் மாறாத 'ஷெட்யூல்' இது.

முதுகுவலி, கால்வலி ஏற்பட்டு இயல்பாய் நடக்க முடியாத நிலை பத்து ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்டது. உடல் எடையைத் தாங்கும் சக்தி காலுக்கு இல்லாமல் போனது. எனவே இரண்டு பக்கமும் இரண்டு பேர் தாங்க நடந்து சென்றார். அதன் பிறகு கூச்சம் பார்க்காமல், கஷ்டம் பார்த்து சக்கர நாற்காலியில் பயணப்பட்டார். முன்பு சொன்ன பயணத் திட்டத்தில் நடைப்பயிற்சி குறைந்ததே தவிர மற்றவை தொடர்ந்தன.

தாயின் வயிற்றில் பத்து மாதம் அமைதியாக இருந்த பிறகு.. 95 வயதில் கடந்த பத்து மாதங்களாக ஒரே இடத்தில் இருக்கிறார் கருணாநிதி. நெஞ்சுச்சளி காரணமாக அவருக்கு 2016 செப்டம்பரில் மூச்சுத்திணறல் ஏற்பட்டது. நெஞ்சுச்சளி அகற்றப்பட்டது. ஆனாலும் தொடர்ச்சியான சுவாசத்துக்காக ஸ்டெத்ராடமி பொருத்தப்பட்டது. உடல் செய்ய வேண்டிய சுவாசத்தை அந்தக் கருவி செய்யும். பொதுவாக குறிப்பிட்ட காலம் வரை அதை வைத்திருந்து சுவாசம் சீரானதும் எடுத்துவிடுவார்கள். ஆனால், கருணாநிதியின் வயதைக் கருத்தில் கொண்டு நிரந்தரமாகவே பொருத்திவிட்டார்கள். கழுத்துக்குக் கீழே துளை போடப்பட்டு இக்கருவி பொருத்தப்பட்டுள்ளது. இதனால்தான் அவரால் பேச முடியவில்லை.





லேசாகப் பேச முயன்றால் இருமல் வந்துவிடுகிறது. மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்த மாணவி அவர். கருணாநிதியிடம் வாழ்த்து பெற வந்திருந்தார். "இந்தப் பொண்ணுக்கு நீங்கதான் பேர் வெச்சீங்க. இப்ப டாக்டர் படிக்கப் போறா!" என்று சொல்கிறார்கள். இது கருணாநிதிக்கு நன்கு புரிகிறது. 'வாழ்க...வாழ்க' என்று சொல்ல வருகிறார். 'வாழ்' என்றுதான் குரல் வருகிறது. 'க' வரவில்லை அதற்கு மேல் முடியவில்லை. தலையைத் தொட்டு வாழ்த்துகிறார். இப்படி அடையாளம் கண்டுகொள்கிறார். இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன் இது போன்ற நிலைமை இல்லை; அவரால் உணர முடியாத நிலைமை இருந்தது.

கடந்த வாரத்தில் தி.மு.க. உறுப்பினர் சேர்க்கையையொட்டி ஸ்டாலினுடன் மாவட்டச் செயலாளர் ஜெ.அன்பழகன் சென்ற போது இன்னும் கொஞ்சம் தெளிவு ஏற்பட்டு வருவது தெரிந்தது. ஸ்டாலின் ஏதோ சொல்ல முழுக்கப் புரிந்து கொண்டது போல் சிரித்தார். மு.க.தமிழரசு மகன் நடிகர் அருள்நிதி மகனை, செல்வி தூக்கி வந்தார். அந்தப் பையனை அவர் மடியில் வைத்ததும் மகிழ்ச்சி கூடுகிறது. ஏதோ ஒன்றைச் சொல்ல வந்து அவருக்குப் புரியவில்லை என்று இரண்டு மூன்று முறை சொன்னால், கோபமும்படுகிறார். 'தெரியுது தெரியுது' என்பது மாதிரி தலையை அசைக்கிறார்.

தன்னைச் சுற்றிலும் ஆட்கள் இருக்கும் போது மகிழ்ச்சியிலும், தனிமையில் வெறுமையிலும் இருக்கிறார் கருணாநிதி. தினமும் காலையில் அறிவாலயம், முரசொலி அலுவலகம் செல்வதற்கு முன் கோபாலபுரம் வந்து கருணாநிதியைச் சந்தித்துவிட்டுச் செல்கிறார் ஸ்டாலின். அவரோடு துரைமுருகன், பொன்முடி, எ.வ.வேலு, ஆ.ராசா போன்றவர்கள் வருகிறார்கள். மதிய நேரத்தில் ராஜாத்தி அம்மாள் வருகிறார். சென்னையில் இருந்தால் கனிமொழியும் வந்துவிடுவார். செல்வி, மு.க.தமிழரசு ஆகியோர் எப்போதும் இருக்கிறார்கள். இவர்களைத் தவிர வேறு யாரும் கருணாநிதியைப் பார்க்க அனுமதி இல்லை.

ஆட்சிக் காலத்திலும் அரசியல் காலத்திலும் அவரின் செயலாளர்களாக இருந்த ராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். சண்முகநாதன் இருவரும் தினமும் கோபாலபுரம் வந்து விடுகிறார்கள். பாதுகாவலர்கள் பாண்டியன், வினோத், பிள்ளை மூவரும் உடன் இருக்கிறார்கள். உதவியாளர் நித்யா இருக்கிறார். காவேரி மருத்துவமனை, டாக்டர் மோகன் காமேஸ்வரன் மேற்பார்வையில் சிகிச்சை தொடர்கிறது. ரஞ்சித் என்பவர் தலைமையிலான மருத்துவப் பணியாளர்கள் கட்டுப்பாட்டில்தான் கருணாநிதி முழுமையாக இருக்கிறார்.

உணவு முழுக்கவே திரவம்தான். கருணாநிதிக்கு எப்போதுமே செரிமானப் பிரச்னை உண்டு. அதனால் திரவ உணவே சரியானது என்று முடிவெடுத்துவிட்டார்கள். காலை 10 மணிக்கும், இரவு 8 மணிக்கும் மஞ்சள் சால்வை போட்டு உட்கார வைக்கப்படுகிறார் கருணாநிதி. மற்ற நேரங்களில் படுக்கையில்தான். சில நேரங்களில் டி.வி. போடப்படுகிறது. அதைக் கவனிக்கிறார். அவராகவே தூங்கிவிடுகிறார். விழிக்கும் நேரம், தூங்கும் நேரம் எனக் குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை.

கருணாநிதி தங்க வைக்கப்பட்டிருப்பது கோபாலபுரம் வீட்டின் முதல் மாடியில். வாரத்துக்கு ஒருமுறை தரைத்தளத்துக்கு அவர் அழைத்து வரப்படுகிறார். அங்குதான் தயாளு அம்மாள் இருக்கிறார். அவரும் உடல்நிலை பாதிக்கப்பட்டிருக்கிறார். சில நிமிடங்கள் இருவரும் பார்த்தபடி இருக்கிறார்கள். மறுபடியும் கருணாநிதி, மேல்மாடிக்கு அழைத்துச் செல்லப்படுகிறார். இதைத் தவிர வெளிக்காற்று என்பதே இல்லை. எப்போதாவது காரில். சென்னையைச் சுற்றிக் காட்டினாலோ, திடீரென்று ஒரு பெரும் கூட்டத்தை அவருக்குக் கூட்டினாலோ மனதளவில் நல்லது என்றும் சிலர் சொல்ல ஆரம்பித்துள்ளார்கள். ஆனால், மருத்துவர்கள் நோய்த்தொற்று ஏற்படலாம் என்று பயப்படுகிறார்கள். கருணாநிதியைப் பார்த்ததும் ஒரு பெரும் கூட்டம் கைதட்ட அது அவரைப் பழைய கருணாநிதியாக மீட்டெடுக்கும் என்பது தி.மு.கவினரின் ஆசையாக இருக்கிறது. 'அன்பார்ந்த' என்று தொடங்கி.. 'உயிரினும் மேலான என் அன்பு உடன்பிறப்புகளே' என்று சொல்லிக் கைதட்டலை அள்ளக் கூடிய சூழ்நிலை இல்லாவிட்டாலும் அவரது இதயத்துக்கு இந்தக் கைதட்டல் இதமாக இருக்கும்.

கருணாநிதிக்குப் பிரச்னையே முதுமைதான். வேறு எந்தப் பிரச்னையும் இல்லை.

'மிக நீண்ட தூரம் ஓடியவனால்தான் அதிக உயரம் தாண்ட முடியும்' என்பது கருணாநிதி அடிக்கடி சொல்வது. நீண்ட தூரம் ஓடியதால் அதிக உயரம் தாண்டிக் கொண்டுதானிருக்கிறார். அதை அனுபவிக்க முடியாமல்!

சார்ள்ஸ் அன்ரனி

# நல்லிணக்க இரட்டைக்குழல் துப்பாக்கி!

உலகத் தமிழர் பேரவையின் தலைவர் இமானுவேல் அடிகளார் தற்போது இலங்கை வந்துள்ளார்.

வரலாற்றை பின்னோக்கிப் பார்த்தால், லண்டனில் நடந்த ஈழம் ஹவுஸ் திறப்பு விழாவிலிருந்து, பிரித்தானிய பாராளுமன்றத்தில் நிகழ்ந்த மாநாடுவரை, அடிகளாரின் ஈழவிடுதலைப் பங்களிப்பு அமர்க்களமாகவிருந்தது. இவரின் பேரவைக்கு, ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் மாநாட்டில் அதிபர் ஜேக்கப் சூமாவோடு அமரும் சரியாசனம் கிடைத்தது.

இவையெல்லாம் ஈழப்போராட்டத்தை ஆதரித்த தென்னாப்பிரிக்கத் தமிழ் மக்கள் கொடுத்த வரம். பல அமைப்புகள் இணைந்த பெரும் கூட்டமைப்பாக இருந்த உலகத்தமிழர் பேரவை, இப்போது மெலிந்து வாடிப்போய் விட்டது.

பிரித்தானிய தமிழர் பேரவை, 7 மக்களவை உட்பட பல அமைப்புகள் இந்த பேரவையிலிருந்து விலகிச் சென்று விட்டன.

உருத்திரகுமாரனின் நாடு கடந்த தமிழீழ அரசாங்கமும் தமது உலகத் தமிழர் பேரவையும், 'இரட்டைக் குழல் துப்பாக்கி' என்று ஐரோப்பியத் தொலைக்காட்சி நேர்காணல்களில் முழங்கியவர்தான் இந்த இமானுவல் அடிகளார்.

இந்திய வாசல் (விசா) மூடப்பட்ட நிலையில், அடிகளாருக்கு இப்போது கொழும்பு வாசல் திறக்கப்பட்டுள்ளது.

மூச்சுக்கு முன்னூறு தடவை 'தலைவர்' என்று இவரால் அழைக்கப்படும் பிரபாகரன் வழங்கிய கைக்கடிகாரத்தினை , தமது கையில் கட்டியிருப்பதாகச் சொல்லி பெருமிதப்படும் அடிகளாரின் இன்றைய மாற்றத்திற்கு, என்ன காரணமென்று புலம்பெயர் மக்கள் குழம்பிப் போயுள்ளார்கள்.

'நல்லாட்சி' அரசு மீது இவர் நம்பிக்கை வைக்குமளவிற்கு என்ன பெரிய மாற்றம் நிகழ்ந்துவிட்டது?.

72, 78 இல் கொண்டுவரப்பட்ட குடியரசு அரசியல் யாப்பே போதுமென்று மகாநாயக்க தேரர்கள் வலியுறுத்திவரும் நிலையில், எதுவும் மாறிவிடப் போவதில்லை.





தமிழ் தலைமைகள் பண்டாரநாயக்க மீது நம்பிக்கை கொண்டதால், பண்டா-செல்வா ஒப்பந்தம் வந்தது.

டட்லி சேனாநாயக்க மீது வைத்த நம்பிக்கையால் டட்லி- செல்வா ஒப்பந்தம் ஏற்பட்டது.

இவற்றுக்கு என்ன நடந்தது?.

கண்டி பாத யாத்திரையும், யானையின் தும்பிக்கையும் இவற்றை கிழித்தெறிந்தன. பௌத்தமத உயர் பீடங்கள் வெகுண்டெழுந்தன.

இப்போதும் அதுதான் நடக்கிறது.

வல்லரசுகளின் ஆசீர்வாதத்தோடு நடந்து முடிந்த ஆட்சி மாற்றம், போரினால் சிதைந்த வட - கிழக்கு வாழ் மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை.

100 நாட்களைக் கடந்து பல போராட்டங்கள் இன்னமும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

அரசியல் தலைவர்களோடு நின்று படமெடுப்பதை விட்டு, ஒடுக்கப்படும் அந்த மக்களைச் சந்தியுங்கள் அடிகளார்.

அப்போது புரியும், அரசியல் கைதிகளின் விடுதலைக்காக- நில உரிமைக்காக- போராடும் மக்களின் உணர்வு.

பிரபாகரனின் பிடிவாதம், ஒரு தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை சார்ந்தது.

அது ஒரிறைமை ஒற்றையாட்சியை நிராகரிக்கிறது.

அந்த அரசியல் உறுதிப்பாடு ஏன் சிலருக்கு பிடிவாதமாகத் தெரிகிறது?.

நீங்கள் விரும்பும் இந்த 'நல்லாட்சி' அரசியல் தலைவர்கள், ' ஒரு தேசிய இனத்தின் இறைமையை ஏற்றுக் கொண்ட சமஸ்டியையாவது தருவார்களா?. என்று கேட்டுச் சொல்லுங்கள்.

இதைத்தானே உங்கள் 'புதிய' இரட்டை குழல் துப்பாக்கியின் ஒரு குழலான தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன் வைத்தது.

வல்லரசுகளின் பிராந்திய நலனிற்காக தமிழ் மக்கள் இழந்தது போதும்.

இணக்க அரசியல் வழிமுறைகள், தோல்வியில் முடிந்ததுதான் இலங்கையின் வரலாறு.

தம்மை இனவழிப்புக் குற்றச்சாட்டிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்கு, நல்லிணக்க அரசியல், பேரினவாதத்திற்குத் தேவைப்படுகிறது.

அது எமக்கான அரசியல் அல்ல அடிகளாரே!. ■

## இலண்டன் உயர்வாசற்குன்று முருகன் ஆலயத்தில் முழு நேர அர்ச்சகர் பதவிக்கான வெற்றிடம்

இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் அர்ச்சகர் முறையாக ஆகமம் பயின்று, விவாகம் செய்தவராகவும், குருக்கள் பட்டம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

கோயிற் பூசை, ஓமம், விவாகம் முதலியன செய்யக்கூடியவராகவும், தமிழில் அர்ச்சனை செய்யக்கூடியவராகவும், ஆலயத்திற் பதினைந்து ஆண்டுகளிற்குக் குறையாமல் பணியாற்றியவராகவும் தேகாரோக்கியம் உள்ளவராகவும், சுவாமிக்கு நைவேத்தியம், அலங்காரம் செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

ஆகக்கூடியது 24 மாதங்கள் பணி புரியலாம். அதன்பின் ஒரு மாத விடுமுறை உண்டு. சம்பளம் நேரில் முடிவு செய்யப்படும். தங்குவதற்கு ஆலயத்திலே தனியாக இருப்பிட வசதியும் செய்து கொடுக்கப்படும். இதனைத் தவிர வேறு ஊதியங்களும் கிடைக்கும். குடும்பத்தை அழைக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.



விண்ணப்பப் படிவத்துடன் ஆகமம் பயின்ற இடம், பணிபுரிந்த இடங்களில் இருந்து பெற்ற சான்றிதழ்களையும் சேர்த்து முழுப் புகைப்படத்தையும் இணைத்து கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு 30.11.2017க்கு முன்பாக அனுப்புதல் வேண்டும்.

Secreatary
Highgatehill Murugan Temple
200A Archway Road
London N6 5BA

## அமரர் காரையின் நினைவேந்தல் மாதவியின் நூல் வெளியீடு



அமரர் கலாநிதி காரை செ.சுந்தரம்பிள்ளையின் நினைவேந்தலும், அவரது புதல்வி மாதவி சிவலீலனின் 'இமைப்பொழுது' கவிதை நூல் வெளியீட்டு விழாவும் *11.11.2017* சனிக்கிழமை மாலை *4.30-8.30* மணிக்கு ஈலிங் கனகதுர்கை அம்மன் ஆலய மண்டபத்தில் (*5, CHAPEL ROAD, WEST EALING, LONDON W139AE*) மு.நித்தியானந்தன் தலைமையில் நடைபெறவிருக்கிறது. நூலகவியலாளர் என். செல்வராஜா நினைவுப் பேருரை நிகழ்த்துவார். ஜெயந்தி சுரேஷ், சு. திருப்பரங்குன்றன், கலாநிதி இரத்தினம் நித்தியானந்தன், கலாநிதி வி.அனந்தசயனன், விமல் குழந்தைவேல், என். கே.துளா, ரஜித்தா சாம், இளையதம்பி தயானந்தா ஆகியோர் விழாவில் பங்கு பற்றுகின்றனர். ●

# Central Bank Approved Money Transfer to

# Sri Lanka

FAST CASH

Since 1999

Special Offer

**Free**
**Money Transfer!**
**for New Customers - Register Today..**

## Why send with us?

- Central Bank approved official Exchange Rates
- Fast, Safe and Secure - *Same Day Bank Credits**
- *Your money sent from the UK and not credited locally*
- Established in 1999 & UK FCA Authorised

இலங்கைக்கான பணமாற்று சேவை நம்பிக்கை
நாணயமிக்க மிக துரிதமான சேவை
குறிப்பிட்ட அதே நாளில் பணத்தை அங்குள்ள
உங்களது எந்த வங்கிக் கணக்கிலும்
வைப்பு செய்ய கூடியதான வசதிகள்



**Our Local Branch**
**48 Mitcham Rd, Tooting**
**SW17 9NA**
2 minutes from Tooting Broadway, close to McDonald and next to Gala Bingo

**020 8886 4488**

www.efastcash.co.uk | 125-127 Bramley Rd, Oakwood N14 4UT | Open 7 Days

* T/C Apply

FASTCASH IS A FCA & HM CUSTOMS AND EXCISE / REGISTERED BUSINESS. MSB 12112819 / FCA -PI 540536

HNB · BOC · PEOPLE'S BANK · NSB · SampathBank · SEYLAN · NDB bank · Nations TrustBank · HSBC · PAN ASIA · Standard Chartered · Vardhana Bank · Amana Bank

**MODERN FAMILY APARTMENTS IN MT. LAVINIA,**
# SRI LANKA

- DOUBLE ROOMS & 1,2,3 BED APARTMENTS
- FULLY FURNISHED WITH AIR CON, LIFT & PARKING

UK BOOKINGS **MIKE** ON **07733 261 999**
VISIT OUR WEBSITE **www.stayatmount.com**

FROM **£25** PER DAY*





Now is the time to book your Flights or Holidays with us!

# CHECK OUR FARES FIRST, BEFORE YOU BOOK ELSEWHERE!

Great value Fares

**Oman Air - Colombo Special!**
**£395**

| | | | |
|---|---|---|---|
| Dubai | £295 | Bangkok | £365 |
| Delhi | £345 | Mumbai | £360 |
| New York | £380 | Hong Kong | £380 |
| Melbourne | £590 | Auckland | £595 |
| Nairobi | £360 | Lagos | £370 |

*Inclusive taxes / Seats are subject to availability

## Holiday Offer

Hotline; 07534 433111

**Pandanus Beach Resort and Spa**
Induruwa, Sri Lanka



£695pp Inc Flights
7 nights on all inclusive
London Heathrow

**Le Meridien Abu Dhabi**
Abu Dhabi City, Abu Dhabi



£660pp Inc Flights
5 nights on all inclusive

Flights, Tailor-made Holidays & Travel Deals

SriLankan · Emirates · QATAR AIRWAYS · KUWAIT AIRWAYS · ETIHAD · OMAN AIR · GULF AIR · JET AIRWAYS

Holiday Air
A Travel Experience to Remember

020 8440 0770 www.holidayair.com / 130 High Street, Barnet EN5 5XQ

சிவ தியாகராஜா

# பூதத்தம்பி கோட்டை

## ஊடலும் கூடலும்

இடி முழக்கம் போல ஆர்ப்பரித்த சங்கங்களும், வெண்கல மணிகள் குலுங்க ஒலித்த சேமக் கலங்களும், ஓங்கார நாதமிட்ட ஊது குழல்களும் ஜோதிநாதன் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டான் என்ற செய்தியை கோட்டை முன்னால் குழுமியிருந்த பணங்காமப் படைவீரர்களுக்கு அறிவித்தது. சேனா வீரர்களின் ஆர்ப்பாட்ட, ஆரவார ஒலி விண்ணை நிறைத்தது.

**"வாளின் மன்னன் வாழ்க!**
**வெற்றி மறவன் வாழ்க!**
**வீரத் தமிழன் வாழ்க!**
**வன்னி மண்ணே வாழ்க!"**

அவ்வொலி கேட்டதுதான் தாமதம், யானைப்படைகளை முடுக்கி, துதிக்கையில் ஏந்திய பெருமர உலக்கைகளைக் கொண்டு கோட்டைச் சுவர்களைத் தகர்க்கும்படி உத்தரவிட்டான் தளபதி பரதகம்பன்.

மலையோடு மலை முட்டுவது போல துதிக்கையில் தூக்கிய மர உலக்கைகளைக் கொண்டு கோட்டையின் புற மதிளை இடித்து நொறுக்கிய யானைக் கூட்டம் முன்னேறி கோட்டையின் சுவர்களை தகர்த்துப் பிளந்தன. கோட்டையின் சுவர்க் கற்கள் தகர்ந்து சுக்கு நூறாகத் திசையெல்லாம் பறந்தன. அவ்வேளங்கள் எழுப்பிய பிளிறல் பேரொலி விண்ணைப் பிளந்தது! மண்ணைத் தகர்த்தது! திக்குத் திகாந்தங்கள் நடுநடுங்கின!

இத்தனை அமளி துமளிக்குமிடையே கோட்டையைக் காத்து நின்ற டச்சுப் போர் வீரர்களிடமிருந்து ஒருவிதமான எதிர்ப்பும் வரவில்லை. சுவர் சுவராக, பாளம் பாளமாக, தூண் தூணாக, மரம் மரமாக கோட்டை இடிந்து தகர்ந்து விழுந்து கொண்டேயிருந்தது.

எரி அம்புத் தாக்குதலாலும், வெடி மருந்து வெடிப்பினாலும், நொறுங்கி விழுந்த கட்டிடக் கற்களின்

**இக்கதை நடைபெற்று 105 ஆண்டுகளின் பின்னர், 1770ம் ஆண்டில், அழிந்து போன பூநகரிக் கோட்டையை டச்சுக்காரர் திரும்பக் கட்டியெழுப்பினார்கள்.**

கீழ் அகப்பட்டதாலும் பலத்த சேதத்திற்கு உள்ளான டச்சு வீரர்களால் எந்தவிதமான எதிர்ப்பையும் காட்ட முடியவில்லை. சரணாகதி கேட்டுக் கூட எந்த வீரனும் வெளியே வரவில்லை.

பூநகரிக் கோட்டை முற்றுகை பணங்காம அரசன் குமார வன்னியனுக்கு எதிர்பாராத அபார வெற்றியாக அமைந்தது. ஜோதி நாதனை விடுவித்தது மாத்திரமல்லாமல் வன்னி மண்ணில் டச்சுக்காரர் சொந்தம் கொண்டாடிய ஒரேயொரு அரச நிறுவனத்தையும் இல்லாமல் ஒழித்தது.

இளைஞன் ஜோதிநாதன் தனது தாய் மாமனும், பணங்காம அரசனுமான குமார வன்னியனுடன், வன்னிக்காட்டு வழியாக இரு குதிரைகளில் சென்று கொண்டிருந்தான். பரிவாரங்களையெல்லாம் பின்னால் வருமாறு பணித்துவிட்டு அவர்கள் முன்னால் வந்து கொண்டிருந்தார்கள்.

அவர்கள் சென்ற மதிய நேரத்தில் அகோர வெய்யில் அடித்துக் கொண்டிருந்தது. வாணலியில் கடலை வறுக்கிற மாதிரி வெய்யில் உடலைப் போட்டு வறுத்தது. சீதளத் தென்றல் வீச வேண்டிய காட்டுப் பாதையில் காற்று கனகக் கனலாக அடித்தது. அவர்களின் உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது.




"எதற்காக மாமா ஒன்றரை ஆண்டுகள் என்னைச் சிறையில் இருக்க விட்டீர்கள், இத்தாக்குதலை இதற்கு முன்னரே நடத்தி என்னை விடுவித்திருக்கலாமே?" எனக் கேட்டான் ஜோதிநாதன்.

"கடந்த ஒன்றரை ஆண்டுக்காலமாக இங்கே கடும் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. மழையைக் கண்டு மாதங்கள் பலவாகிவிட்டன. ஆயிரக்கணக்கான சேனா வீரர்கள் இருந்த நமது இராணுவத்தில் இப்போது இருநூறு வீரர்களே இருக்கிறார்கள். அவர்களுக்கு உணவு கொடுத்துப் பராமரிக்க இயலாத காரணத்தால் மற்றவர்களை அவரவர் வீடுகளுக்கு அனுப்பிவிட்டோம். தானியக் களஞ்சியம் வற்றிவிட்டது. அரண்மனைக்குத் தேவையான அரிசியை இப்போது அநுராதபுரத்திலிருந்து தருவிக்கிறோம்."

"இப்போது கிராமங்களிலிருந்து தன்னிச்சையாகச் சேர்த்துக் கொண்ட இளைஞர்களின் உதவியுடனே இத்தாக்குதலை மேற்கொண்டோம். மேலும், டச்சு வீரர்களில் பலர் தற்போது யாழ் நகருக்குப் போய் விட்ட சமயத்தில் இத்தாக்குதலை மேற்கொண்ட படியால் பூநகரிக் கோட்டையை சுலபமாகக் கைப்பற்றி உன்னை விடுவிக்க முடிந்தது." என்றான் குமார வன்னியன்.

"என்னைச் சிறையில் காவல் காத்த அந்த பீட்டர் சில்வாவுக்கு என்ன நடந்தது?"

"நீ கேட்டுக் கொண்டபடி ஒரு படகை வாடகைக்கு அமர்த்தி அவனை யாழ்நகருக்கு அனுப்பிவிட்டோம். பூநகரிக் கோட்டையிலிருந்து தப்பிச் சென்ற டச்வீரன் அவன் ஒருவன்தான், வேறொருவரும் அங்கிருந்து தப்பிச் சென்றதாகத் தெரியவில்லை. நிற்க, ஏன் அந்த பீட்டருக்கு இத்தனை சலுகை?"

"நான் சிறைக் கைதியாக இருந்த போது அவன் என்னைத் தன் எதிரியாகப் பார்த்ததே இல்லை. எனக்குத் தரும் உணவில் என்றுமே வஞ்சனை செய்ததில்லை. மத்தியானத்திலும் இரவிலும் கோப்பை நிறைய, வழிய வழிய உணவு கொண்டு வந்து தருவான். சில சமயம் பலகாரங்கள், 'கேக்' என்பனவும் கிடைக்கும். ஒரு குற்றமும் செய்யாத என்னை வேண்டுமென்றே அடைத்து வைத்திருந்ததை எல்லோருமே அறிவார்கள்" என்றான் ஜோதிநாதன்.

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் இந்த வழியால் அவன் வந்த போது பச்சைப் பசேலென்றிருந்த பெருங்காடெல்லாம் தீப்பற்றி எரிந்து போன மாதிரி கருகிக் கிடந்தன. பச்சை மலைகளும், பசுமை படிந்த குன்றுகளும் பாறைக் கற்களாகவும், பரப்பிய கற்குவியல்களாகவும் காட்சி தந்தன. அவற்றின் சிகரங்களிலிருந்து வெண்பனிச் சாரல்களாக விழுந்தோடிய அருவிகளும், தாளகதி பிசகாத சங்கீத லயத்துடன் சலசலத்தோடிய நீரோடைகளும் வற்றி வரண்டு வெண்மணல் படிந்திருந்தன. அலையும், சுழியும், நொப்பும், நுரையுமாகப் பாய்ந்தோடிய பேராறுகள் நீர் வற்றிச் சிற்றோடைகளாக ஓடிக்கொண்டிருந்தன. குமுத மலர்கள் பரந்து படர்ந்த குளங்களும், தாமரை இலைத் தட்டுகள் மிதந்த தடாகங்களும், கொழுமலர்க் கொடிகள் பந்தலிட்ட வாவிகளும் வண்டல் தட்டி வரண்டு கிடந்தன. தோண்டிய கிணறுகள் வெய்யோனின் வெப்ப எரிப்பால் நீர் வற்றி வெறுமையாகக் கிடந்தன.

தென்னையும் பனையும், வாழையும் கமுகும் நார் நாராகக் கிழிந்து, சருகுகளாகக் கருண்டு, உலர்ந்த மட்டைகளுடன் உருக்குலைந்து கிடந்தன. வயல்வெளிகளில் வளர்ந்து காய்ந்த நெற்பயிர்கள் வைக்கோல் கற்றைகளாக விழுந்து கிடந்தன. பச்சைத் தழையையும், பசும் புல்லையும் காணாத ஆடுகளும் மாடுகளும் எலும்பும் தோலுமாய் நலிந்து கிடந்தன. பச்சை வயல்களாகவும், பசுமை படிந்த சோலைகளாகவும் பூரித்திருந்த பூமியெல்லாம் அங்கே பொட்டல் வெளிகளாகக் காட்சி தந்தன. வட நாட்டின் உணவுக் களஞ்சியம் என அழைக்கப்பட்ட வன்னிப் பிரதேசம்

அன்று உருவிழந்து கிடந்தது.

"நாட்டில் நீதியும் நியாயமும் அற்றுப் போகும் போது இயற்கையே நம்மைக் கைவிட்டு விடுகிறது" என்றான் குமாரவன்னியன்.

"நம்மை ஆக்கிரமித்த அந்நியர்கள் இழைக்கும் கொடுமைகளுக்கான தண்டனையை நாம் ஏன் அனுபவிக்க வேண்டும்" எனப் பதிலளித்த ஜோதிநாதன், "அரண்மனையில் உணவுத் தட்டுப்பாட்டை எப்படிச் சமாளிக்கிறீர்கள்?" எனக் கேட்டான்.

"தானியக் களஞ்சியம் என்றைக்கோ வெறுமையாகிவிட்டது. தற்போது அநுராதபுரத்திலிருந்து அரிசி தருவிக்கிறோம். பாலியாறு இன்னும் முற்றாக வற்றிவிடவில்லை, நீரைத் தேக்கி ஒரு குளம் அமைத்திருக்கிறோம். அதைக் கொண்டு அண்டைய வயற்காணிகளில் காய்கறித்தோட்டம் செய்ய முடிகிறது. அரண்மனைக் கிணற்றை மேலும் ஆழமாக்கி குளிப்பதற்கும் குடிப்பதற்கும் நீர் பெறுகிறோம். கால் நடைகள் குளத்து நீரை உபயோகித்து வருகின்றன. இந்த நிலையில் இப்படி நீண்ட நாட்களுக்குத் தாக்குப் பிடிக்க முடியாது, இன்னும் இரண்டொரு மாதங்களுக்குள் மழை வராது விட்டால் நாம் இங்கிருந்து இடம் பெயர வேண்டியதுதான்" என்று விரக்தியுடன் பதிலளித்தான் குமாரவன்னியன்.

மஞ்சள் வெய்யில் மெல்ல மெல்ல மங்கிக் கொண்டிருந்த பொன்னந்தி மாலைப் பொழுதின் மயக்கம் தரும் பிரகாசத்தில் பனங்காம அரண்மனை பொன் மாளிகையாகக் காட்சியளித்தது. அரண்மனையின் உள்ளிருந்து யாழின் ஜீவநாதமும், மத்தள ஒலியும், தேனாகப் பிலிற்றும் ஒரு பெண்ணின் கன்னல் குரலும் மென்மையாக வீசிய காற்றிலே மிதந்து வந்தன. நாட்டில் தலைவிரித்தாடிய பஞ்சம் அரண்மனையின் கலை வாழ்வை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை என்பதை அந்த கீதம் எடுத்துரைத்தது.

அவர்கள் ஆரோகணித்து வந்த குதிரைகள் அரண்மனை வாயிலை அடைந்த போது-


"ஜோதி, உனக்கு அவசரமாக ஏதாவது தேவை உண்டா?" என வினாவினார் குமாரவன்னியன்.

"அவசரமாக முதலில் ஒரு குளிப்புப் போட வேண்டும், இந்தத் தாடி மீசையை வழித்தெறிய வேண்டும். தலையில் குளித்துப் பல நாட்களாயின", முகத்தைச் சுளித்தான் ஜோதிநாதன்.

"உள்ளே உனக்காக வாசனைத் திரவியங்கள் தூவிய வெந்நீர்த் தொட்டியை தயாராக வைத்திருப்பார்கள். மற்றும் எல்லாவித வசதிகளும் செய்துதரும்படி ஆணையிட்டிருக்கிறேன். இரவு உணவு கொண்டபின் நன்றாக ஓய்வெடுத்துக் கொள். நாளைக் காலை உன்னைச் சந்திக்கிறேன். நான் அவசரமாகப் பாலமோட்டை சென்று வரவேண்டிய ஒரு தேவை இருக்கிறது" என்ற குமார வன்னியன் தனது குதிரையைத் திருப்பி கிழக்குத் திசை நோக்கிப் பயணித்தான்.

அன்றெல்லாம் சந்திரவல்லி தன் தோழி அனுரதியின் துணையோடு தன்னை அலங்காரம் செய்வதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். ஜோதிநாதன் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு அன்று மாலை அரண்மனைக்கு வந்து சேர்ந்துவிடுவான் என்ற செய்தியை ஏற்கனவே ஒரு குதிரைவீரன் கொண்டு வந்து தெரிவித்ததிலிருந்து அவளது உள்ளம் இன்பக் கிளர்ச்சியில் மூழ்கியிருந்தது, ஆரவாரமாகச் செயற்பட்டாள். இனிமேல் அவனை உயிருடன் மீண்டும் காண்பேனோ என்னவோ என அங்கலாய்த்துக் கொண்டிருந்த அவளுக்கு அவன் திரும்பி வருகிறான் என்ற செய்தி ஆனந்தப் பரவசம் ஊட்டியது.

சந்தனமும் பன்னீரும் கலந்த வெந்நீரில் நீராடி அகிற்புகையும், சாம்பிராணிப் புகையும் கொண்டு தலை உலர்த்தி ஆடை ஆபரணாதிகள் அணிய ஆரம்பித்தாள். முத்தும், வைரமும் மாறி மாறி வைத்துக் கட்டப்பட்டிருந்த பொன் வளையல்கள் வலது கரத்தை அலங்கரித்தன. நவரத்தினங்களின் முகப்போடு கோமேதகக் கற்கள் பதித்த ஒட்டியாணம் குறுகலான அவளது இடையை இன்னும் இறுகலாக ஒட்டிப் பிடித்துக் கொண்டிருந்தது. முன்னுச்சியில் தொங்கிக் கொண்டிருந்த வைரச்சுட்டி தூண்டா விளக்கின் ஒளியில் பச்சை, மஞ்சள், நீலம், சிவப்பு எனப் பலவர்ண ஒளிகளை உமிழ்ந்து கொண்டிருந்தது. அவளது நீண்ட குழல் பின்னிக் கட்டப்பட்டு, மாணிக்கப் பரல்கள் பதித்த திருகுப் பூவினால்




நீங்கள் திரும்பி வருகிறீர்கள் என
அறிந்ததும் நானடைந்த சந்தோஷத்திற்கு
அளவே இல்லை. என்னைப் பிரமாதமாக
அலங்கரித்து, எனது உள்ளத்தைக்
கொள்ளை கொண்ட உங்களுக்கு எனது
உடல், பொருள், ஆவி அனைத்தையும்
அர்ப்பணிக்கத் தயாராகக் காத்திருந்த
என்னை இப்படிப் பரிசோதிக்கிறீர்களே!


அழுத்தப்பட்டிருந்தது. அவளது பின்னல் கூட்டில் செருகப்பட்டிருந்த மல்லிகை, முல்லை மலர்கள் கரிய கேசப் பின்னலில் வெண்முத்துச் சரங்களாக மிளிர்ந்தன. செவ்விளநீர்க் குரும்பைகள் போல மதர்ப்பாக நின்ற மார்பகங்களை இறுக்கிய கச்சை அவற்றை அடக்கவும் முடியாமல், மூடவும் முடியாமல், அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தது. இடையிலே அணிந்திருந்த பட்டுச் சேலையோ வானவில்லின் வர்ணங்களைப் பரப்பி, வழவழப்பான அவளது அங்கங்களைத் தழுவிச் சென்று, இயற்கையாக அமைந்த அவளது எழிலை ஆயிரம் மடங்காக அதிகரிக்கச் செய்தது.

சப்ரகூட மஞ்சத்தில் அழகு தேவதையாக அமர்ந்திருந்த சந்திரவல்லியை நோக்கி ஏறுநடை போட்டு வந்தான் ஜோதிநாதன். கழுத்துவரை நீண்ட, வாரிவிடப்பட்டு வனப்புறப்படிந்த கருங்கேசம், விரிந்து வளைந்த விசாலமான நெற்றியில் துலங்கும் சந்தனப் பொட்டு, அறிவின் வரைகோடுகளாக விளங்கும் நீண்ட புருவங்கள், அன்பும் அருளும் தேங்கி நிற்கும் கண்கள், நிதானத்தைச் சுமந்த நேரான நாசி, பொற்குழம்பால் பூசி மொழுகிய கன்னங்கள், உறுதியான அறுகைக் கழுத்தை அலங்கரிக்கும் முத்தாரம், வச்சிர விரிமார்பை மூடிய நீலப்பட்டு மேல் துண்டு, மூடிய மேல் துண்டால் முழுவதும் மறைக்க முடியாத, உருண்டு திரண்ட உயர்திண் தோள்கள், நீண்டு கிடக்கும் நெடுங்கரங்கள், உள்ளடங்கிக் குறுகிய வேங்கை வயிறு, இடையிலணிந்த செம்பவளப் பட்டாடையை இறுக்கி நிற்கும் இடுப்புச் சால்வை.

மெல்லிய சரீரத்துடன் வாசல் நிலைப்படி தலையை இடிக்கும் உயரமாக உள்ளே வந்த ஜோதிநாதனின் முகத்தில் சொட்டிய ராஜகளையும், பார்வையிலிருந்த கம்பீரமும் இவன் மனிதர்களை ஆளப்பிறந்தவனே ஒழிய யாருக்கும் அடங்கும் சுபாவமுள்ளவனல்ல என்பதை எடுத்துக் காட்டின. ஒன்றரை வருட காலச் சிறைவாசம் அவன் நடந்து வந்த தோரணையையோ, தனிமனிதப் பண்பியலையோ எள்ளளவும் குறைக்கவில்லை. அத்தோரணையோ, அவன் மேலிருந்த அளவற்ற காதலோ அவளை அறியாமல் அவளை எழுந்து நிற்கச் செய்தன.

"உட்காருங்கள் இளவரசி, இந்த அடிமையை இந்நாட்டு இளவரசி எழுந்து நின்று உபசரிக்க வேண்டியதில்லை" என்றான் அவன்.

"என்ன ஜோதி இப்படிப் பேசுகிறீர்கள். உங்களை அடிமை என்று எவர் சொன்னார்கள்? நீங்கள் எனது மாமியாரின் மகன்- எனது அத்தான்- எனது உள்ளம் கவர்ந்தவர்- என்னைக் காதலிப்பவர்- என்னைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறவர்- இந்த வன்னி மண்ணின் வருங்கால அரசர்" என்று அடுக்கிக் கொண்டு போனாள் அவள்.

"அப்படியா? இப்படியெல்லாம் யார் உங்களுக்குச் சொன்னார்கள் இளவரசி?"

"எதற்காக இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்? உங்களுக்கு என்ன ஆயிற்று? ஒன்றரை ஆண்டுச் சிறைவாசம் உங்களை இப்படி மாற்றிவிட்டதா?

இத்தனை ஆண்டுகளாக நீ, நான், எனது, உனது, சந்து, சந்திரா என்றெல்லாம் என்னை ஒருமையில் அழைத்த நீங்கள் இன்று வந்ததும் வராததுமாக என்னை 'இளவரசி,' 'இளவரசி' என்று அறிமுகமில்லாத மூன்றாம் ஆளோடு பேசுவது போலப் பேசுகிறீர்களே!

உங்களை இனிமேல் காணுவேனோ, மாட்டேனோ என்று நான் அழாத நாளில்லை; புலம்பாத நேரமில்லை!

நீங்கள் திரும்பி வருகிறீர்கள் என அறிந்ததும் நானடைந்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை. என்னைப் பிரமாதமாக அலங்கரித்து, எனது உள்ளத்தைக் கொள்ளை கொண்ட உங்களுக்கு எனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்கத் தயாராகக் காத்திருந்த என்னை இப்படிப் பரிசோதிக்கிறீர்களே!" என்ற அவளது கண்களில் நீர் ததும்பியது.

"சந்திரா, சந்திரா, சந்திரா! என்னுயிர்ச் சந்திரா! இந்த ஒன்றரை ஆண்டுகளில் உன்னை நினைக்காத நாளே இல்லை! உன்னைக் காணாமலேயே இறந்து விடுவேனோ என்று பயந்தேன். இன்று உன்னைக் காணப் போகிறேனே என்ற ஆனந்தத்திலேயே இப்போது ஓடி ஓடி உன்னைப் பார்க்க வந்திருக்கிறேன். உன்னைப் பரிசோதிக்கவே இப்படி நடந்து கொண்டேன், என்னை மன்னித்துவிடு" என்றவன் அவளைக் கட்டி அணைத்துக் கொண்டான்.

இரும்பைக் கவரும் காந்தம் போல அவனது கண்களைக் கவர்ந்து நின்ற சந்திரவல்லியின் கருவிழிகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள இயலாதவனாய்- அவளது அந்தக் காந்தர்வப் பார்வையிலேயே தனது உணர்ச்சிகளைப் பறிகொடுத்துவிட்ட ஜோதிநாதன், அணைத்திருந்த அவளது தேகத்தின் கிளு கிளுப்பான உரசலால் புளகாங்கித்தும்- நீராடி வந்த அவளது உடலிலிருந்து கமழ்ந்து கொண்டிருந்த ஸ்நானப் பொடிகளின் சுகந்த நெடியில் மயங்கியும்- அவளது கழுத்திலிருந்து தொங்கி ஊஞ்சலாடிய நகைகள் உராய்ந்ததால் ஏற்பட்ட இன்ப அனுபவத்தில் கிறங்கியும் அத்தனை இன்ப அநுபவங்களும் திரண்டு அவனை எங்கோ ஒரு இன்ப உலகத்திற்கு அழைத்துச் செல்ல-

அவள் தன்னை அவனது அணைப்பிலிருந்து விடுவித்துக் கொண்டு- "உன்னை இனிமேல் மன்னிக்கப் போவதுமில்லை; இங்கிருந்து தப்பிப் போக விடப்போவதுமில்லை; இது எனது இதயச் சிறை; இதைத் தகர்க்க எந்தச் சேனையாலும் இயலாது" எனக் கூறிக்கொண்டே அவனைத் தனது சயன அறைக்கு இழுத்துச் சென்றாள் சந்திரவல்லி.

(தொடரும்)



## அரசியல் அறிவிப்புக்கு முதல் ரஜினி இமயமலை பயணம்!

பா.ரஞ்சித் இயக்கும் 'காலா' படப்பிடிக்குச் செல்வதற்கு முன்பு, போருக்குத் தயாராகுங்கள் என்று ரசிகர்களிடம் கேட்டுக் கொண்டார் ரஜினி. அதில் இருந்து அரசியல் வட்டாரங்களில் தலைப்புச் செய்தியாகிவிட்டார். அதோடு, ரஜினியின் இந்த அறிவிப்புக்குப் பிறகு 'கமலும் அரசியலுக்கு வருவதற்கான சூழல் ஏற்பட்டிருக்கிறது. இதனால், எதிர்கால அரசியலில் ரஜினி, கமல் ஆகிய இருவரும் போட்டியாளர்களாகிவிடுவார்கள் என்று தெரிகிறது.

இதனிடையே எப்போதும் தான் ஒரு முக்கிய முடிவு எடுப்பதற்கு முன்பு இமயமலை சென்று பாபாவை வழிபடுவது ரஜினி வழக்கம். அந்த வகையில், 'காலா' படப்பிடிப்பு முடிந்ததும், இமயமலைக்குச் செல்கிறாராம் ரஜினி. அதன் பிறகு அரசியல் பிரவேசம் குறித்த முக்கிய அறிவிப்பை வெளியிடுவாராம் ரஜினி.

## வடசென்னையில் மாறுபட்ட நரைமுடியுள்ள தனுஷ்!

கதைகளுக்கு ஏற்பத் தன்னை முழுமையாக மாற்றிக் கொண்டு வருபவர் தனுஷ். அந்த வகையில், மாரி, கொடி உள்ளிட்ட படங்களில் தாடி வைத்து நடித்திருந்த அவர் தற்போது வெற்றிமாறன் இயக்கத்தில் நடித்து வரும் 'வட சென்னை' படத்திலும் தாடி வைத்த 'கெட்டப்பில்' நடித்துக் கொண்டு இருக்கிறார். இந்தப் படம் மூன்று பாகங்களாக உருவாகிறது.

முக்கியமாக இதுவரை தனுஷ் நடித்ததில் இருந்து மாறுபட்ட ஒரு வேடம் என்பதால், அந்தக் கதாபாத்திரத்துக்காகத் தனுஷை தாடி 'கெட்டப்பில்' நடிக்க வைத்து வரும் வெற்றிமாறன், தாடியில் நரைமுடிகளையும் காண்பிக்கிறாராம். ஆக, இதுவரை பார்க்காத ஓரளவு முதிர்ச்சியான ரோலில் நடிக்கும் தனுஷைப் பார்க்கும் போது அஜீத்தின் 'சால்ட் அண்ட் பெப்பர்' கெட்டப்பை நினைவுபடுத்துகிறதாம்.





## பிரபாஸ்-அனுஷ்கா திருமண நிச்சியம்!

நடிகை அனுஷ்காவுக்கும், நடிகர் பிரபாசுக்கும் வரும் டிசம்பர் மாதம் நிச்சியபார்த்தம் நடக்க இருக்கிறது.

'பாகுபலி', 'பாகுபலி-2' படங்களில் ஜோடியாக நடித்த போது பிரபாஸ்-அனுஷ்கா இடையே காதல் ஏற்பட்டது. ஆனால் காதல் குறித்து இருவரும் வாய் திறக்கவில்லை.

அனுஷ்கா வீட்டில் அவருக்கு மாப்பிள்ளை தேடினார்கள். ஆனால் நிஜத்தில் பிரபாஸ்-அனுஷ்கா ஒன்று சேர வேண்டும் என்று ரசிகர்கள் விரும்பினார்கள்.

இப்போது காதல் அம்பலத்துக்கு வரத் தொடங்கிவிட்டது. இரு குடும்பத்தாரும் பேசி, டிசம்பரில் நிச்சியார்த்தத்துக்கு திகதி குறித்துள்ளார்கள்.

திருமணம் பற்றி பிரபாஸிடம் கேட்டால், 'அது என் தனிப்பட்ட விஷயம். திருமணம் நடக்கும் போது சொல்கிறேன்' என்கிறார். அனுஷ்கா உடல் எடையைக் குறைத்து வருகிறார். அவர் ஜிம்மில் நேரத்தை செலவு செய்கிறார். தன் காதலர் பிரபாசுக்காக!

# என் சந்தோஷத்திற்கு காரணம் இவளே!

## காதல் பற்றி சிலிர்க்கும் ஜெயம் ரவி

எங்களுடைய காதல் திருமணம் என்பதால் முதலில் ஆர்த்தி எனக்குத் தோழி, பிறகுதான் மனைவி. திருமணத்துக்கு முன்பு வரை பொறுப்பில்லாமல் இருந்தேன். திருமணத்துக்குப் பின்புதான் பொறுப்பு வந்தது. அதற்குக் காரணம் ஆர்த்திதான்.

ஸ்கொட்லாந்து நாட்டில் சர்வதேச மேலாண்மை படித்தவர். அந்தப் படிப்பு அவருக்குப் பல விதத்தில் பயனுள்ளதாக இருந்தாலும், என்னை நிர்வகிக்கவும் பயன்படுகிறது. காரணம் அது மிகவும் கடினமான' வேலை.

என் சமூக வலைத்தளம், அலுவலக வேலை உள்ளிட்டவற்றை அவரே நிர்வகித்து வருகிறார். அதனால்தான் படப்பிடிப்பில் எந்தவித டென்ஷனும் இல்லாமல் என்னால் பணிபுரிய முடிகிறது.

வீட்டில் சந்தோஷமாக இருந்தால் மட்டுமே நான் நிம்மதியாகப் பணிபுரிவேன். அந்த சந்தோஷம் என் வீட்டில் எப்போதும் இருப்பதற்கு என் மனைவிதான் காரணம்.

என்னால் சென்னையில் அதிகமாகச் சுற்ற முடியாது. அதனால் அடிக்கடி வெளிநாட்டுக்கு அழைத்துச் சென்றுவிடுவாள். எப்போதுமே நான் மனநிம்மதியுடன் இருக்க வேண்டும் என விரும்புவாள்.

எனது ஒவ்வொரு பிறந்தநாளுக்கும் சென்னையில் இருக்க மாட்டேன். இந்த ஆண்டுகூட எனது பிறந்தநாளுக்கு அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்றுவிட்டாள்.

ஆர்த்திக்குப் பெரிதாக நான் எதுவுமே ஆச்சரியம் அளித்ததில்லை. நகைகள் ஏதாவது வாங்கிக் கொடுப்பேன். அதுவுமே அவரது மனதுக்குப் பிடித்தபடி இருக்குமா என்று தெரியாது. ஆனால், ஆர்த்தி எனக்கு நிறைய ஆச்சரியங்களைக் கொடுத்திருக்கிறாள்.

கடந்த ஆண்டு என் பிறந்தநாளுக்கு எங்கேயும் செல்ல வேண்டாம் எனச் சொல்லிவிட்டேன். அன்று ஒரு கீ-செயின் கொடுத்தாள். "சூப்பரா இருக்கு, தேங்க்ஸ்" என்று சொன்னேன். "கீழே போய்ப் பார்" என்றாள். "நான் ரொம்ப நாளாக வாங்க வேண்டும் என்று ஆசைப்பட்ட *Harley Davidson* பைக் நின்று கொண்டிருந்தது. அதைப் பார்த்தவுடன் அவ்வளவு சந்தோஷப்பட்டேன்!

'எங்கேயும் காதல்' படத்துக்காக வெளிநாட்டுப் படப்பிடிப்பில் இருந்தேன். அப்போது 20 நாட்கள் கழித்துத்தான் ஆர்த்திக்குக் குழந்தை பிறக்கும் என்றார்கள். அதற்குத் தகுந்தபடி திட்டமிட்டு 15 நாட்களுக்கு முன்பு சென்னையில் இருக்க முடிவு செய்திருந்தேன். ஆனால், முன்னதாகவே பிரசவ வலி வந்துவிட்டது.

அவசரமாக டிக்கெட் போட்டு விமானத்தில் பறந்து வருவதற்குள் ஆரவ் பிறந்துவிட்டான். விமானத்தில் இருக்கும் போதே செய்தியும் தெரிந்துவிட்டதால். குழந்தையைக் காண வேண்டும் என்ற ஆவலோடு வந்தேன். அன்று ஆர்த்தியின் முகத்தில் அம்மாவாகிவிட்ட தெய்வீகக் களையைப் பார்த்தேன். அந்த நாளை மறக்கவே முடியாது.

ஆர்த்தி, எளிதாக மற்றவர்களோடு நண்பராகிவிடுவாள். ஆனால், நான் அப்படிக் கிடையாது 'இவர்களிடம்







பேசலாமா, சரியாக இருக்குமா, நம்பிக்கையானவரா' என்று யோசிப்பேன்.

எல்லோரையும் இவர் சரியானவரா என்று யோசிக்கத் தொடங்கினால், பாதி வாழ்க்கை அதிலேயே கழிந்துவிடும் என்று சொல்லி மனிதர்களிடம் எளிதாக நெருங்குவது எப்படி என்று சொல்லிக் கொடுத்தவள் ஆர்த்தி. அவரது ஆங்கில எழுத்துத் திறன் ரொம்பப் பிடிக்கும்.

அவள் மூலம்தான் என் ஆங்கில அறிவைச் செழுமைப்படுத்திக் கொண்டேன். வாழ்க்கையை எப்படிக் கையாள வேண்டும் என்றும் அவளிடம் கற்றுக் கொண்டேன்.

என் குடும்பத்தையும் அவரது குடும்பத்தையும் அவ்வளவு அழகாகப் பார்த்துக் கொள்வாள். யாருக்காவது ஏதாவது ஒரு பிரச்சினை என்றால், அவர்களுக்காகக் கடவுளிடம் வேண்டிக் கொள்வதுடன் ஒன்றுக்குப் பத்து மருத்துவர்களிடம் பேசி என்ன பிரச்சினை என்று கேட்டுத் தெரிந்து கொள்வாள்.

எப்படியாவது மற்றவர்களுக்கு நல்லது செய்துவிட வேண்டும் என்ற முனைப்பிலேயே இருப்பாள். அந்த எண்ணத்தால் பலமுறை நெகிழ்ந்திருக்கிறேன். காரில் சென்று கொண்டிருக்கும் போது ஆம்புலன்ஸ் சென்றால் கூட, அதில் இருப்பவர்களுக்காகக் கடவுளை வேண்டுவாள்.


அனைத்துக் குடும்பங்களிலும் இருப்பது போல நாங்கள் இருவரும் சண்டையும் போடுவோம். என்ன சண்டை போட்டாலும் அன்றே அதைச் சரி செய்துவிட வேண்டும் என்று எங்களுக்குள் ஒரு விதியுள்ளது. அதுதான் எங்கள் மகிழ்வான வாழ்க்கையின் முக்கிய விதி!

## சந்தானத்துக்கு வந்த சோதனை!



நகைச்சுவை நடிகர் சந்தானத்துக்கு இப்படி ஒரு சோதனையா? மதுரைக்கு வந்த சோதனை! அவரது 'சர்வர் சுந்தரம்' செம்ரெம்பரில் வெளிவருவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், இழுபடுகிறது! அவருடைய 'சக்க போடு ராஜா', 'ஓடி ஓடி உழைக்கணும்' படங்களும், மற்றும் சில படங்களும் இறுதிக்கட்டத்தை அடைந்தாலும், அதற்கு மேல் அசையாது நிற்கின்றனவாம்!

திருமண மண்டபத்துக்கு மூன்று கோடி கொடுத்து அதனால் ஏமாற்றப்பட்ட சந்தானம், வழக்கறிஞர் சண்முக சுந்தரம் என்பவரை அடித்துத் தாக்கிக் காயப்படுத்தியதாக கூறி அவரை பொலிஸ் தேடுகிறது. சந்தானம் தலைமறைவாகிவிட்டதால், படத்தயாரிப்பாளர்கள் தடுமாறுகிறார்கள்! பார்ப்போம் என்ன நடக்கிறதென்று.



## ஆடையைப் பார்த்து அசந்து போன எமி!

லைக்காவின் பிரமாண்டமான தயாரிப்பான '2.0' படம் அடுத்தாண்டு வெளிவரவுள்ளது. ஷங்கரின் இயக்கத்தில், ரஜினி, அக்ஷய்குமார் நடித்துள்ளனர். எமிஜாக்சன் நாயகியாக நடித்திருக்கிறார். இன்னும் சில பாடல் காட்சிகள் எடுக்கவுள்ளதாம். இதற்காக நடிகை எமிக்காக பிரத்தியேக உடைகள் தயாரிக்கப்பட்டுள்ளது. இதை அணிந்து சரி பார்ப்பதற்காக எமி சென்னைக்குப் பறந்து வந்தார். ஆடைகளைப் பார்த்து விட்டு, "வாவ், எல்லாமே வேற லெவல்" என்றாராம்.

ஷங்கரின் படம் மட்டுமல்ல, லைக்காவும் சேர்ந்து கொண்டால் பாடல் காட்சிகள் அழகாக இருக்கும் என்று சொல்ல வேண்டுமா?

வெள்ளைத் தோலுக்குள் இந்த கவர்ச்சி ஆடைகள் நுழைந்து கொண்டு, ரசிகர்களை பாடாய்ப்படுத்தப் போகிறது!

# தங்கள் பிள்ளை என தனுஷை விடாமல் துரத்தும் கதிரேசன்

மதுரை. மேலூரைச் சேர்ந்தவர் கதிரேசன் (66 வயது) இவரது மனைவி மீனாட்சி. இவர்களின் மகன் கலைச்செல்வன். 10ம் வகுப்புப் படிக்கும் போது மாயமானார். கலைச்செல்வன்தான் நடிகர் தனுஷ் எனவும், அவரிடமிருந்து பராமரிப்புத் தொகை கேட்டும், மேலூர் நீதிமன்றத்தில் கதிரேசன் வழக்குத் தொடர்ந்தார்.

தான் கதிரேசன் மகன் இல்லை என்பதற்கான ஆவணங்களை தனுஷ் தாக்கல் செய்து, இவ்வழக்கை ரத்துச் செய்யக் கோரினார். நீதிமன்றம் தனுஷ் கோரிக்கையை ஏற்று ரத்துச் செய்தது.

இப்போது மீண்டும் கதிரேசன் தனுஷ் தாக்கல் செய்த ஆவணங்கள் போலி என்று மதுரை பொலிஸில் புகார் ஒன்றை அளித்துள்ளார்.

தனுஷ் தாக்கல் செய்த அனைத்து ஆவணங்களும் பொய் கையெழுத்துடன் தாக்கல் செய்யப்பட்டதாக கதிரேசன் தெரிவித்துள்ளார்.

தனுஷ் 1983 ஜூலை 28இல் பிறந்ததாக தகவல் கொடுத்து ஆதார் அட்டை பெற்று உள்ளார் என்றும், தன் மகனுக்கு 10ம் வகுப்பு பள்ளிச் சான்றிதழில் குறிப்பிட்ட



மச்சத்தை தனுஷ் தன் உடம்பிலிருந்து லேசர் சிகிச்சை மூலம் அகற்றியுள்ளார் என்றும் கதிரேசன் தன் புகாரில் தெரிவித்திருக்கிறார்.

இதற்கு மதுரை மருத்துவக் கல்லூரி டீன் நீதிமன்றத்திலேயே சான்று அளித்துள்ளார். எனவே தனுஷ் மீது வழக்குப் பதிவு செய்து, ஆவணங்களைப் பார்வையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கதிரேசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கேள்வி கேட்ட சிவகார்த்தி! மிரட்டினார் நயன்தாரா



தன்னைக் கலாய்த்த சிவகார்த்திகேயனை நயன்தாரா மிரட்டியுள்ளார்.

மோகன்ராஜா இயக்கத்தில் சிவகார்த்திகேயன், நயன்தாரா ஜோடியாக நடித்து வரும் படம் 'வேலைக்காரன்' இந்தப் படத்தில் ஹீரோவுக்கு மட்டுமல்ல, ஹீரோயினுக்கும் முக்கியத்துவம் அதிகம்.

இந்நிலையில் நயன்தாரா டி.வி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டார்.

நயன் கலந்து கொண்ட நிகழ்ச்சிக்கு சிவகார்த்திகேயன் போன் பேசினார். 'நானும் ரவுடிதான் படத்தில் மட்டும் நல்லா நடித்திருக்கிறீர்களே!' என்று நயனிடம் கேட்டார்.

சிவகார்த்திகேயன் கேள்வி கேட்டதும், சிரித்தார் நயன். 'சிவா! இன்னும் 'வேலைக்காரன்' படத்தின் சூட்டிங் முடியல. ஞாபகமிருக்கட்டும்! என்று செல்லமாக மிரட்டல் விடுத்தார் நயன்.

## 'லிப் டூ லிப்' கொடுத்து நடிக்க ரெடி! – வித்யாபாலன் அதிரடி



கதைக்குத் தேவைப்பட்டால், பெண்களுடன் உறவு கொள்ளும் லெஸ்பியன் காட்சிகளிலும் நடிக்க தயார் என்று நடிகை வித்யாபாலன் தெரிவித்துள்ளார்.

படுக்கையறை காட்சிகள், லிப் டூ லிப் முத்தக்காட்சிகளில் துணிச்சலாக நடிப்பவர் வித்யாபாலன். 'தி டேர்டி பிக்சர்' படத்தில் அவர் கவர்ச்சியாக நடித்து, விக்க வைத்தார்.

எந்தக் கதாபாத்திரம் கொடுத்தாலும், கச்சிதமாக நடிப்பார்.

'லிப் டூ லிப்' காட்சிகளில் நடிப்பீர்களா? என்று கேட்டதற்கு, 'அது மட்டுமல்ல, ஓரினச் சேர்க்கை காட்சிகளில் வேண்டுமானாலும் நடிப்பேன்' என்றார் வித்யா.

## வைகோ தயாரிக்கும் வேலு நாச்சியார் படம்!

வேலு நாச்சியார் வாழ்க்கையை மதிமுக பொதுச்செயலர் வைகோ படமாகத் தயாரிக்கிறார்.

தமிழ்நாட்டின் ஒரு பகுதியான சிவகங்கை சீமையை ஆங்கிலேயர்கள் கைப்பற்றிய பிறகு தலைமறைவாக இருந்து படை திரட்டி அவர்களைத் தோற்கடித்து மீண்டும் ஆட்சியைப் பிடித்த வீரப்பெண்மணி வேலு நாச்சியார்.

உலகில் முதல் பெண்கள் படைப்பிரிவையும், தற்கொலைப் படைப்பிரிவையும் உருவாக்கியவர் அவர். வீரபாண்டிய கட்டபொம்மன் கதை சினிமாவானது போல், தற்போது வேலு நாச்சியார் கதையும் படமாக இருக்கிறது.

வேலு நாச்சியார் வாழ்க்கையை சொல்லும் நாட்டிய



நாடகத்தை ஸ்ரீராம் சர்மா என்பவர் நடாத்தி வருகிறார். உலகம் முழுவதும் நடத்தப்பட்ட இந்த நாடகத்துக்கு வைகோ ஆதரவளித்து வருகிறார்.

சமீபத்தில் சென்னை நாரதகானசபாவில் இந்நாடக நிகழ்ச்சி நடந்தது. நாடகத்துக்குப் பிறகு அது சினிமாவாகும் அறிவிப்பை வைகோ வெளியிட்டார்.


"உணர்ச்சிகளின் கொந்தளிப்பாக நடிகர் திலகம் நமக்கு எப்படி வீரபாண்டிய கட்டப்பொம்மனாக சிவாஜி கணேசன் எப்படி அளித்தாரோ, அதைப்போல சகோதரி மணிமேகலை சர்மா வேலு நாச்சியாராக இங்கு காட்சி அளித்தார். வேலு நாச்சியார் என்ற திரைப்படத்தைத் தயாரிக்க வேண்டும் என்ற எனது கனவை கண்ணகி பிலிம்ஸ் மூலம் தயாரிப்பதில் பெருமையடைகிறேன்" என்று வைகோ அங்கு குறிப்பிட்டார்.

"இந்நாடகத்தை இயக்கிய ஸ்ரீராம்சர்மா இப்படத்தையும் இயக்குவார். தமிழர்களின் வீரத்தைப் பறைசாற்றும் மற்றுமொரு படம் இது" என்றார் வைகோ.

விழாவில் சிறப்பு விருந்தினராக தயாரிப்பாளர் சங்கத் தலைவர் நடிகர் விஷால் கலந்து கொண்டு பேசினார். வேலு நாச்சியார் நாடகம் கடுமையான உழைப்பில் அரங்கம் காண்பது போல படமும் சிறப்பாக வரும் என்றார் விஷால்.

## மனம் திறந்து பேசுகிறார் ஹோமியோபதி வைத்திய நிபுணர் ஆர்.தியாகராஜன்

# அதிசயம்





திரும்பிப் பார்க்கிறேன்.

பதினாறு வருடங்களுக்கு முன்பு பாரிஸ் மாநகருக்கு சென்ற போது நான் பார்த்த முதலாவது உலக அதிசயம்- 'ஈபில் டவர் *(EFFEL TOWER)* உலகில் உள்ள ஏழு அதிசயங்களில் *(SEVEN WONDERS OF THE WORLD)* ஒன்றான ஈபில் டவர் பாரிஸ் நகரில் பல இடங்களில் இருந்தும் காணக் கூடியதாக அமைந்திருக்கிறது.

இரும்பினாலான அதன் கட்டுமானமும் வடிவமைப்பும் பல வருடங்கள் கடந்தும் இன்றும் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் அதிசயமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. முதல் முதலாக அந்த டவரைக் கண்டபோது பிரமித்தேன். ஆனால், பதினாறு வருடங்களுக்கு முன்பிருந்த என்னுடைய அறிவும், அனுபவமும் அதனை முழுமையாக உணர முடியவில்லை.

ஆனால், சமீபமாக நான் கண்ட உலக அதிசயம் தாஜ்மஹால். என்னை பிரமிக்க வைத்ததோடு மட்டுமல்லாமல், அதன் பல்வேறு சிறப்பு அம்சங்களை என்னால் உணர முடிந்தது. தாஜ்மஹாலின் வடிவமைப்பும் *(DESIGN)* கட்டடக்கலையும் *(ARCHITETURE)* மெய்சிலிர்க்க வைத்தது.

தாஜ்மஹாலின் சுற்றி அமைக்கப்பட்ட நான்கு தூண்களும் இயற்கைப் பேரனர்த்தமாக எதிர்பாராத விதமாகப் பூகம்பம் ஏற்பட்டாலும், அந்த நான்கு தூண்களும் உட்புறமாக சரிந்து பிரதான கட்டடத்தை சிதைக்காது வெளிப்புறமாக விழுந்து சரியும்படி நிர்மாணிக்கப்பட்ட கட்டடக்கலை அதிசயம். *(ARCHTETURE WONDER).*

சிறுகச் சிறுகச் சேமித்து நாங்கள் கட்டிய வீட்டில் பார்த்துப் பார்த்து வாங்கிய சிறிய அளவிலான வெள்ளைப் பளிங்குக் கல் *(WHITE MARBLE)* விலைப்பட்டியல் என் மனதில் நிழலாடியது. அதைச் சமாளிக்கவே நான் தள்ளாடியதும், ஒரு கணம் நினைவுக்கு வந்து போனது. கண்ணெதிரே, பிரமாண்டமான *(MASSIVE STRUCTURE)* இத்தாலிய வெண்பளிங்குக் கற்களால் *(ITALIYAN WHITE MARBLE)* நான் கண்ட தாஜ்மஹால் உலக அதிசயம் என்பதற்கு கண்டிப்பாகத் தகுதி உடையது என்பதை என்னால் உடனேயே உணர முடிந்தது.

கிட்டத்தட்ட 22 ஆயிரம் பணியாட்களின் முழு மூச்சான இருபது வருட உழைப்பில் உருவானதுதான் தாஜ்மஹால் என்ற உலக அதிசயம். ஓரிரு நாளில், அல்லது ஓரிரு வருடங்களில் நிர்மாணிக்கப்பட்டது அல்ல. மிகுந்த கலைநயத்துடனும். நுண்ணிய வேலைப்பாடுகளுடனும் நிர்மாணக்கப்பட்ட தாஜ்மஹால், காலம் கடந்து நிற்பதில் எவ்வித அதிசயமும் இல்லை.

எங்களோடு வந்த வழிகாட்டி 'தாஜ்மஹால் எங்கு இருக்கிறது? என்று கேட்டார். அனைவரும் ஆக்ராவில் இருக்கிறது என்றோம். புன்முறுவலுடன் அந்த வழிகாட்டி கூறினார். "தாஜ்மஹால் இந்தியாவில் இருக்கிறது" "தாஜ்மஹால் இந்தியாவின் பெருமைகளில் ஒன்று *(PRIDE OF INDIA)*"

லட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகளை காலம்தோறும் கவர்ந்து இழுத்துக் கொண்டே இருக்கிறது. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டன் கூறியது என் நினைவுக்கு வந்தது. 'நான் இந்தியாவை நேசிப்பதற்கு முக்கிய காரணம் தாஜ்மஹால்' என்று கூறினார்.

இவ்வளவு பெருமை வாய்ந்த தாஜ்மஹாலைப் பாதுகாக்கும் விதமாக நூறு கிலோ மீட்டர் சுற்று வட்டாரத்தை எந்தவிதமான தொழிற்சாலைகளும் தொடங்குவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட பிரதேசமாக அரசு அறிவித்திருப்பது அதன் சிறப்புக்கு மேலும் பெருகூட்டுவதாகும்.

உலக அதிசயங்கள் அனைத்துமே மன்னர்களாலும், கலைஞர்களாலும், தொழிலாளிகளாலும் கட்டி எழுப்பப்பட்டவை. பிரமாண்டமானவை. பிரமிக்கத்தக்கவை. காலம் கடந்து நிலைத்து நிற்பவை. அதனால்தான் நாம் போற்றிப் புகழ்ந்து பாதுகாக்கிறோம். இவற்றை எல்லாம் உருவாக்கியவர்கள் மனிதர்களே!

மனித உடலும், மனமும் கற்பனைக்கும் எட்டாத அதிசயம் *(HUMAN BODY IS WONDER OF NATURE)* எந்த நவீன விஞ்ஞானத்துக்கும் புலப்படாத வடிவமைப்பும், செயல்திறனும் அமையப் பெற்றவன் மனிதன்.

ஒரு மருத்துவனாக, என்னுடைய முப்பது வருட கால அனுபவத்தில் இதனைக் கண்டு, உணர்ந்து, பிரமித்து, திகைத்து நிற்கிறேன். மனித உடலின் செயற்பாடு விளக்கங்களுக்கு அப்பாற்பட்டது, விஞ்ஞானத்துக்கு அகப்படாதது. அதனைத்தான் கவிஞர் பாடினார். 'நடக்கும் என்பார் நடக்காது. நடக்காது என்பார் நடந்துவிடும்' இதுவே மருத்துவ ரகசியமுமாகும். மருத்துவர்களும் மனிதர்களே!

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினால், மனிதர்களுக்கு கிடைத்த மிகப்பெரிய பரிசாக நான் கண்டு கொண்டது குழப்பமும் பயமும் பீதியும் *(CONFUSSION-FEAR-AND PHOBIA)* மட்டுமே. வயிற்றில் ஏற்படும் வாயுக் கோளாறினால், உடலின் மேற்பகுதியில் மார்பு நோக்கி அபாண அழுத்தத்தினால் ஏற்படும் மெல்லிய வலியையே தாங்கிக் கொள்ள முடியாமல், பீதியுற்று தனக்கு மாரடைப்பு *(HEART ATTACK)* வந்து விட்டதாக கற்பனை செய்து கொண்டு, அம்புலன்ஸைக்கு அடித்து, அவசர சிகிச்சை பிரிவில் ஏராளமாகக் காத்துக் கிடப்பவர்களே இதற்குச் சான்று. இது நாம் அன்றாடம் காணக்கூடிய காட்சி. என்னிடம் வரும் பல நோயாளிகளும், அச்சமுற்றுக் கேட்கும் கேள்வி- "என்னுடைய இதயம் நன்றாக இருக்கிறதா?" என்பதே. இதயம் நின்றால் இறப்பு நிச்சியம். என்ற அடிப்படை தகவலின் மீது கட்டி எழுப்பப்பட்ட கற்பனைக் கேட்டையே வாயுப் பிரச்சினை மீது எழும் மாரடைப்புச் சந்தேகமும் பயமும்.

இலேசுப்பட்டதல்ல மனித இதயம். எதையும் தாங்கும் உறுதி வாய்ந்தது. மாரடைப்பு அடிக்கடி வராது. ஆனால், அபாண வாயு அன்றாடப் பிரச்சினை. தெளிந்து உணர்ந்தால் அமைதி நிச்சியம். அபாண வாயுவை கண்டு பயப்படத் தேவை இல்லை. அதற்காக, நாம் மாரடைப்பு மருந்துகளும் உட்கொள்ளத் தேவை இல்லை. சரியான வழிமுறைகளைக் கையாண்டால், தேவையற்ற மருந்துகளைத் தவிர்க்கலாம். அலைமோதும் 'டயபட்டிக்ஸ்' நோயாளிகள் கூட்டம் 'கான்ஸர்' நோயை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மனித மனங்கள்... இன்றைய நிலைமை இதுதான்.

எங்களிடம் சிகிச்சைக்கு வரும் பல நோயாளிகளும் 'கான்ஸர்' வந்துவிட்டதாக நம்பிக்கையுடன் வருகிறார்கள். "உங்களுக்கு இன்னும் 'கான்சர்' வரவில்லை என்று கூறினால் நம்ப மறுக்கிறார்கள். இதுவே யதார்த்தம். இதனால் மருத்துவர்கள் படும் கஷ்டம் ஏராளம்.

பரிந்துரைக்கும் மருத்துவப் பரிசோதனைகளும் தாராளம். முடிவில், தெரிவதோ எதிர்மறை முடிவுகள். *(NEGATIVE RESULTS NO CANCER)* இருந்தும் நம்ப மறுக்கிறது மனித மனம். சந்தேகமே வாழ்க்கை ஆகிறது. 'கான்சர்' நோய் எல்லாருக்கும் எளிதில் கிடைக்கும் பிரசாதம் அல்ல. அரிதாகக் கிடைக்கும் வரப்பிரசாதம். யாரோ ஒருவருக்குத்தான் வரும்.


இராமகிருஷ்ண பரமஹம்சர், ரமண ரிஷி போன்றோர் உடலில் உண்டான கான்சர் கட்டிகளை ஓரமாக ஒதுக்கி வைத்துவிட்டு, மனித குலத்தை அன்பால் அரவணைத்தவர்கள்.

இன்று நாற்பது ஐம்பது வயதைக் கடந்த ஒவ்வொருவரும் 'கான்சர்' பயத்தோடு வாழ்வது கண்கூடு. நம் உடல் கூற்றை 'கான்சர்' வியாதி எளிதில் அணுக முடியாது என்பதே மனித உடல் கட்டமைப்பின் அதிசயம்.

'டயபட்டிக்ஸ்' போன்ற இதர நோய்களும் எளிதில் அணுக முடியாத கட்டமைப்புக் கொண்டதே நமது மனித உடல். அற்புதமான நோய் எதிர்ப்பு *(IMMUNE SYSTEM)* ஆற்றல் கொண்ட அதிசயப் படைப்பு.

நோய் எதிர்ப்பு ஆற்றல் என்பது தனக்குத்தானே மறு சீரமைப்பு செய்து கொள்ளும் சுய ஆற்றல் படைத்தது.

நவீன காலத்தில் நாம் உபயோகப்படுத்தும் அளவுக்கு மீறிய அவசியமற்ற மருந்துகளும், மருத்துவக் குறுக்கீடுகளும் *(MEDICINES AND MEDICAL INTERVENTION)* நம் நோய் எதிர்ப்பு ஆற்றலைச் சீர்குலைத்து, *(DISTURBS IMMUNE SYSTEM)* பல்வேறு புதிய புதிய நோய்களுக்கும் நம் உடலை புகலிடமாக்குகிறது. புகழ் உடம்பு சிறப்பானது. நோய் உடம்பு கவலைக்குரியது. நோயுற்ற வாழ்வே கவலைக்குரியது. ஹோமியோபதி மருத்துவம், மருத்துவ உலகின் அதிசயம். அதன் செயற்பாடுகளும், சுகப்படுத்தும் ஆற்றலும் மருத்துவ விஞ்ஞான கட்டமைப்புக்குள் அகப்படாத ஆச்சரியம். ஹோமியோபதி மருத்துவத்தினால் சுகமடைந்த ஏராளமானோர் இதற்கான சாட்சிகள். அதிசயமான உடல் அமைப்பைத் தாக்கும் பெருவாரியான நோய்த் தாக்கங்களில் இருந்து மீண்டுவர நமது உடலில் உள்ள நோய் எதிர்ப்பு ஆற்றலை *(IMMUNE SYSTEM)* மறுசீரமைப்பு பக்கவிளைவுகள் இன்றி ஆரோக்கியத்தை மீட்டெடுக்கும் அதிசய மருத்துவம் *WONDERFULL HOMOEOPATHY* இதனை உலகெங்கும் கொண்டு செல்லும் உயர்ந்த தொழில்நுட்ப கட்டமைப்புடன் கூடியது ஹோமியோகெயர். *HIGH TEC-HOMOEOCARE* ●



**ஆலோசனைகளுக்கு 0208 1441553**

# டயபட்டிஸ் சலன்ஜ்

## ஹோமியோபதி மருத்துவம் + உங்கள் ஒத்துழைப்பு

## 100% கட்டுபடுத்தலாம்



### சிறப்பு சிகிச்சைகள்

- உயர் இரத்த அழுத்தம் (B.P/HyperTension)
- கொலஸ்ட்ரால் (Cholesterol)
- சிறுநீரக கோளாறுகள் (Kidney Diseases)
- மூட்டு வலி (Arthritis)
- தோல் வியாதிகள் (Skin Diseases)
- ஹார்மோன் பிரச்சனைகள் (Hormone Disorders)
- மாதவிடாய் கோளாறுகள் (Menses Disorders)
- செக்ஸ் பிரச்சனைகள் (Sex Disorders)
- குழந்தையின்மை (Infertility)
- டயபட்டிஸ் (Diabetes)

டயபட்டிஸ் குறித்த பயமும், அறியாமையும், பீதியுமே ஒரு டயபட்டிஸ் நோயாளியின் வாழ்க்கையில் ஏற்படும் முதல் முடிச்சாக அமைகின்றது. இந்த முடிச்சே மேலும் பல முடிச்சுகளை ஏற்படுத்தி, தீராத பிரச்சினைகளாக மாறிவிடுகிறது.

சவால்களைச் சமாளித்து, ஆரோக்கியமாக வாழ ஹோமியோபதி மருத்துவம் பக்க விளைவுகளின்றி உறுதுணையாக இருக்கும்.

எத்தனை வயதில் டயபட்டிஸ் வந்தாலும், மேலும் நாற்பது, ஐம்பது வருட காலம் தாராளமாக உயிர் வாழலாம்

உயர்தர மருத்துவம் → பாதுகாப்பான மருந்துகள் → விரைவான சேவை

## HOMOEO CARE

30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்

**இலவச மருத்துவ ஆலோசனைக்கு**
**0208 144 1553**

Viber: 0044 7833341693 skype: homoeocare வெப்சைட்: www.homoeocare.com இமெயில்: homoeocare@rediffmail.com



(Govt. Reg. No.571/2007)

உ

# திருச்சிற்றம்பலம் அன்னதான அறக்கட்டளை

அனைவரும் சாப்பிட வாருங்கள்,
சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோவிலுக்கு தரிசனம் செய்ய வரும்
பக்தர்களுக்கு தினமும் மதியம் இலவச அன்னதானம்

## ஆயுள் சந்தா உறுப்பினர் சேர்க்கை

இந்த அறக்கட்டளையில் ரூ.10,000 செலுத்தி நீங்களும் ஆயுள் சந்தா உறுப்பினர் ஆகலாம். வருடத்தில் ஒருநாள் நீங்கள் விரும்பும் தேதியில் 100 நபர்களுக்கு அன்னதானம் வழங்கலாம். இதற்க "வாழ்நாள் சந்தா உறுப்பினர் சான்றிதழ்" வழங்கப்படும்.

80G நகல் காப்பியும், PAN CARD நகல் காப்பியும் முறையான ரசீதும் பெற்றுக்கொள்ளவும். உடன் முன்பதிவு செய்யவும்.

நன்கொடைகளை வங்கி காசோலை, வங்கி கணக்கு பரிமாற்றம் மற்றும் PAYPAL மூலமாகவும் அனுப்பலாம்.

- மாதா பிதா செய்யும் தர்மம் மக்களை காக்கும்
- தானத்தில் சிறந்தது அன்னதானம்
- உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
- மக்கள் சேவையே மகேசன் சேவை
- வாய் வாழ்த்தாவிட்டாலும் வயிறு வாழ்த்தும்
- தர்மம் தலை காக்கும்
- பசித்தோர் முகம் பார் பரமன் அதில் தெரிவார்
- இயன்றதை செய்வோம் இல்லாதவர்க்கே



தொடர்பு கொள்ளவும்

**ப்ரும்மஸ்ரீ. சி. நவதாண்டவ தீக்ஷிதர்**
நெ22/10, கீழ சன்னதி, சிதம்பரம் – 608 001.
செல்: 93455 12976, 76390 43896
www.thiruchitrambalam.org. E-mail : santhanasubramani1969@yahoo.com, anandhancdm2015@gmail.com
A/C Name : THIRUCHITRAMBALAM ANNADHANA ARAKKATTALAI
(Bank: SBI, Cdm Branch, Current A/c.No. 30263863248, IFSC CODE : SBIN 0000823

# ENGINE TEC MOTORS

we offer Facilities for

- Servicing
- Clutches
- Brakes
- Overhauls
- Car Electricals
- Pre - MOT Checks
- ALL Types of Repair & Body Work
- Insurance Work Undertaken

என்ஜின் ரெக் மோட்டர்ஸ்
உங்கள் கார் திருத்த
வேலைகளுக்கு
நம்பிக்கையான நிறுவனம்

Ask for Vel or Rajan
Tel: 020 8640 8000
020 8640 1230
Mob: 0786 0226 476
07860 770 945

Email: vel@etmluk.com
rajan 339c@gmail.com
www.etmluk.com




Unit 5,339 London Road, Mitcham, Surrey CR4 4BE

தமிழிலேயே பேசி உங்கள் கார் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ளலாம்.


MATRIX CONSTRUCTIONS
MATRIX CONSTRUCTIONS
14, Whytecliffe Road, Purley, CR82AU
Loft Conversion, Extensions &
Renovations and conservatories
New Build
Structural repairs and & alterations
Bathroom, Kitchens and basements
Landscaping driveways and patios
Decorations
Maintenance
அனைத்து வீட்டு நிர்மாண,
திருத்த வேலைகளுக்கு
Call:
079 1010 1022


Nandika's Sarees
நந்திகாஸ் சாரீஸ்
Free UK Delivery
வீட்டில் இருந்தபடியே உங்கள் மனதுக்குப் பிடித்தமான அனைத்து வகையான புடவைகள், பிளவுஸ்கள் மற்றும்
ஃபான்ஸி அணிகலன்கள் வாங்குவதற்கு நாட வேண்டிய ஒரேயொரு இணையதளம்
www.nandikasarees.co.uk
www.nandikasarees.co.uk
www.nandikasarees.co.uk
Sarees
Salwars
Lehengas
Fashionable Stitched Blouses
Fancy Jewellery
Bindis
And many more
Contact
Email: info@nandikasarees.co.uk Phone: 07944094691
Visit our online store
www.nandikasarees.co.uk
we provide worldwide shipping

படங்கள்: ஜெனோ வீடியோ & போட்டோஸ்

# எம்.ஜி.ஆர். ஒரு சகாப்தம்!

## லண்டனில் நடந்த நூற்றாண்டு விழாவில் புகழ்மாலை







புரட்சி நடிகர் என்றும் மக்கள் திலகம் என்றும் போற்றிப் புகழப்பட்டு, உலகத் தமிழர் இதயங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழகத்தின் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். ஒரு சகாப்தம் என்று லண்டனில் சமீபத்தில் நடந்த அவரது நூற்றாண்டுப் பெருவிழாவில் பல அறிஞர்கள் புகழ்மாலை சூட்டினார்கள்.

தமிழ் இலக்கிய உணர்வாளர் சிவ தணிகாசலத்தின் திரிசக்தி இலக்கிய சங்கமத்தின் ஏற்பாட்டில், உயர்வாசல் குன்று முருகன் ஆலய மண்டபத்தில், சைவ முன்னேற்றச் சங்க வி.ஆர்.இராமநாதன் தலைமையில், இவ்விழா நடைபெற்றது. "தொண்டும் தலைமையும் பிரிக்க முடியாதது. உண்மையான தொண்டன்தான் சிறந்த தலைவன். அப்படியான ஒரு தொண்டனாக இருந்ததால்தான் எம்.ஜி.ஆர். சிறந்த தலைவனாகத் திகழ்ந்தார்" என்று விழாவைத் தன் தலைமையுரையுடன் ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து புரட்சித் தலைவனுக்குப் புகழாரம் சூட்டவென ஐந்து புலமையாளர்கள் ஒருவர் பின் ஒருவராக உரை வழங்கி மண்டபம் நிறைந்த அவையோரின் பாராட்டைப் பெற்றார்கள். ஐவரும் தமக்கே உரிய தனித்துவமான பாணியிலே மக்கள் திலகத்தின் கலைவாழ்வு, பொதுவாழ்வு, கொடைத்திறன், ஆளுமை, புகழ் என்பன குறித்துச் சிறப்பாகப் பேசிச் சிந்திக்கவும், சிரிக்கவும் வைத்தார்கள்.

பிரபல விமர்சகர் மாதவி சிவலீலன் பேசுகையில், தனது கணவர், எம்.ஜி.ஆர் மீது கொண்டிருந்த பற்றையும், பாசத்தையும் அழகாக நகைச்சுவையோடு எடுத்துக்கூறினார். தங்களது திருமணத்தின் போது கல்யாண மண்டபம் 'ஆயிரத்தில் ஒருவன்' படத்தில் வருகின்ற திருமண அலங்காரம் போலிருக்க வேண்டும் என்று தன் கணவர் அடம்பிடித்து நின்றதை வர்ணித்த போது, சிரிப்பும், கரகோஷமும் அடங்கச் சில நிமிடங்கள் சென்றன. தாய்க்குலத்துக்குத் தனி இடம் தந்த தலைவன் என்றார்.

டாக்டர் சிவ தியாகராஜா, எம்.ஜி.ஆரின் கலைவாழ்வைப் புள்ளிவிபரங்களோடு எடுத்துக் கூறினார். 16 படங்களில் துணை வேடத்தில் நடித்து, 'ராஜகுமாரி' படத்தில் நாயகனாக அறிமுகம் ஆனார். 'மந்திரி குமாரி' புகழை ஈட்டித் தந்த படம் என்றார்.

'நாழிகை' ஆசிரியர் எஸ்.மகாலிங்கசிவம் மதுரையில் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பத்திரிகையாளனாக பங்கு பற்றிய தமது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். தமிழக முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர், அம்மாநாட்டில் அவரது முக்கிய பங்கையும், ஆளுமையையும் விளக்கினார். மாநாட்டில் இசை அரசி எம்.எஸ்.சுப்பலக்ஷ்மி பாடும் போது, எம்.ஜி.ஆருக்கு முதல் வரிசையில் ஆசனம் இருந்த போதிலும், தரையில் அமர்ந்து கேட்டார் என்பதைக் குறிப்பிட்டு, அவரது பணிவைக் கூறினார்.

ஊடகவியலாளர் யோகரட்ணம் பேசுகையில் சபையில் எம்.ஜி.ஆர். பற்றி பேச்சாளர்கள் குறிப்பிடாத புதிய தகவல்களை மிகச் சுருக்கமாக குறிப்பிட்டார்.

சைவப்புலவர் க.சிவானந்தன் எம்.ஜி.ஆரை 'ஆயிரத்தில் ஒருவன்' என்றார். 'திரௌபதையின் சுயம்வர மண்டபத்தில், 999 அரசர்களுடன் ஒருவனாக கர்ணன்' இருந்தான். அப்படியான 'ஆயிரத்தில் ஒருவன்' தான் எம்.ஜி.ஆர். என்று இசை மேதை எம்.எஸ்.விஸ்வநாதன் ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டார். ஆயிரத்திலும் ஒருவன்தான் இரண்டாயிரத்திலும் ஒருவன்தான். ஆம், ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருவன்தான். அப்படி 'ஆயிரத்தில் ஒருவன்தான்' இந்த எம்.ஜி.ஆர். அவர் பெயர் மங்காத ஒளிவிளக்கு அவரது எண்ணங்கள் வேத மந்திரங்களை ஒத்தவை" என்றார்.

முன்னாள் ஹரோ மேயர், கவுன்சிலர் இலண்டன் பாபா சுரேஷ் கிருஷ்ணா சிறப்புரையில், சோதனைகளைச் சாதனையாக்கியவர் எம்.ஜி.ஆர். என்றார். க.சற்குணராஜன் 'நாளைய சரித்திரம் சொல்லும், பாடலை பாடி மகிழ்வித்தார்.

கலாநிதி இரத்தினம் நித்தியானந்தன் வாழ்த்துரையில், தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு கோடிக்கணக்கில் பணத்தை அள்ளிக் கொடுத்தவரென்றார். சைவமுன்னேற்ற சங்க வி.சி.வாமானந்தன் பேசுகையில் தமிழகத்தில் உள்ள தனது அண்ணன் வி.சி.குகநாதன் எம்.ஜி.ஆருக்கு வசனம் எழுதிய பல படங்கள் பற்றிக் கூறினார்.

'இலக்கிய சங்கமம்' அமைப்பாளர் சிவ தணிகாசலம், எம்.ஜி.ஆரின் பண்புகளையும் ஆற்றல்களையும் அழகுற அவர் தனது படங்களில் பாடிய பாடல்களை இடையிடையே பாடி, பொழிப்புரை வழங்கி சரந்தொடுத்த பாணி சபையோரை உற்சாகப்படுத்துவதாக அமைந்தது.

டாக்டர் மு.முருகேசன், வரவேற்புரையும், ச.சிறீரங்கன் தர்மேந்திரன் எஸ்.செல்வராஜா ஆகியோரின் வாழ்த்துரையும், கவிஞர் வேணுகோபாலின் 'கவியின்பமும்' இடம் பெற்றன. எம்.ஜி.ஆர். படத்தில் பாடிய ஒரு பாடலுக்கு தபோவதனி ஞான உதயன் வழங்கிய நடனம் வித்தியாசமான ஒரு நிகழ்ச்சியாக இடம் பெற்றது. மா.ஶ்ரீகாந்தா நன்றி கூறினார்.

சிற்றுண்டியும், இரவு விருந்துபசாரமும் வயிற்றுக்கு இதமாக இருந்தது.

இந்த எம்.ஜி.ஆர். நூற்றாண்டு பெருவிழாவை வீடியோ மூலம் சிறப்பாகப் பதிவு செய்தவர்கள் ஜெனோ வீடியோ & போட்டோஸ் பார்த்து மகிழலாம்.


முருகேசன்


சிறீரங்கன்


தர்மேந்திரன்


தணிகாசலம்


செல்வராஜா


யோகரட்ணம்


சற்குணராஜா


நித்தியானந்தன்


தியாகராஜா


மாதவி


வாமானந்தன்


தலைவர்


லண்டன்பாபா


ஶ்ரீகாந்தா


சிவானந்தன்


மாலி



டாக்டர் ஸ்ரீதரன்




மரணம். மனித மனத்திற்குப் புரியாத இந்தப் புதிரைப் பற்றி மனித புத்திக்கு விளங்காத இந்த வினோதத்தைப் பற்றி பகுத்தறிவால் பகுத்து அறிய முடியாத இந்தச் சம்பவம் பற்றி ஒரு மாமனிதர் அழகாக அற்புதமாக ஆழமாக கூறியுள்ளார்.

"பிணம் என்று நீங்கள் பெயரிட்டு- பயந்து ஒதுங்கி ஒதுக்கி வைத்து ஆர்ப்பரிக்கும் அந்த விடயம்- இப்பொழுதே இங்கேயே உங்களுடனேயே உங்களுக்குள்ளேயே வாழ்ந்து கொண்டிருப்பதனால்தான் உங்களது மரணம் நாளைய தினம் இந்த இரண்டில் எது முதலில் வரும் என்பது உங்களில் யாருக்குமே தெரியாது"

நமது வாழ்வில் தவிர்க்க முடியாத ஒரு சத்தியம் நமது மரணம். உலகின் எந்த மூலையில் நாம் வாழ்ந்தாலும் எப்படி வாழ்ந்தாலும் தவறாது நம்மைக் குறி பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு சத்தியம் நமது மரணம். எந்தவித முன்னறிவித்தலுமின்றி திடீரென ஒரு நாள் நம்மைப் பற்றிக் கொள்ளப் போகும் ஒரு சத்தியம் நமது மரணம்.

என்றோ ஒரு நாள்- ஏதோ ஒரு நேரம் மரணம் நம்மையும் பற்றிக் கொள்ளும் என்பதுதான் நிஜம் என்று நமக்குத் தெரிந்திருந்தும் என்றோ ஒரு நாளின் பின்பு ஏதோ ஒரு நேரத்தின் பின்பு நாம் இந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்க மாட்டோம் என்பதுதான் நிஜம் என்று நமக்குத் தெரிந்திருந்தும் இது பற்றி தீர்க்கமாகச் சிந்திக்க, விளக்கமாக அறிந்து கொள்ள, நண்பர்களுடன் கலந்துரையாட நாம் தயாராக இல்லை.

நடக்க முடியாத பல விடயங்கள் பற்றி அலாதியாக கற்பனை செய்யும் நாம், என்றோ நடக்கப் போகும் பல விடயங்கள் பற்றி தீர்க்கமாகச் சிந்திக்கும் நாம், அடுத்த நொடியில் கூடச் சம்பவிக்கக் கூடிய ஒரு யதார்த்தத்தைப் பற்றிச் சிந்திப்பதை, பேசுவதை நடைமுறைக்கு ஒவ்வாத ஒரு விடயமாக அபசகுணமாக ஒதுக்கித் தள்ளுகிறோம். நமது பயணமும் ஒரு நாள் முடிவுக்கு வரும் என்பதை நமது அன்றாட சிந்தனை சொல் செயல் எதுவுமே எந்த வகையிலும் பிரதிபலிப்பதாக இல்லை.

நமது உறவினர் நமது நண்பர் நமக்கு வேண்டியவர்- யாராவது ஒருவர் இறந்துவிட்டால்- வேர்த்து விரைக்க ஓடிச் சென்று விழிகளில் கண்ணீர் சொரிய செய்வதறியாது வாழ்வின் அத்திவாரமே ஆட்டம் கண்ட நிலையில் கவலையில் மூழ்கியிருக்கும் குடும்பத்தினரின் மத்தியில் அமர்ந்து கொண்டு கட்டிலில் கிடக்கும் அந்தப் பிணத்தைப் பற்றி நாளை பிணமாகப் போகும் நாம் பேசும் பேச்சுக்கள் நமது செவியில் விழும் பேச்சுக்கள் உலகின் அதி சிறந்த நகைச்சுவைத் துணுக்குகள்!

"எனக்கு அப்பவே தெரியும் இந்த சிகரெட்தான் மனிதனுக்கு வினையாகப் போய் விட்டது" என்பவர் வலதுபுறம்! "ஊர் மாதிரி இல்லாமல் இந்த நாட்டிலை சாப்பிடுகிற சாப்பாட்டை அளந்து கவனமாகச் சாப்பிட வேண்டும். இதைக் கவனிக்காமல் கண்டபடி சாப்பிட்டு அநியாயமாகப் போய்ச் சேர்ந்துவிட்டார்" என்பவர் இடதுபுறம்!

"பேரனின் கல்யாண விடயத்தால் ஏற்பட்ட கவலைதான் இவருக்கு யமனாக மாறிவிட்டது" என்பவர் முன்புறம்!

"காணி பூமி எல்லாம் கடைசி மகனுக்குத்தான் என்று நினைக்கிறேன்" என்பவர் பின்புறம்!

எத்தனை எத்தனை பிரகடனங்கள்! எத்தனை எத்தனை சான்றிதழ்கள்! எத்தனை எத்தனை அனுமானங்கள்! அது மட்டுமல்ல. கண்களை- காதுகளைச் சற்று விரித்தால்- ஒரு பிணத்தை மையமாக வைத்து எத்தனை எத்தனை பேரங்கள்! எத்தனை எத்தனை சுயவிளம்பரங்கள்- எத்தனை எத்தனை நடிப்புகள்!

ஒரு நிமிடம் கண்களை மூடிச் சற்றுச் சிந்தித்தால்- அங்கு நாம் கேட்பவற்றில் பார்ப்பவற்றில் நடப்பவற்றில் பெரும்பாலான விடயங்கள் காலம் காலமாகத் தொடரும் நமது முதிர்ச்சியின்மையின் வெளிப்பாடுகள்- அறியாமையின் அறிவித்தல்கள்- அநாகரீகத்தின் அறிகுறிகள்!

அதே சமயம் எப்படி எப்படியெல்லாமோ ஆர்ப்பரிக்கும் நம்மைப் பார்த்து - நடனமாடும் நம்மைப் பார்த்து இயற்கை கூறாமல் கூறும் கீதை இது:

"புத்திரா! என்றோ ஒரு நாள்- ஏதோ ஒரு நேரம் மரணத்தை எதிர்பார்த்து நீயும் கட்டிலில் படுத்திருப்பாய். அப்பொழுது உனது இச்சைக்கு ஏற்ப வாழ்க்கை முழுவதும் ஆடி அசைந்த அங்கங்களை நீ எவ்வளவு முயற்சி எடுத்தாலும் அசைக்க முடியாது. உன்னைக் கேட்காமலே- உனக்குத் தெரியாமலே- இது வரை காலமும் தானாகவே உள்ளே சென்று வெளியே வந்த மூச்சு நீ எவ்வளவு முயற்சி எடுத்தும் உள்ளே செல்லவும் வெளியே வரவும் சிரமப்படும். ஆயிரம் யானைகள் ஒன்றாக சேர்ந்து உனது நெஞ்சை அமுக்குவது போல இருக்கும். ஏதேதோ பேச வேண்டும் போல இருக்கும். ஆனால், உன்னால் பேச முடியாது. சொற்கள் நாக்கில் பிடிபடாது - ஜாலம் காட்டும். பார்வை மங்கிக் கொண்டே செல்லும். அருகிலிருப்பவர்கள் பேசுவது கேட்காது. கேட்டாலும் கேட்கும் விடயங்களுக்கு அர்த்தம் விளங்காது. கண்களிலிருந்து தாரை தாரையாக தண்ணீர் வடியும். உனக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று உனக்கே புரியாமல் பயத்தால் மலம் போகும்- சலம் போகும்"

இயற்கை கூறிய இந்த நிலையிலிருக்கும் ஒரு மனிதனின் மாயமான பரிமாணங்களைப் பாடுகிறார் சொரூபானந்தர்:

**நானாயிருந்ததெங்கே? நான் அபிமானித்ததெங்கே?**
**வானாள மண்ணாள வாஞ்சையெங்கே?**
**ஞான குரு தேசிகனாரெங்கே?**
**சிவா சிவா முக்தி எங்கே?**
**பேசிடத்தான் வாய் எங்கே பிள்ளாய்?**

இந்தப் பாடலைப் படிக்கும் நமது மனம் சிறிதளவாவது பண்பட்டிருந்தால் - சிறிதளவாவது முதிர்ச்சியடைந்திருந்தால் அப்பொழுது இந்தப் பாட்டு நமக்குப் பின்வருமாறு ஒலிக்கும் - ஒலிக்க வேண்டும்.

நானாயிருந்ததெங்கே? நான் அபிமானித்ததெங்கே?
ஜேர்மன் கார் எங்கே? காருக்கு செய்த பூஜை எங்கே?
வடக்கு இலண்டன் வீடெங்கே? வீட்டிற்கு வாங்கிய காப்புறுதி எங்கே?
கொலஸ்ட்ரோல் இல்லாத உணவு எங்கே? அதை அருந்தச் சொன்ன டாக்டர் எங்கே?'

> எனது உடலும் ஒரு நாள் என்னைச் சுற்றியுள்ளவர்களால் பிணம் என்று அழைக்கப்பட்டு மயானத்தில் எரிக்கப்படும் போது என்னுடன் கூட வருவது எனது கர்மபலன்கள் மட்டுமே– இந்த உண்மை நமது மனதில் அழுத்தமாகப் பதிந்தால்– இந்த உண்மையை நாம் அடிக்கடி நினைவு கூர்ந்தால்– அப்பொழுது கூட இருப்பவனுக்குக் குழி பறிக்க மனம் தூண்டாது–

எழுதி வைத்த எழுத்தின் பிரகாரம்- போட்டு முடித்த கணக்கின் பிரகாரம் வெளியே சென்ற மூச்சு மீண்டும் உள்ளே வராத அந்தக் கணத்தில் காய்ந்த இலை கிளையை விட்டு விலகுவது போல பழுத்த பழம் மரத்தை விட்டு விலகுவது போல உடலை விட்டு உயிர் விலகிச் செல்லும் போது நம்முடன் கூட வருவது நமது கர்ம பலன்கள் மட்டுமே.

கர்ம பலன்கள்! அது என்ன?

ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு காரணம் உண்டு. ஒவ்வொரு தாக்கத்திற்கும் ஒரு எதிர்த்தாக்கம் உண்டு. ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டு என்ற மாற்ற முடியாத பிரபஞ்ச விதியிலிருந்து பிறந்ததுதான் கர்மபலன் என்னும் தத்துவம். சிந்தனையால்- சொல்லால்- செயலால் நாம் எது நினைத்தாலும் எது செய்தாலும் அது எவ்வளவு சிறிய பரிமாணமுடையதாகவிருந்தாலும் அவை ஒவ்வொன்றிற்கும் ஒரு பலன் உண்டு. ஒரு எதிர் விளைவு உண்டு.

நம்மிலிருந்து உதிக்கும் ஒவ்வொரு சிந்தனையும்- நாம் புரியும் ஒவ்வொரு செயலும் ஒரு கர்ப்பிணி பிள்ளையைச் சுமப்பது போல அதன் விளைவுகளைச் சுமந்தபடியே உதயமாகிறது. உரிய கால நேரத்தில் ஒரு கர்ப்பிணிக்கு பிரசவம் சம்பவிப்பது போல சரியான நேரத்தில் சரியான காலத்தில் நமது கர்மங்களும் அவற்றின் விளைவுகளைப் பிரசவிக்கின்றன. .

சில விளைவுகள் குறுகிய காலத்தில் இந்தப் பிறவியிலேயே பிரசவமாகின்றன சில விளைவுகள் காலம் கடந்து நம்மை அடுத்த பிறவியிலும் தொடர்கின்றன. ஆனால், நமது எந்தச் சிந்தனையும் எந்தச் செயலும் அவற்றின் விளைவுகளைத் தராமல் மட்டும் மறைவதேயில்லை. உலகப் பொருட்கள் அழிவது போல- கர்மமும் அதன் பலன்களும் அழிவதில்லை. உலகப் பொருட்கள் செயலற்றுப் போவது போல கர்மமும் அதன் பலன்களும் செயலற்றுப் போவதில்லை. காலத்தால் பஞ்ச பூதங்களால் அழிக்க முடியாதது கர்மமும் அதன் விளைவுகளும். விளைவுகளைத் தருமட்டும் கர்மம் அழிவதில்லை. இயற்கை போட்ட சட்டம் இது.

மாமனிதர்களின் பார்வையில் இந்தக் கர்ம பலன்கள் தான் நம்மைப் பிறக்க வைத்தன. நம்மை வாழ வைக்கின்றன. நம்மை இறக்க வைக்கின்றன- நம்மை மீண்டும் பிறக்க வைக்கப் போகின்றன. அதனால் தான் அவர்கள் கூறினார்கள்- "உனது இன்றைய வாழ்க்கையைப் பார்- அது உனது கடந்த கால கர்மங்களைக் கூறும். உனது இன்றைய கருமங்களைப் பார்- அது உனது நாளைய வாழ்க்கையைக் கூறும்".

தொடர்ச்சி 28ம் பக்கம்



ஏ.ஜே.ஞானேந்திரன்

## முதலுக்கே மோசமா? கலக்கத்தில் பாலியல் தொழிலாளிகள்

உயிருள்ளது போன்ற பெண் ரோபோக்கள் புதிது புதிதாக முளைப்பது, அவர்கள் தொழிலுக்கு உலை வைத்து விடுமோ என்ற கலக்கத்தை பாலியல் தொழிலாளிகளிடையே ஏற்படுத்தி இருக்கின்றது இவை பெரு விலையில் விற்கப்பட்டாலும், அதை வாங்குபவர்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது . ஒரு பொத்தானை அழுத்தினால் இந்த ரோபோ தன் "திருவிளையாடல்களை" தொடங்கி விடும் வசதிகள் உள்ளன என்று அறியப்படுகின்றது . ஆங்கிலேய ஆன்லைன் பத்திரிகையான நியூ ஸ்டாருக்கு ஒரு பாலியல் நட்சத்திரம் அளித்த பேட்டியில் , "இந்தப் புது வரவு சிவப்பு விளக்குப் பிராந்தியத்தோடு ஒரு புது விளையாட்டை ஆம்பித்துள்ளது" என்று கூறி இருக்கிறார் . "ஒரு புதுத் தொழில் நுட்பம் சந்தைக்கு வந்துள்ளது . மக்கள் இதை விரும்ப ஆரம்பித்துள்ளார்கள் சந்தையில் பொருட்கள் நிறைய , விலை மலிவாக மாற , ஒவ்வொருவர் வீட்டில் உள்ள ஒன்றாக இது மாறலாம் " என்று மேலும் கூறியுள்ளார் இந்தப் பெண் .

சமீப காலங்களில் செக்ஸ் ரோபோக்களின் உற்பத்திகள் அதிகரித்துள்ளன . புதிய புதிய தொழில்



நுட்பங்களோடு வருடத்துக்கு வருடம் அறிமுகமாகும் ஐபோன்கள் போல . புதிய புதிய வசதிகளுடன் , ஆண்களைக் குஷிப்படுத்த , புதிய புதிய தொழில் நுட்பங்களுடன் பெண் ரோபோக்களை அறிமுகம் செய்யத் தலைப்பட்டுள்ளார்கள்.

ஒரு காலகட்டத்தில் மனிதர்கள் ரோபோக்களையே தேடும் நிலை வருவது நிச்சயம் என்று அவதானிகள் கருதுகிறார்கள். இன்னொரு பாலியல் தொழிலாளி வேறு ஒரு கோணத்தில் இந்தப் பிரச்சினையை நோக்குவதாக கூறி இருக்கிறார். "இந்தச் செயற்கை நுட்பத்தின் ஆளுமை அச்சுறுத்தும் அளவுக்கு இல்லை. உண்மையைச் சொல்லப் போனால், ஒருவருக்குள்ள வேட்கையை மேலும் தூண்டி, எங்களிடம் ஆண்கள் ஓடிவர இவை உதவலாம்" என்று இவர் அபிப்பிராயப்பட்டுள்ளார். அமேசன் 1300பவுண்ட்ஸ் தொகைக்கு , ஆன்லைனில் செக்ஸ் ரோபோக்களை விற்று வருகின்றார்கள்

## சலாட் சாப்பிட சட்டைப் பைக்குள், மனித ஈரல்

தான் சாப்பிடவிருந்த சலாட்டுக்கு சேர்த்துக் கொள்ளத்தான் இந்த ஈரல் என்று சட்டைப் பைக்குள் ,மனித ஈரல் வைத்திருந்த ஒருவனை பற்றி



அறிந்துள்ளீர்களா ? தாய்லாந்து பொலிசார் இவனை இப்பொழுது கைது செய்துள்ளார்கள் . 24 வயதான ஜோன்க்தொங் என்ற பெயர்கொண்ட இவன் தன் வாழ்நாள் நீடிக்கவேண்டும் என்பதற்காக, 79 வயதான தன் அயலவர் ஒருவரைக் கொன்றுள்ளதாக பொலிசாரிடம் தெரிவித்துள்ளான்.. தான் கொன்ற முதியவர், தன் தந்தையைக் கொன்ற பாவி என்றும் பொலிசாரிடம் இவன் முறையிட்டுள்ளான். இவன் தாய்லாந்தின் வட கிழக்கே உள்ள டொங் சுவாங் என்ற பெயருடைய கிராமம் ஒன்றில் வசிப்பதாக பொலிசார் கூறுகின்றனர்.

அடிக்கடி சந்திப்பதுபோல, ஒருதடவை தன் அயலவர் வீட்டுக்கு சென்று, இருவரும் போதை வஸ்து பாவித்ததாகவும், போதை மயக்கத்தில், தன் அயலவர் திடீரென " நான் உன் அப்பாவைக் கொன்றேன்" என்று கூறியதாகவும் அதை தான் நம்ப மறுத்தும், மீண்டும் மீண்டும் அதையே சொல்ல தான் கோபத்தில் குத்திக் கொன்று வயிற்றைக் கிழித்ததாகவும் பொலிசாரிடம் கூறி உள்ளான் இவன்., எதற்காக சட்டைப்பையில் ஈரலை வைத்திருக்கிறாய் என்று கேட்டபோது நல்ல காரமான சலாட் செய்து சாப்பிடத்தான் என்று அவனிடமிருந்து பதில் வந்திருக்கின்றது

மனித ஈரலைச் சாப்பிட்டால் தன் ஆயுள் அதிகரிக்கும் என்று தான் நம்புவதாகவும் பொலிசாரிடம் இவன் கூறி இருக்கிறான். ஒருபழைய பாடலின் வரிகள்தான் ஞாபகத்துக்கு வருகின்றன . டிங்கிரி டிங்காலே மீனாட்சி டிங்கிரி டிங்காலே, உலகம் போற போக்கைப் பாரு ......சந்திரபாபு பாடிய அந்தக் காலப் பாடல் வரிகள் பொருத்தமாக இருக்கிறதல்லவா?

## புலிக்கு பிறந்தது பூனை ஆவதில்லை

மகன்தான் ஈவிரக்கமின்றி பலரைச் சுட்டுச் சாய்த்தான் என்று பார்த்தால், அவன் தந்தையும் இலேசுப்பட்ட ஆளல்ல .FBI என்று அழைக்கப்படும் அமெரிக்காவின் புலனாய்வுப் பொலிசாரின் "தேடப்படுபவர் பட்டியலில்" இவனின் தந்தை இருக்கிறார் என்ற அதிர்ச்சியான தகவல் கிடைத்துள்ளது இவனது தந்தையின் பெயர் பெஞ்சமின் ஹொஸ்கின்ஸ் படொக். இரண்டாம் உலக மகாயுத்தத்தில் பங்கேற்ற இராணுவ வீரர். ஆனால், 1960 இல் தொடராக அரிசோனா, பீனிக்ஸ் போன்ற இடங்களில் வங்கிக் கொள்ளையில் ஈடுபட்டு, அந்த வடப் பிற்பகுதியில், கைதாகி, சிறைப் பறவையானான். ஆனால் 1968 இல், மகன் அதாவது இன்றைய கொலைகாரன் ஸ்டீவன் பதின்ம வயதில் இருந்தபோது, டெக்ஸ்சாஸ் சிறையில் இருந்து



தப்பி ஓடினான் படொக்! 'Big Daddy' என்ற செல்லப் பெயரால் பொலிசாரால் அழைக்கப்பட்ட இந்தக் கைதி, 1969 - 1977 கால கட்டத்தில், அமெரிக்க பொலிசாரினால் தேடப்பட்ட முதல் பத்துக் குற்றவாளிகளில், ஒருவன் என்கிறார்கள். 1978இல் கைதாகிய இவருக்கு என்ன நடந்தது என்று இன்றுவரை சரியான தகவல் இல்லை. ஆனால், இருபது வருடங்கள் கழிந்து, 1998இல் இவன் இறந்து விட்டதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இவனது 34வது வயதில், இன்றைய பெறுமதியாக உள்ள 160,000 டொலர் தொகையை கொள்ளையடித்துள்ளார். ஒரு வங்கி ஊழியர் இவன் தப்பியோடிய காரின் இலக்கத்தைக் கொடுத்து, இவனைப் பிடித்து சிறையில் தள்ள உதவியிருக்கின்றார்.

தந்தையின் வீரதாபங்கள் இப்படி இருக்க , மகனும் "தந்தை மகனுக்கு ஆற்றும் உதவி" ஈவிரக்கமின்றி குருவிகளைச் சுட்டுத் தள்ளுவதுபோல 'சுட்டுக் கொன்றுள்ளான் . இந்த கும்பல் கொலைக்காக இவன் பல நாட்களாக திட்டம் தீட்டி இருக்கிறான் . . மண்டலே பே Mandalay Bay ஹோட்டலில் 32ம் மாடியில் சாரளம் வழியாகச் சுடுவதற்கு வசதியாக தன்னைத் தயார்படுத்தி இருக்கிறான் . உயரமான இடத்திலிருந்து கூட்டத்தை நோக்கி சுட . அவனுக்கு வெகு வசதியாக இருந்துள்ளது . அவனது ஹோட்டல் அறை ஒரு ஆயுதக் கிடங்காகி இருக்கின்றது . இராணுவ றைபில்கள் , ஏகே 47 ரக துப்பாக்கிகள் உட்பட மொத்தம் 23 துப்பாக்கிகள் அங்கே காணப்பட்டுள்ளன . நினைத்த நேரத்தில் , நினைத்த ரகத் துப்பாக்கியை வாங்கி நினைத்தவரை சுட்டுத்தள்ளும் அமெரிக்க துப்பாக்கிக் கலாச்சாரம் இருக்கும் வரை , இப்படியான அநியாயங்களுக்கும் பஞ்சம் இருக்கப்போவதில்லை

## தண்ணீருக்கு அடியில் "தண்ணி" அடிக்கலாம்

வித்தியாசமாக விருந்து படைக்கும் ஆசை மனிதர்களுக்கு நிறையவே இருக்கின்றது . வீட்டுக்கு விருந்தாளியாக வருபவர்களுக்கான கவனிப்பு , ஆளுக்கு ஆள் வேறுபடுவதுண்டு .



இங்கே நீங்கள் கொடுக்கும் பணத்துக்கு விருந்து படைக்கும் உணவகமொன்று , வித்தியாசமாக உங்களுக்கு அதைத் தர ஏற்பாடு செய்திருக்கின்றது ,

தண்ணீருக்கு கீழே ஒரு உணவகத்தை அமைத்துள்ளது ஒரு மாலைதீவு நிறுவனம்! இந்துசமுத்திரத்தின் நடுவில் அமைந்துள்ள மாலை தீவின் பல தீவுகளில் ஒன்றான ரங்காலி தீவில்தான் இந்த உணவகம் இருக்கின்றது இத்தா என்று பெயரிட்டுள்ள இந்த உணவகம் கடல் மட்டத்துக்கு 16 அடி கீழே , இருக்கின்றது , சுவர்கள் கண்ணாடியால் ஆனவை என்பதால் , நீங்கள் ப்ளேட்டில் சாப்பிடும் இன மீன் கண்ணாடிக்கு வெளியே சுதந்திரமாக நீச்சல் அடித்துக் கொண்டிருப்பதை உங்களால் நேரில் பார்த்து ரசிக்க முடியும் . ( என் மச்சாளை உயிரோடு பிடித்து சாப்பிடுகிறானே, என்று தன் கண்முன்னே பிடிபட்ட "மச்சாளை" நினைத்து அந்த மீன் உங்களை திட்டவும் கூடும் )

தினமும் மதிய உணவும், இரவு உணவும் பரிமாறப்படுகின்றன. வேறு பல தண்ணீருக்கு அடியிலான போசனசாலைகள் பரவலாகக் காணப்பட்டாலும், சன் டிவியில் சொல்லிக் கொள்வதுபோல "முதன்முதலாக" இப்படியொரு போசனசாலையை 2005இல் ஆரம்பித்தது நாங்கள்தான் என்று மார்தட்டி சொல்கிறார்கள் இவர்கள். ஒரே நேரத்தில் 14பேர் மாத்திரமே சாப்பிடலாம் என்பது இங்குள்ள ஒரு பெரிய "மைனஸ்". 120 டொலரில் இருந்து மேலேறும் உணவின் விலை அதிகம் என்றாலும், இப்படியான இடங்களில் இது அதிசயம் இல்லை. ஆனால், இந்த இந்த உணவகம், இன்னும் 20வருடங்களுக்கு மாத்திரம் நின்று பிடிக்கும் என்பது. சாப்பாட்டு இராமர்களுக்கு வயிற்றில் அடிக்கும் சங்கதிதான்! படைக்கு பிந்தலாம், பந்திக்கு முந்த வேண்டும். யார் யாரெல்லாம் மாலை தீவுப் பயணத்துக்கு தயாராகி விட்டீர்கள்?

ப.வை. ஜெயபாலன்

# உலக இந்துக்களின் பண்டிகை உல்லாசம் பொங்கும் தீபாவளி!



தமிழர் திருநாள் வரிசையில் ஒரு பெருநாள். பாரதம் முதலாக பரந்து பல நாடுகளிலும் வாழும் இந்துக்களுக்கும் இது ஒரு இன்பநாள். கி.பி.1100ம் ஆண்டில் இருந்தே கொண்டாடப்படுவதாக அன்றைய முகலாய மன்னன் கல்வெட்டு சான்றுகள் ஊடாக ஆய்வுகள் நிரூபிக்கின்றன. மேலை நாடுகள் உட்பட பல்வேறு நாடுகளிலும் பண்டமாற்று வணிகம் ஆசியர்களை தொடர்புறுத்தி இருந்ததால் உலகளாவிய விழாவாகவும் தீபாவளி பரந்துள்ளது. குறிப்பாக இலங்கை இந்தியா, நேபாளம், மியன்மர், சிங்கப்பூர், மலேசியா பிஜி தீவுகள் போன்ற நாடுகளில் இது ஒரு தேசிய விழா. இந்துக்கள் மட்டுமல்லாது சீக்கிய சமண சமய விழாவாகவும் இது பரிமளிக்கிறது.

தீபங்களை வரிசையில் அடுக்கி ஒளி ஏற்றி கொண்டாடுவது என்ற கருத்தில் தீபாவளி என இக்கொண்டாட்டம் பெயர் பெற்றது என்பர். தீபம் விளக்கு என்றும் ஆவளி வரிசை என்றும் பொருள் கூறப்படுகிறது. கார்த்திகை மாத அமாவாசை திதியை ஒட்டி இக்கொண்டாட்ட தினம் பெரும்பாலும் ஆங்கில ஐப்பசி மாத நடுப்பகுதியில் அமைகின்றது.

கிருஷ்ண பெருமான் பன்றி உருவில் பூமியை தோண்டி அடிதேட புறப்பட்ட போது பூமாதேவியின் மகனாக நரகாசுரன் என்ற அசுரன் பிறப்பெடுத்தான் என்றும் ஆணவமும் கொடுமையும் மிகுந்த அவனை கிருஷ்ணரின் விருப்பத்துக்கு அமைய சத்தியபாமா சக்கராயுதத்தால் கொன்றாள் எனவும் இறக்கும் தறுவாயில் தன் தவறுகளை உணர்ந்த நரகாசுரன் தான் கொல்லப்பட்ட தினத்தை தீபங்கள் ஏற்றி மக்கள் இன்பநாளாக கொண்டாட வேண்டுமென வேண்ட அந்த வரம் வழங்கப்பட்டதால் தீபாவளிக் கொண்டாட்டம் ஆரம்பமானது எனக் கூறப்படுகிறது.

பார்வதி தேவிக்குரிய கேதார கௌரி விரதத்தின் 21ம் நாளான நிறைவில் சிவன் உமை அம்மையை தன்னுள் சரிபாதியாக இணைத்து அர்த்தநாரீஸ்வரர் ஆன தினம் என்பதால் தீபாவளி பிறந்தது என்றும் கூறப்படுகின்றது. 1577இல் பொற்கோயில் கட்டப்பட்ட தினம் என்று சீக்கியரும் மகாவீரர் நிர்வாணம் அடைந்த தினம் என்பதால் சமணரும் இதே தினத்தை தத்தம் தீபாவளியாக கொண்டாடி வருகின்றனர்.

இல்லங்களை ஏற்கனவே அழகுபடுத்தி இனிமையான தின்பண்டங்களை தயாரித்து வைத்து, புத்தாடைகளை வீட்டில் உள்ள அனைவருக்கும் கொள்வனவு செய்து, இறைவனின் படையலுக்கும், வருவோரின் விருந்துக்குமான தேவைகளை தயாராக்கி தீபாவளி தின கொண்டாட்டங்களுக்கு குடும்பங்கள் தயாராகின்றன. சிட்டிகளில் அடுக்கு தீபங்கள் மின்சார ஒளியின் பல வண்ண அலங்கார விளக்குகளோடு வெடியோசைகளும் அதிகாலையிலேயே தீபாவளியை வரவேற்கின்றன.



ஸ்நானம் என்ற முழுக்கு தீபாவளி காலைகளில் ஒவ்வொருவரின் வழமை. கங்காஸ்நானம் எனப்படும் இதற்கு தீபாவளி நன்நாளில் தண்ணீரில் கங்காதேவியும் தலைக்கு தேய்க்கும் எண்ணையில் லட்சுமியும் அரப்பில் சரஸ்வதியும் குங்குமத்தில் அபிராமி தேவியும் சந்தனத்தில் பூமாதேவியும் இருப்பதாக இந்துக்களின் நம்பிக்கை. அகல் விளக்கின் அலங்காரம் வீட்டை மங்களப்படுத்துவதாகவும் புத்தாடைகளுக்கும் தெய்வீக ஆசிர்வாதம் உண்டு என்றும் நம்பப்படுகின்றது.

ஆலய வழிபாடு. விருந்தோம்பல், குடும்ப அக்கத்தவர்களின் ஒன்றிணைவு உறவினர்களுடன் ஒன்று கூடுதல். புதிய திரைப்படங்கள், பட்டிமன்றம் விளையாட்டு நிகழ்வுகள் என ஆனந்தமாக பொழுதைப் போக்கும் நன்நாளாக ஒவ்வொரு ஆண்டு தினத் தொடரில் தீபாவளி முக்கியஸ்துவம் பெறுகின்றது.

பலநூறு ஆண்டுகளாக கொண்டாடப்படும் தீபாவளி திருநாள் அவரவர் திருப்திக்கு ஏற்றபடி அவரவர் விருப்பப்படி கொண்டாடப்பட்டதை எனது சிறு பராய கால தீபாவளி கொண்டாட்டத்தை எண்ணிப் பார்க்கும் போது நினைவில் கொள்ள முடிகிறது. யாழ்ப்பாணத்தில் அன்றய நாட்களில் இந்துக்களுக்கு இது ஒரு புனித நாள். கேதாரகௌரி விரதம், கந்தஷஷ்டி, விரத ஆரம்பம் என இன்நாளில் இல்லங்கள் சைவ முறையில் இன்ப நாளாக இதை கொண்டாடும். யாழ்ப்பாண பட்டணம் ஒரு மாதத்துக்கு முன்னரே கலகலக்கத் தொடங்கும். புதிய வடிவமைப்பு சேலைகள், உடைகள் மலிவு விற்பனை என்றும் யானை மார்க் வட்ட பெட்டி வெடி, புத்தக வெடி சக்கிள் வெடி, அவுட்டு வாணம், பூரிஸ் என்றும் விற்பனை உச்சம் பெறும். புதிய சினிமாப்படங்களின் தீபாவளி வெளியீட்டை விளம்பரப்படுத்தும் பெரிய பெரிய ஆள் உயர பட விளம்பரங்கள் சுவரொட்டிகள் எங்கும் தென்படும்.

சிற்பி, முறுக்கு, சீனி அரியதுரம், பால்ரொட்டி, பயித்தம் பணியாரம் என்று ஒவ்வொரு வீட்டிலும் பலகார தயாரிப்பு இடம் பெறும். தீபாவளி நாள் அரசாங்க வர்த்தக, வங்கி விடுமுறை நாள் என்பதால் தீபாவளிக்கு கொழும்பு உட்பட வெளியூரில் வேலை பார்க்கும் உத்தியோகஸ்தர்கள் வருகையால் தீபாவளி முன்நாட்களில் மெயில், யாழ்தேவி, ரயில் சேவை உட்பட தூர சேவை பேருந்துகளிலும் சன நெருக்கம் மிகுதியாகும். உறவினர் தரும் பரிசுகள், பணம் எம்மை மகிழ்விக்கும். பெரும்பாலும் சைவ முறைப்படியே புனித நாளாக தீபாவளி கொண்டாட்டம் உல்லாசமாக கொண்டாடப்படும் வழமை இருந்தது.

மாறாக குடிப்பிரியர்களுக்கு இது சாராய திருநாளாவதும் உண்டு. தவறணைகளிலும், சட்ட விரோத சாராய விற்பனை மூலை கடைகளிலும் சாராய விற்பனை பலமடங்காகும். ஆங்காங்கே ஆட்டுக்கடா பங்கு இறைச்சி பனங்குடலைகளில் நிறைந்து விற்பனையாகும். கள்ளு விற்பனையும் கள்ளுக் கொட்டில்களில் உச்சம் பெறும். புதிய சாரம் அவிழ்ந்து விடாபடி கையால் பிடித்தபடி தள்ளாடி தள்ளாடி தெம்மாங்கு பாடல்களை பாடியபடி மதுபோதையில் தீபாவளி உல்லாசம் காண்போர் தெருவுக்கு தெரு நடமாடுவார்கள். ராணி, வெலிங்டன், வின்சர், மனோகரா திரை அரங்குகள் உட்பட உள்ளூர் சினிமா அரங்குகளும் 5 காட்சிகளை நிரம்பிய அரங்காக காண்பது தீபாவளி நாளில் தான்.

வருடா வருடம் புதிய உடுப்பு, பரிசளிக்கும் சித்தி, வெடிப்புத்தகங்கள் பூரிஸ் என்று பரிசளிக்கும் மாமா, அண்ணர் என்று நினைவுகள் கண்ணீர் திவலைகளுடன் வருவதும் தீபாவளியில் தான். உல்லாச தீபாவளித் திருநாள், காலாகாலமாக தொடர்கிறது. தொடரத்தான் போகிறது. கலாசார அடையாளங்களில் ஒன்று சந்ததி வழி தொடர்கிறது என்று நிம்மதி கொள்வோமாக. பகுத்தறிவுவாதிகளின் வாதங்களை ஏற்றுக் கொள்வோர் உள்ளங்கள் கூட மகிழ்வுடன் தீபாவளியை கொண்டாடத்தான் செய்யும். ■



# மேடையில்லா நாடகம்

## பாலேந்திராவின் புதிய முயற்சி

க.ஜெகதீஸ்வரன்





உலகம் ஒரு நாடகமேடை, அதில் ஆண்களும் பெண்களும் வெறும் நடிகர்கள் என்கிறார் பிரபல ஆங்கிலக் கவிஞரான ஷேக்ஸ்பியர். நாடகம் நடத்துவதென்றால் அதற்கு ஒரு மேடை தேவை. மேடையே இல்லாமல் நாடகம் நடத்த முடியுமா? நாடகம் என்ன? ஒரு நாடக விழாவே நடத்தலாம் என்று நிரூபித்துள்ளனர் ஆனந்தராணி பாலேந்திரா தம்பதியினர். அவைக்காற்று கலைக் கழகத்தின் அறுபத்தொராவது நாடகவிழாவை அல்பேர்ட்டன் ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் அரங்கு நிறைந்த பார்வையாளர் முன் அவர்கள் நடத்தியுள்ளார்கள். அந்த மண்டபத்தில் மேடை இல்லை. இந்த நாடகவிழா கண்ணுக்கும் கருத்துக்கும் மிகச் சுவையாக அமைந்தமை அதன் தனிச்சிறப்பு. மூன்று நாடகங்கள் புதிய பயணம், பரமார்த்த குருவும் சீடர்களும், யுகதர்மம் ஆகியவை அவை. மூன்றும் மூன்று பரிமாணங்களைக் கொண்டிருந்தன.

முதலாவதாகப் 'புதிய பயணம்'. தமது நாடகப்பள்ளியில் சிறுவயது முதல் நடிக்க வந்த சிறுவர்களிலே சிலர் பல்கலைக் கழகங்களில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். வேறு சிலர் படிப்பை நிறைவு செய்து வேலை பார்க்கிறார்கள். ஆனால், அனைவரும் நாடகத்திலுள்ள ஈடுபாட்டால் இன்னும் நடிக்கிறார்கள். இந்த நாடகத்தை அவர்களே தம்மனத்தில் கருவாக்கி, பின்னர் எழுத்தில் உருவாக்கி, அதற்கு மெருகேற்றி இன்று உங்கள் முன் வழங்குகிறார்கள். நானோ பாலேந்திராவோ இந்த நாடகத்துக்கு எவ்வித உதவியும் செய்யவில்லை. எல்லாமே அவர்களுடைய முயற்சி என்று பெருமையுடன் அறிவித்தார் ஆனந்தராணி.

நாடகம் தொடங்கியது. இங்கிலாந்தில் வாழும் ஒரு குடும்பம். இங்கிலாந்திலேயே பிறந்து வளர்ந்த தம் இரு பிள்ளைகளுடன் இலங்கைக்கு விடுமுறைக்குப் போகின்றார்கள். அங்கே பிள்ளைகள் புரியாத மொழி, அறியாத கலாசாரம் ஆகியவற்றுள் அமிழ்ந்தி, அநுபவித்ததை நாடகமாக்கித் தந்திருக்கிறார்கள். தகப்பன் பிள்ளைகளை அழைத்து, விடுமுறை போவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன் என்றவுடன் மகனும் மகளும் குதூகலித்து ஐரோப்பிய நாடா, வேறு முன்னர் போகாத நாடா என்று தந்தையைக் கேட்கிறார்கள். இலங்கைக்குப் போகிறோம் என்று பதில் வந்ததும், அவர்களின் முகம் வாடுவதும் தகப்பன் அங்கேதான் போகிறோம் என்று தானே முடிவெடுத்த போது பிள்ளைகள் எதிர்ப்பைத் தெரிவிப்பதும், அது எடுபடாமற்போவதும், இலங்கை போய்ச் சேர்ந்தவுடன் தன் பெற்றோரிடம் இந்தப் பிள்ளைகளின் தகப்பன், "அப்பா! பிள்ளைகள் உங்களைப் பார்க்க விரும்பி இங்கு வரக் கேட்டதனாலேயே அழைத்து வந்தேன்" என்று சொல்வதும் ஆக முதல் இரு காட்சிகளிலேயே நாடகம் சூடுபிடித்தது. மொழி தெரியாமல், கடையிலே 'மொழிபெயர்ப்பு சிரிஐ உபயோகித்து 'தண்ணி' வேணும் என்று சொல்லி மதுவை வாங்கிச் சுவைத்து பின்னர் பதறி, பெரிய தகப்பனின் மகள் தண்ணீர் இரண்டு விதத்துக்குமான வித்தியாசத்தை விளக்குவது அபாரம். பாட்டிக்கு இதயவலி வந்த போது மருத்துவரிடம் தமிழிலே பேசத் தெரியாமல் அவதியுற, மருத்துவரோ இவர்கள் சொல்வதைப் புரியாமல் தனக்கு வந்த இதயவலி பற்றி சிலாகிக்க... அந்த அநுபவத்துடன் பிள்ளைகள் தமிழ் கற்க முயல்வதும் திரும்பி இங்கிலாந்து போக மனமின்றிப் போவதும் நாடகத்துக்கு முத்தாய்ப்பு வைத்த காட்சி. இதில் யாருடைய நடிப்பு நல்லது, யாருடைய நடிப்பு குறைவு என்று சொல்ல இயலாதவகையில் அனைவரும் திறம்பட நடித்து நாடகத்துக்கு வலு சேர்த்தார்கள்.

பேராசிரியர் சிவசேகரம் வசனம் எழுதிய 'பரமார்த்த குருவும் சீடர்களும்' என்ற நாடகம் அடுத்து நடைபெற்றது. இதில் நடித்தவர்கள் மிகச்சிறிய சிறுவர்கள். குதிரை முட்டை வாங்கிய பழைய கதையை முதலில் நினைவுகூருகிறார்கள். பின்னர் தமது யானையைப் பராமரிப்பதில் வரும் சிக்கலை விவாதிக்கிறார்கள். "பெரிய விஷயங்களை யோசிப்பதால் சின்ன விஷயங்களை யோசிக்க நேரம் இல்லை" என்ற வசனம் அப்போது வருவது சுவையான இடம். யானையை விற்று வரும் பணத்தில் மண்வெட்டி வாங்கி யானையைப் புதைக்கலாம் என்பதும் யானையை விற்றபின் எப்படிப் புதைப்பது என்று யோசிப்பதும் சீடர்களின் முட்டாள்தனத்தை வெளிப்படுத்தும் காட்சி. யானையிலிருந்து எந்தப் பொருள் விழுந்தாலும் எடுக்க வேண்டும் என்ற குருவின் கட்டளைக்குப் பணிந்து யானையின் சாணத்தை எடுத்ததும் பின்னர் எடுக்க வேண்டிய பொருள்களுக்குக் குரு ஒரு பட்டியல் கொடுத்தபின், குரு விழுந்த போது பட்டியலில் அவர் இன்மையால் அவரைத் தூக்காது செல்வதும் நகைச்சுவைக்கு மகுடம் வைத்த காட்சிகள். ஒவ்வொரு பொருளும் விழும் போது, பட்டியலைப் பார்த்து, அதிலே இருக்கிறதா என்று சரிபார்ப்பதை வசனம் இல்லாது சிறுவர்கள் அபிநயமாகவே செய்தமை அருமை. அவர்களின் நடிப்பால், சிரிப்பில் கண்கள் குளமாயின.

யுகதர்மம் மூன்றாவது நாடகம். ஜேர்மானிய எழுத்தாளரான *Bertolt Brec ht* எழுதிய நாடகத்தின் மொழிபெயர்ப்பு. ஏழைகளை மேல் வர்க்கம் அடிமைப்படுத்துவதையும் நீதியை வழங்கும்போதும் பக்கசார்பாக இருப்பதையும் காட்டும் நாடகம் இது. 'புதிய பயண'த்தில் நடித்த அத்தனைபேரும் இதில் நடித்தார்கள். இதிலும் அவர்களின் நடிப்பு மிக அருமையாக இருந்தது. இந்த நாடகத்தை 1988இல் லண்டன் பாரதிய வித்தியா பவனில் மேடையேற்றியபோது பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அதுதான் அவைக்காற்று கலைக் கழகத்தின் நாடகங்களை நான் தொடர்ந்து, கூடியவரை தவறாது, பார்ப்பதற்குப் பிள்ளையார் சுழியாகவும் அமைந்துவிட்டது.

காட்சி அமைத்தல், மேடையில் எங்கெங்கு என்னென்ன வைக்க வேண்டும், என்னென்ன நீக்க வேண்டும் என்பதை நடிகர்களே செய்தல், நடிகர்கள் காட்சியில் எங்கு நிற்க வேண்டும், பேசுவது எங்கே உரத்து எங்கே குறைத்துப் பேச வேண்டும் என்பவற்றில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டமை மூன்று நாடகங்களிலும் தெளிவாகத் தெரிந்தது. குறிப்பாகச் சிறுவர் நாடகத்தில் எல்லோருமே திறம்படத் தமது பங்கை ஆற்றினார்கள். இலண்டனில் உள்ள தொழில்முறை நாடக அரங்குகளில் நாடகம் பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தின இந்த நாடகங்கள்.

ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டு முதல் நாடகத்துறையில் தம்மை ஈடுபடுத்தி, இன்றுவரை தரம் குறையாத படைப்புக்களைப் படைத்து இரசிகர்களாகிய எங்களுக்கு வழங்கிவரும் பாலேந்திரா ஆனந்தராணி தம்பதியரைப் பாராட்டி நிறைவு செய்ய வார்த்தைகள் போதாது. திரைப்படங்கள் வருமுன் இருந்த காலத்தில் நாடகம் ஓரளவு நடத்த வாய்ப்பு இருந்தது. மக்கள் வருவார்கள். திரைப்படம் வந்து திரையரங்குகளில் மட்டும் காட்டப் பெற்றதால் நாடகத்தில் ஓரளவு பாதிப்புத்தான் ஏற்பட்டது. ஆனால், இப்போது ஊடகங்களின் வளர்ச்சி மக்களை நாடக அரங்குகளுக்குப் போகாது முடக்கிவிட்டது என்றே சொல்ல வேண்டும். அப்படியான நிலையில், அதுவும் வேறு கலாசார சூழலில் இந்தத் தம்பதியர் நின்று நிலைப்பது நினைத்துப் பார்க்க இயலாத ஒரு சாதனை. சிறுவர்களுக்குப் பயிற்சி கொடுப்பதும் பேச வைப்பதும் எவ்வளவு கடினமான முயற்சி என்பதை ஓர் ஆசிரியராக நான் அறிவேன். ஈழ இடப்பெயர்வு காரணமாக மக்கள் பலரும் பல வெளிநாடுகளில் வாழும் இன்றைய காலத்தில் இவர்கள் இருவரும் அந்தத் தமிழர் வாழும் நாடுகளுக்கெல்லாம் சென்று நாடகவிழாக்களை நடத்துவதும் இமாலய முயற்சி என்றே சொல்ல வேண்டும்.

யுகதர்மம்- நாடகமும் பதிவுகளும் என்றொரு சிறு நூலையும் அன்று நாடகத் தம்பதியர் வெளியிட்டனர்.

'கானசாகரம்' நிறைவு நிகழ்ச்சி ஈழக் கவிஞர்கள் மகாகவி உருத்திரமூர்த்தி, எம்.கண்ணன், நீலாவணன், சேரன், சண்முகம் சிவலிங்கம், ச.வாசுதேவன் யாத்த பாடல்களை, ஈழத்து இசையமைப்பாவர் யாழ்.எம். கண்ணனின் இசையில் ஈழக்கலைஞர்கள் மா.சத்தியமூர்த்தி, விஜயகுமாரி பரமகுமரன், தர்ஷினி சிவசுதன், குகனேஸ்வரி நித்தியானந்தன், பவனுஜா கஜகரன் ஆகியோர் பாடினார்கள். ஜலதரனின் வயலின், சிதம்பரநாதனின் தபேலா, வேந்தனின் ஹார்மோனியம், செல்வன் தநுஷன் தம்பையாவின் தபேலா ஆகியவை பக்கவாத்தியங்களாக அமைந்து இசைக்கு மேலும் மெருகூட்டின.



இலவசமாக விழா நடத்தியமை, உதவியோர் எல்லோரையும் தவறாது குறிப்பிட்டமை, அனைவருக்கும் நன்றி நவின்றமை, ஒழுங்கமைப்பில் தாமதமின்றிச் செயற்பட்டமை எல்லாமே அநுபவம் மிக்க தொகுப்பாளர் ஆனந்தராணிக்கும் பாலேந்திராவுக்கும் அல்வா சாப்பிடுவது போல என்பதால் அதிசயிக்க ஒன்றுமில்லை. ஆனால், நாற்பதாவது வருடமாக, தொடர்ந்து உலகின் பல பாகங்களிலும் நாடக விழாக்கள், பயிற்சிப் பட்டறைகள், நாடகப் பள்ளி என்று தொடர்ந்து வெற்றிகரமாக நடத்துவதென்பது? இந்த அபூர்வத் தம்பதியைப் பார்த்து வியக்காமல் இருக்க இயலவில்லை. அவர்களின் பணி மேலும் தொடரட்டும். ■

லண்டன் ராஜாத்தி

# போதுமென்ற மனமே...

உங்களின் வாழ்க்கை எப்படி செல்கிறது என்று யாராவது கேட்டால் உங்களின் பதில் என்னவாய் இருக்கும்? இந்தக் கேள்விக்கு அநேகரின் பதில் ஒருவித சலிப்போடு கூறும் ஏதோ பரவாயில்லை எப்படியோ போய்க்கொண்டு இருக்கிறது என்பதாகவே இருக்கும். எல்லாமே நல்லபடியாய் இருக்கிறது. ஒருவித குறையும் இல்லாமல் திருப்தியாக வாழ்க்கை செல்கிறது என்று கூறுபவர்கள் இருந்தால் அது உண்மையிலேயே மிகப் பெரிய விடயம்.

எதையோ தேடி அடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற வாஞ்சையோடு ஓடிக்கொண்டே இருக்கிறார்கள் நம் மக்கள். ஆனால், எதை அடைந்து விட்டால் போதும் என்று சொல்லுவோம்? எதை அடைந்து விட்டால் திருப்தி அடைவோம்?

முதலில் விசா கிடைத்துவிட்டால் அதுமட்டும் போதும் என்ற எண்ணம் தோன்றும். விசா கிடைத்ததும் ஒரு தனி வீடு வாடகைக்கு எடுப்பது அடுத்த கட்டம். அதன்பிறகு அட, எல்லோரும் வீடு வாங்குகிறார்கள் நானும் ஒரு வீடு வாங்க வேண்டும் என்ற ஆசை தோன்றும். முதலில் ஒரு சின்ன வீடு. பின்பு அதை விட ஒருபெரிய வீடு. அதுமட்டும் இல்லை ஒரு சிறிய கார் வாங்கி பின்னர் அதில் திருப்தி இல்லாமல் ஒரு பெரிய கார் வாங்கியே தீர வேண்டும் என்ற ஆசை.

போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து என்ற பழமொழி நம் எல்லோருக்கும் நன்கு தெரிந்ததே.

ஆனால், அதை கடைப்பிடிக்கிறோமா என்பதுதான் கேள்வி. அப்படியானால் வாடகை வீட்டில் இருந்து கொண்டு ஒரு ஓட்டை காரை ஓட்டிக்கொண்டு இருப்பதுதான் வாழ்க்கையா? நிச்சயமாக இல்லை. இந்தப் பழமொழி அதைத்தான் போதிக்கிறது என்று எண்ணினால் அது தவறு. இந்தப் பழமொழி என்னதான் கூறுகிறது?

இந்தப் பழமொழியின் உள்ளடக்கத்தை ஆழ்ந்து அறிந்தோமானால் இது வாழ்க்கையில் முன்னேற வேண்டாம் என்று ஒருபோதும் கூறவில்லை. நாம் முதலில் நம்மிடம் இருப்பதைக் கொண்டு திருப்தி அடையவேண்டும். நம்மிடம் உள்ளதோடு முறுமுறுக்காமல் முதலில் சந்தோசமாய் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். அதன்பிறகு அடுத்த கட்டத்தை நோக்கி செல்லும் போது அதில் ஒரு அர்த்தம் இருக்கும். ஆசை வரும், ஆனால் பேராசை இருக்காது.

நம் ஆசை பேராசையாய் ஓங்கி வளர்வதற்கு ஒரு முக்கிய காரணம் நம் வாழ்க்கையை நாம் மற்றவர்களின் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்ப்பதுதான். அதுவும் அநேகர் தம்மைவிட கஷ்டத்தில் இருப்பவர்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பது இல்லை. பணத்தில் புரள்பவர்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். அதன் விளைவு: அதிருப்தியோடு வாழும் ஒரு விரக்தியான வாழ்க்கை.




நானும் என் தோழியும் பேசிக்கொள்ளும் போது என் தோழி கூறினாள் - இப்போது நம் தமிழ் பெண்கள் ஏதாவது ஒரு விழாவாக இருக்கட்டும் அல்லது ஒரு நிகழ்ச்சியாக இருக்கட்டும் - ஒரு தடவை அணிந்த புடவையை மறுபடியும் அணிய மாட்டார்களாம். ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் விழாவுக்கும் புதுப்புது புடவைகளை வாங்கி அணிய விரும்புகிறார்களாம். புடவைக்கு பிளவுஸ் தைப்பவர்களின் வியாபாரம் இப்போது 'ஆகா ஓகோ' என்று சூடு கட்டிப் பறக்கிறதாம். சற்று சிந்தித்துப் பார்க்கும் போது இதில் நிச்சயமாக உண்மை உண்டு என்று தோன்றுகிறது.

சரி பெரியவர்கள்தான் இப்படி திருப்தியடையாமல் அல்லாடுகிறார்கள் என்று இதை இப்படியே விட்டு விடமுடியாது ஏனென்றால் நம் பிள்ளைகள் நம்மைவிட அதிக அதிருப்தியோடு வாழ்கிறார்கள்.

ஒரு சிறிய உதாரணம் - நம்மை விட நம் பிள்ளைகளிடம் இன்று அதிக விலையுயர்ந்த பொருட்கள் உண்டு - மொபைல் போனில் இருந்து, லப்டாப், டிசைனர் துணிகள்சப்பாத்துக்கள் என்று பட்டியலைப் போட்டுக் கொண்டே போகலாம். இவை எல்லாவற்றையும் நீங்கள் இன்று கடைவீதிக்கு அழைத்து சென்று வாங்கி கொடுத்தால் உங்களின் பிள்ளை இன்று மிக மிக சந்தோசமாய் இருப்பான்/இருப்பாள். அதே சந்தோசம் அடுத்த மாதம் இருக்குமா என்றால் அதன் பதில் இல்லை என்பதாகவே இருக்கும். அடுத்தமாதம் தனக்கு வேறு ஒரு பொருள் வேண்டும் அல்லது லேட்டஸ்ட் மொபைல் வேண்டும் என்று உங்களின் முன் வந்து நிற்கும் உங்களின் பிள்ளை.

இப்படியே சென்றால் நம் பிள்ளைகள் எதிர்காலத்தில் எப்படிப்பட்ட வாழ்க்கையை வாழப்போகிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்கும் போது பயங்கரமாகவே இருக்கிறது.

நாம் முதலில் இருப்பதைக் கொண்டு சந்தோசத்தோடு வாழ ஆரம்பித்தால் நம் பிள்ளைகளின் வாழ்க்கையிலும் ஒருவித மாற்றம் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு. இல்லையா?

கடைசியாக எனக்கு தெரிந்த ஒரு இளம் தம்பதி - கணவர் மனைவி இரண்டு சிறு பெண் பிள்ளைகள். மற்ற தமிழ் குடும்பத்தை போலவே இவர்களின் வாழ்க்கையும் இந்த நாட்டில் சராசரியாக ஆரம்பித்து சுமுகமாக சென்று கொண்டிருக்கும் வேளையில் கணவருக்கு சிறுநீரக பாதிப்பு உண்டாகி இரண்டு சிறுநீரகங்களும் செயல் இழந்து விட்ட நிலையில் நீண்ட காலமாக இரத்த சுத்திகரிப்பு செய்ய வேண்டிய சூழ்நிலை. ஆஸ்பத்திரியும் வீடுமாய் இவர்களின் வாழ்க்கை சென்று கொண்டு இருந்த போது திடீரென்று ஒரு நல்ல செய்தி - இவருக்கு மாற்று சிறுநீரகம் ஒன்று பொருந்தி அமைந்துள்ளது.

நம்பிக்கை இழந்து ஏதாவது விதத்தில் நமக்கு நல்ல காலம் பிறக்காதா என்று ஏங்கி தவித்த இருவருக்கும் இதைவிட மகிழ்ச்சியான செய்தி வேறு ஒன்றுமே இருந்திருக்க முடியாது. ஒருபடியாக மாற்றுச் சிகிச்சையும் நடைபெற்று கணவர் வீடு திரும்பி வந்து மறுபடியும் ஒரு புதிய வாழ்க்கையை நம்பிக்கையோடு ஆரம்பித்தார்கள். அந்தோ பரிதாபம் - சாண் ஏற முலம் சறுக்குவதுபோல மறுபடியும் சிறுநீரகத்தில் ஏதோ ஒரு கோளாறு. உடலில் சக்கரை அதிகம். கிளாரிட்டின் அதிகம் என்று இப்படி ஏதாவது ஒரு காரணத்தால் மறுபடியும் அடிக்கடி ஆஸ்பத்திரிக்கு செல்ல வேண்டிய சூழ்நிலை.

முப்பது வயதே நிரம்பிய இந்த தம்பதியினர் இரு சிறு குழந்தைகளோடு வாழ்க்கையை வாழ முடியாமல் வாழ்கிறார்கள். மற்ற ஆண்களைபோல வேலை சென்று குடும்பத்துக்காக உழைக்க வேண்டும் என்று கணவர் கனவு காண, நான் கணவரை அடிக்கடி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்காமல் வேலைக்கு அனுப்பி வைக்கும் ஒரு நாள் வராதா என்று கனவு காணும் மனைவி. நாளை என்ன நடக்கும் என்று நிலையில்லாத வாழ்க்கை வாழும் இவர்கள் இன்று திருப்தியாக வாழ்கிறார்கள். ஏன் தெரியுமா? இவர்கள் அதிகம் எதிர்பார்க்கவில்லை. பேராசைப்படவில்லை. ஒரு சராசரி வாழ்க்கை - அடிக்கடி ஆஸ்பத்திரி போகவேண்டிய அவசியம் இல்லாத வாழ்க்கை. நோய்நொடி இல்லாத வாழ்க்கை - இதை மட்டுமே இவர்கள் ஆசைப்படுகிறார்கள். அதனால்தான் இத்தனை கஷ்டங்கள் மற்றும் வேதனை மத்தியிலும் இவர்களால் சிரிக்க முடிகிறது.

அடுத்தமுறை உங்களின் வாழ்க்கையை எண்ணி குறைபட்டுக்கொள்ளும் போது, அதிருப்தி அடையும்போது இந்த தம்பதியினர் படும்பாட்டை கொஞ்சம் நினையுங்கள். உங்களின் வாழ்க்கையை உங்களுக்கு திருப்திகரமான ஒன்றாய் தெரியும்.

அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். ■

நவஜோதி ஜோகரட்னம்

# வித்தியாசமான கலை நுட்பங்களை வெளிக்காட்டிய நடன அரங்கேற்றம்

'நடனத்திற்கு மிகவும் பொருத்தமான பாடல்களைத் தேர்ந்தெடுத்து வார்த்தைகளை உணர்ந்து அந்த மனநிலைகளை அபிநயத்தால் வெளிக்காட்டுவது குருவுக்கும் சிடருக்குமான மரபுசார் நுட்பமாகும். இத்தகைய சாஸ்திரீய முறைகளை மிக அழகாகவே குருவிடமிருந்து பயின்று புஷ்பாஞ்சலி, அலாரிப்பு, ஜதீஸ்வரம், சப்தம், வர்ணம், கீர்த்தனம், பதம், அஷ்டபதி, தில்லானா போன்ற அத்தனை உருப்படிகளிலும் செல்வி பிரீத்தி பவித்திரா மகேந்திரன் வித்தியாசமான தனது கலைநுட்பங்களை வெளிக்காட்டியிருந்தார்' என்று அண்மையில் லண்டன் 'பெக் தியட்டரில்'; இடம்பெற்ற பரதநாட்டிய அரங்கேற்றத்தின்போது பிரதம விருந்தினராக வருகை தந்திருந்த ஸ்ரீமதி கீதா உபத்தியா அவர்கள் தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் பேசுகையில் 'நளினமும் உடல்வாகும் நிரம்பப்பெற்ற நாட்டியக் கலாஜோதி பிரீத்தி மகேந்திரனின் நடன வெளிப்பாடுகள், ஸ்ரீ மாணிக்கம் யோகேஸ்வரனின் ராகத்துடனும் சாகித்தியத்துடனும்; கச்சிதமாகவே பொருந்தி, பக்கவாத்தியக் கலைஞர்களான ஸ்ரீ பிரதாப் ராமச்சந்திரனின் மிருதங்கத்தோடும், ஸ்ரீ ஞானசுந்தரத்தின் வயலின் இசையோடும், ஸ்ரீ பிச்சையப்பா ஞானவரதனின் புல்லாங்குழல் இசையுடனும் இணைந்து பார்வையாளர்களை கட்டிப்போட்டது என்றால் மிகையாகாது. எனத் தெரிவித்தார். "சர்வதேச ரீதியாக அறியப்பட்ட புகழ்பெற்ற நடன ஆசிரியையான ஸ்ரீமதி உஷா ராகவனை குருவாகப் பெற்ற செல்வி பிரீத்தி மகேந்திரனின் நடனம் வர்ணிக்கத் தக்க வசீகரமான முறையில் அவரது நடனம் இருந்தது. முதலில் அரங்கேறும் அரங்கேற்றம் போன்றல்லாது, நாட்டியத்தில் நீண்ட அனுபவம் கொண்ட நர்த்தகியாகத் திகழ்ந்தார்" என்றும் பாராட்டினார். 'பிரீத்தி மகேந்திரனின் சில நடனங்களுக்கு அவரின் அண்ணன் டாக்டர் மேவின் மகேந்திரனும் மிருதங்கத்தை வாசித்து மெருகூட்டியமை மிகவும் சிறப்பைக் கொடுத்தது' என்றும் மேலும் வியந்து பேசியிருந்தார்.

திரு. மகேந்திரன் அவர்களின் குடும்ப நண்பராகத் திகழ்பவரும், இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்தவருமான முன்னணி மிருதங்கக் கலைஞர் நெய்வேலி பி. வெங்கடேஷ் அவர்கள் தனது கௌரவ விருந்தினர் உரையில் : '2014ஆம் ஆண்டு பிரீத்தியின் கர்நாடக இசையின் சமர்ப்பணம் 'லண்டன் ஐயப்பன் கோயிலில்' இடம்பெற்றபோது, அதில் தான் கெஞ்சிரா வாசித்ததை நினைவு கூர்ந்ததோடு, வாய்ப்பாடல் மட்டுமன்றி செல்வி பிரீத்தி புல்லாங்குழல் இசையையும் திறமையாக இசைக்கும் கலை ஞானம் படைத்தவர் என்றும் குறிப்பிட்டார். செல்வி பிரீத்தி



மகேந்திரனின் இன்றைய நடன அரங்கின் ஒவ்வொரு உருப்படிகளின் முடிவிலும் பார்வையாளர்களின் வரவேற்புகள் எழுவதைப் பார்க்கும்போது, அவளின் பெற்றோரான வதனி - மகேந்திரன் இருவரும் வளர்ந்துவரும் இளம் கலைஞர்களுக்கும், வசதி குறைந்தவர்களுக்கும் நிறைந்த மனதுடன்; மனமுவந்து வழங்கிய பங்களிப்பின்; பிரதிபலிப்பே என எண்ணத் தோன்றுகின்றது எனக் குறிப்பிட்டார். 'வாழ்க்கையில் புதிய மனிதனாக ஒருவனை உணரவைக்கும் சக்தி கலைக்குத்தான் உண்டென்றும், நவீன வடிவில் புத்துயிர் பெற்று மாற்றம் கண்டு வரும் நவீன உலகில், கலைகளை ஆர்வத்துடன் இளம் தலைமுறையினர் கைத்தொலைபேசிகளினூடாகவும் வளர்த்துக்கொள்ளலாம்' என்றும் மேலும் அவர் குறிப்பிட்டுப் பேசினார்;.

'அபிநயங்கள் பிரமிக்கத் தக்கனவாகவும், பாவங்கள் அலாதியாகவும் இருந்தது. பிரீத்தியின் உடை அலங்காரங்கள் நடன பாத்திரங்களுக்கேற்ப அவளுக்கு அழகு சேர்த்தன. நாட்டிய அரங்கேற்றத்தின் மேடை அலங்காரம் கோயில்களின் புனித இடமாக புதுமையாகக் காட்சி தந்தது' என்று பிரீத்தியின் சக நாட்டிய மாணவியான செல்வி துவாரஹா அருளம்பலம் பார்வையாளராக ரசித்து விவரித்திருந்தமை குறிப்பிடவேண்டிய ஒன்றாகும்

'கலாசாகரா' நடனப்பள்ளியின் நிர்வாகியான ஸ்ரீமதி உஷா ராகவனின் மாணவிகளாலும்;, பிரீத்தி மகேந்திரனின் சக நடனத்தோழிகளாலும், பல்வகைக் கலைஞர்களாலும், கலை ஆர்வலர்களாலும் மண்டபம் நிரம்பியிருந்தமை கண்கொள்ளாக் காட்சியாகின.

# லண்டனில் சிறப்பாக நடந்த கோவிலூரின் நூல் வெளியீடு

முன்னாள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிகழ்ச்சித் தயாரிப்பாளர் கவிஞர், எழுத்தாளர், பாடகர் என்று பல பரிமாணங்களைக் கொண்ட பன்முக கலைஞர் கோவிலூர் செல்வராஜனின் "ஊருக்குத் திரும்பணும்" என்ற சிறுகதை நூல் வெளியீடு இலண்டன் ஈஸ்ட் ஹாம் ஸ்ரீமுருகன் ஆலய அரங்கில் மிக சிறப்பாக நடைபெற்றது. இந்த நூல் ஏற்கனவே இலங்கையில் கொழும்பு தமிழ்சங்கம், மட்டக்களப்பு கண்ணகி கலை இலக்கிய மன்றம் திருக்கோவில் கலாசார மன்றம், கரவாகு கலை இலக்கிய சந்தை ஆகியவற்றினூடாகவும் மற்றும் கனடா, நோர்வே, டென்மார்க் ஆகிய நாடுகளில் உள்ள இலக்கிய அமைப்புகளாலும் அறிமுகம் செய்யப்பட்டிருந்தன. இறுதியாக லண்டனில் இலண்டன் தமிழவை அரவணைப்பில் நடந்திருக்கிறது.



புலவர் ந.சிவநாதன் தலைமையில் நடந்த இந்த விழாவில் பிரதம அதிதிகளாக சட்டவாளர்கள் திரு. திருமதி மு.இரத்னபாலன் கலந்து சிறப்பித்தனர். இலண்டன் தமிழவை அரவணைப்பில் நடந்த இந்த விழாவில் ஆசியுரையை இலண்டன் ஈஸ்ட் ஹாம் முருகன் கோவில் பிரதம குருக்கள் சிவஸ்ரீ நாகநாதக் குருக்களும் வரவேற்புரையை தமிழவைத் தலைவர் திரு.பால.இரவீந்திரனும் தலைமை உரையை தமிழவை ஸ்தாபகர் புலவர் ந.சிவநாதனும் வாழ்த்துரைகளை கவிஞர் திரு.திருமலை பாலா டென்மார்க்கிலிருந்து வந்திருந்த எழுத்தாளர் தருமன்.தர்மகுலசிங்கம் மதிப்பீட்டு உரையை நவஜோதி யோகரட்ணமும் நூல் திறனாய்வை எழுத்தாளர் சக்தி.சக்திதாசனும், வெளியீட்டுரையை கவிஞரும் தமிழறிஞருமான க.மனோகரனும் வழங்கினார்கள்.





ஏற்புரை கோவிலூர் செல்வராஜன் வழங்கினார். இந்த நிகழ்வுக்கு பிரான்சிலிருந்து வந்திருந்த திருமதி சுமந்திரி அரவிந்தன் அவர்களும், சிறப்பு அதிதிகள் திரு.முத்தையா இரத்தினபாலன், திருமதி குலநாயகி இரத்தினபாலன் அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். திருமதி.சுமந்திரி அரவிந்தன் எழுத்தாளரும், ஊடகவியலாளருமான அமரர் கி.பி. அரவிந்தனின் பாரியார் ஆவார்.

தமிழகத்திலிருந்து ப.திருமாவேலன்



# இனி என்னவாகும் தமிழ்நாடு?

நாட்டு மக்களுக்கு ஒரு நற்செய்தி... ஜெயலலிதா இன்னமும் மரணிக்கவில்லை. ஆளாக இருந்து ஆட்டுவித்தவர், இப்போது ஆவியாக இருந்து நூல் கிளப்பி வருகிறார். ஜெயலலிதாவை மேடையில் உட்கார வைத்துக் கொண்டு, "அம்மா நீங்கள்தான் இந்த நாட்டின் நிரந்தர முதல்வர்" என்று பாராட்டிப் போற்றினார்கள். "அம்மா நீங்கள்தான் இந்தக் கட்சியின் நிரந்தரப் பொதுச்செயலாளர்" என்று உச்சி குளிர வைத்தார்கள். அது வெறும் வாய் வார்த்தை அல்ல. நிரந்தரமாய் ஜெயலலிதா இருப்பது போலத்தான் தெரிகிறது நாட்டில் நடப்பதைப் பார்த்தால். இறந்துவிட்டார் என்று சொல்வதெல்லாம் ஒரு சடங்குதான்!

ஜெயலலிதா இருக்கும் போது சசிகலா குடும்பத்தைப் பந்தாடினார். இப்போதும் நின்றாடுவது மாதிரித்தான் தெரிகிறது. ஒருமுறை அல்ல, இரண்டு முறை ஜெயலலிதாவால் கட்சியை விட்டு நீக்கப்பட்டவர் சசிகலா. இறுதியாக உள்ளே சேர்த்துக் கொண்ட போது கூட, 'எந்தப் பதவியும் கிடையாது. கூட இருக்கலாம். அதுவும் சொந்தங்கள் யாரும் வரக்கூடாது. அவர்களைப் பார்க்கக் கூடாது. பேசக்கூடாது' என்ற நிபந்தனையின் அடிப்படையில்தான் சசிகலாவையே போயஸ் கார்டனுக்குள்ளே வர அனுமதித்தார் ஜெயலலிதா. வீட்டுச் சிறை வைக்கப்பட்டது மாதிரிதான் அந்தக் காலகட்டம் சசிகலாவுக்கே இருந்தது. உறவினர்கள் பார்க்க வரமுடியாது. சொந்தக்காரர்களது சுக துக்கங்களில் கலந்து கொள்ள முடியாது. இன்னும் சொன்னால்... கணவர் நடராசன், சகோதரர் திவாகரன் ஆகியோர் ஜெயலலிதாவால் சிறை வைக்கப்பட்ட போதும் போயஸ் கார்டன் வீட்டுக்குள் சசிகலா சமர்த்தாக இருந்தார்.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 22ம் நாள் தமிழ்நாட்டின் மாட்சிமை தாங்கிய முதலமைச்சர் ஜெயலலிதா, யாருக்கும் தெரியாத வகையில் 'சசிகலா சாம்ராஜ்யம்' மட்டுமே அறிய அப்போலோவில் வைக்கப்பட்டார். அந்த 75 நாள்கள் ஆக்கவும் அழிக்கவும் வல்லமை பெற்றவராக சசிகலா மட்டுமே இருந்தார். முப்படைகளையும் வைத்திருக்கும் பாரதப்பிரதமரே மூன்று முறைபார்க்க வருகிறேன் என்று சொன்ன பிறகும், வரக்கூடாது. பார்க்க முடியாது' என்று தடுக்கும் வல்லமை சசிகலாவுக்கு இருந்தது. எட்டுக்கோடி மக்களின் பிரதிநிதியான ஜெயலலிதாவை சசிகலா, நடராசன், தினகரன், திவாகரன், டாக்டர் வெங்கடேஷ், டாக்டர் சிவக்குமார், அப்போலோ ரெட்டி, அன்றைய பொறுப்பு முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆகிய எட்டுப்பேரால் மறைக்க முடியுமானால், ஒரு மாநிலம் எப்படி மர்ம தேசமாக மாறிப் போனது பாருங்கள்.

அப்போலோவில் என்ன நடந்திருக்கும், நடந்தது என்ன என்பது நம்மைவிட பிரதமர் நரேந்திரமோடி, மத்தியில் ஆளும் கட்சியான பா.ஜ.க.வின் தலைவர் அமித்ஷா, மகாராஷ்டிர கவர்னராக இருந்து தமிழ்நாட்டுக்கு அவ்வப்போது வந்து செல்லும் வித்யாசாகர்ராவ் ஆகிய மூவருக்கும் தெரியும். அவர்கள் சசிகலா குடும்பத்தை மிரட்டுவதும், சசிகலா குடும்பம்



மிரள்வதும் இதனால்தான்.

பெரியகுளத்தில் தயாரான கத்தி துரோகம் செய்ததால் எடப்பாடியில் தயாரான கத்தியைப் பயன்படுத்த நினைத்தார் சசிகலா. கண்கள் கலங்க...எடப்பாடியின் தோளில் தட்டி... பதவிப் பிரமாணத்துக்குத் தயார் செய்து அனுப்பினார். அந்தக் கத்தியும் துரோகம்தான் செய்தது. ஏனென்றால், இவர்கள் தயாரிக்கும் கத்திகள் அப்படித்தானே இருக்கும். இருக்க முடியும்?

தனியாய் நின்றால் எடப்பாடிப் பஞ்சாயத்து வார்டில் மட்டுமே வெல்லும் வல்லமை பெற்ற பழனிசாமி, இப்போது தமிழ்நாட்டின் முதலமைச்சர். ஏதோ தன்னால்தான் 134 தொகுதிகளிலும் இரட்டை இலை வென்றது என்ற தோரணையில் அவர் ஜெயலலிதா உட்கார்ந்த நாற்காலியில் அமர்ந்ததும்... இவருக்கு ஏதோ உலக பயங்கரவாத இயக்கங்களின் அச்சுறுத்தல் இருப்பது போல பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் பயணம் செய்வதும்.. கூட்டங்களுக்கு ஆயிரக்கணக்கில் பள்ளி மாணவ மாணவிகளை அழைத்து வந்து அமர வைப்பதும் யாரோ எழுதிக் கொடுத்த குட்டிக் கதைகளை அதன் உள்ளார்த்த சுவாரஸ்யங்கள் உணராமல் உணர்ச்சியில்லாமல் வாசிப்பதும் என 'சந்திரமுகி'யாகவே மாறினார்.

மகாமகத்தில் ஜெயலலிதா குளித்தார். அவருக்கு சசிகலா தண்ணீர் வார்த்தார். சசிகலாவுக்கு ஜெயலலிதா தண்ணீர் வார்த்தார். நல்லவேளை காவிரி புஷ்கர விழாவில் அந்தக் காட்சி நடக்கவில்லை. ஒருவேளை நல்ல நட்பு இருந்திருந்தால் இ.பி.எஸ் தலையில் ஓ.பி.எஸ். தண்ணீர் ஊற்றும் காட்சியைப் பார்த்திருப்போம். ஓ.பி. எஸ்.தலையில் இ.பி.எஸ்.தண்ணீர் ஊற்றும் காட்சியையும் பார்த்திருப்போம். இருவரும் பட்டன் கத்தியை மடக்கி வைத்துக் கொண்டு ஒன்று சேர்ந்தவர்கள் என்பதால் தண்ணீர் பீய்ச்சி விளையாடவில்லை. ஜெயலலிதா இருந்திருந்தால் பாத்ரூமில் குளிக்கும்போதே பாட்டுப்பாட முடியாதவர்கள் அவர் செத்துப் போனதால் காவிரியில் கதாகாலட்சேபம் நடத்துகிறார்கள்.

இன்றைய தினத்தில் தமிழ்நாடு அரசுக்கும் சசிகலா குடும்பத்துக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை, டாஸ்மாக் கடைகளுக்கு மிடாஸ் சரக்குகளை வாங்குவதைத் தவிர, இன்றைய தினத்தில் அ.தி.மு.க என்ற கட்சிக்கும் சசிகலா குடும்பத்துக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை, தேர்தல் ஆணையத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களில் சசிகலா, தினகரன் பெயர் இடம் பெற்றிருப்பதைத் தவிர. ஜெயலலிதாவின் நட்பை மட்டுமே மூலதனமாக்கி உள்ளே நுழைந்து கட்சியையும் ஆட்சியையும் கபளீகரம் செய்யத் துடித்த ஒரு குடும்பத்துக்குப் பின்னடைவு ஏற்பட்டது தமிழ்நாட்டு அரசியலில் நல்லதுதான். ஆனால், இன்றைய பழனிசாமியும் பன்னீரும் சசிகலா குடும்பத்தின் காலில் திரும்பவும் விழமாட்டார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

ஒட்டிக்கிடப்பதும் வெட்டிக் கொள்வதும், அதன்பிறகு ஒட்டிக் கொள்வதும் அ.தி.மு.க. அரசியல் வரலாற்றில் முன்பே நடந்ததுதான். அப்போது அந்தக் கட்சி ஆட்சியில் இல்லை. அதனால் அசிங்கம் அனைத்தும் அந்தக் கட்சிக்குள்ளேயே நடந்து முடிந்துவிட்டது. அது ஆட்சியில் வீசவில்லை. ஆனால், இன்று அந்தக் கட்சியே ஆட்சியில் இருக்கிறது. போயஸ் கார்டனுக்குள்ளும், அவ்வை சண்முகம் சாலைக்குள்ளும் நடந்து முடிய வேண்டியவை தமிழ்நாட்டு அரசியல் தலைமைச் செயலகத்துக்குள்ளும், பாரம்பர்யம் கொண்ட சட்டசபைக்குள்ளும் நடக்க ஆரம்பித்திருப்பதுதான் வேதனை.

மக்கள் மன்றத்திலும் சட்டமன்றத்திலும் இதுவரை நடந்த விவாதம் நீதிமன்றத்தில் தொடங்கியிருக்கிறது. மக்கள்தான் பரிதாபமாக முழிக்கிறார்கள். தங்களது வழக்குகளில் வாதங்களை வைப்பதற்கு டெல்லியிலிருந்து வழக்கறிஞர்களை அழைத்து வந்தார்கள் எடப்பாடியும் தனபாலும் ஸ்டாலினும் தினகரனும். இந்தப் பிரச்னையையே டெல்லிக்காரர்களால்தான் முடித்து வைக்க முடியும் என்று நினைத்தார்களா? நினைக்கிறார்களா?

ஆனால், ஒன்று. பிரச்னையே டெல்லிக்காரர்களால் தான் வந்தது. அப்போலோ மருத்துவமனையில் ஜெயலலிதா இருக்கிறாரா இல்லையா என்பதையே விசாரிக்காமல், ஜெயலலிதாவைப் பார்க்க முடியாது என்று சொன்ன போது ஏன் என்று கேட்காமல், தேர்தல் ஆணையத்தின் ஆவணத்தில் கையெழுத்துப் போடாமல் கைநாட்டு வைத்ததைக் கேள்வி கேட்காமல் 75 நாள்கள் யார் தமிழக அரசின் முக்கிய முடிவுகளை எடுக்கிறார்கள் என்பதையே விசாரணை நடத்தாமல் விட்டவர்கள் யார்?

எடப்பாடி, பன்னீர் இருவரையும் வாரந்தோறும் டெல்லிக்கு வரவைத்துப் பார்த்ததும், அவர்கள் இருவரையும் சேர்த்து வைத்ததும், முதலமைச்சர் மீது நம்பிக்கை இல்லை என்று 21 உறுப்பினர்கள் கடிதம் கொடுத்த பிறகும் அவர்களை அழைத்து விசாரணை நடத்தாமலும், அது அவர்களது சொந்தக் கட்சிப் பிரச்னை என்று தட்டிக் கழித்தும், சென்னைக்கே கவர்னர் வராமலும் தமிழகத்துக்கு நிரந்தர கவர்னர் போடாமலும் டெல்லி பா.ஜ.க. தலைமையும் மத்திய ஆட்சியும் செய்துவரும் காரியங்கள்தான் இவ்வளவுக்கும் காரணம்.

எடப்பாடியும் பன்னீரும் தினகரனும் வெறும் அம்புகள்தான். வம்பு டெல்லியில் இருக்கிறது. தமிழ்நாட்டை என்ன செய்ய நினைக்கிறார்களோ? ●

தத்துவாமிர்தமணி சிவஸ்ரீ பா.வசந்தக்குருக்கள் B.A(Hons)

# திருநீற்றின் மகிமை

சைவ சமயத்தின் சிவ சின்னங்களில் மிக உயர்ந்தது விபூதி. பூதி என்றால் செல்வம் அதாவது மேலான செல்வம் என்பது மட்டுமன்றி உடம்புக்கும் குறிக்கப்படும். பூதங்களால் அதாவது பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்டமையால் பூதி என்று உடலைச் சொல்லுவார்கள். ஆகவே உடலில் புனிதமாக விசேடமாக அணியப்படுவதாலும் விபூதி எனப்படும். வாழும் போது ஆன்மாவுடன் கிடைத்த சரீரத்தை இணைத்து இறை அருளைப் பெற்றுத் தருவது விபூதி ஆகும். இது ஆன்மீக கவசமாகவும் கூறப்படும். "கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை மங்காமல் பூசி மகிழ்வரே யாம் ஆகில்" என திருமூல நாயனார் குறிப்பிடுகிறார். இங்கு மங்காமல் என்பதற்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று எமது நெற்றியிலும் அது எப்போதும் மங்காமல் இருக்க வேண்டும் அதே வேளை திருநீற்றின் பெருமையும் மங்காமல் இருக்க வேண்டும். சைவ மேன்மை விளங்க வேண்டும். "வென்றிகொள் திருநீற்றின் ஒளியினில் விளங்கும் மேன்மையும் படைத்தனம்" என சேக்கிழார் கூறுகிறார். மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு என சம்பந்த சுவாமிகள் கூறுவார். அத்துடன் சமயத்தில் உள்ள நீறு எனவும் கூறினார். இங்கு சமயம் என்பது எமது சைவ சமயம் மாத்திரமின்றி எப்போதும் நற்காரியங்கள் அசுப காரியங்கள் எந்த சமயத்திலும் நாம் விபூதி அணிகிறோம் அல்லவா அப்படி எல்லா நேரத்திலும் அணிய வேண்டியது திருநீறே. பார்வை பார்த்தல் என்ற ஒரு வகை நம்பிக்கை வழிபாடு உண்டு குழந்தைகள் திடுக்கிடுதல் மருத்துவத்திற்கும் அகப்படாத சிறு குறைபாடுகளை மந்திரங்கள் ஓதி விபூதியை உடல் முழுவதும் தூவும் முறை இன்றும் உண்டு. இதனைத்தான் பார்வை பார்த்தல் அல்லது விபூதி போடுதல் என்று கூறும் வழக்கம் உண்டு. அதனை ஆரம்பித்தவர் திருஞானசம்பந்த சுவாமிகள். பாண்டியன் வெப்பு நோயை நீக்கியது திருநீறே.

விஞ்ஞான பூர்வமாகவும் திருநீறுக்கு மகிமை உண்டு பசுவின் சாணகம் மருத்துவ குணம் உடையது. இதிலிருந்து சாண எரிவாயு பயன்படுத்தும் முறையும் உண்டு. ஏனென்றால் ஒரு உயிரினத்தின் கழிவுப் பொருளும் எடுப்பதில்லை. ஆனால் பசுவின் கழிவுப் பொருளாகிய சாணகம் உயர்வு நிலைக்கு சைவ சமயம் எடுத்துள்ளது என்பதால் சைவ சமயமும் விஞ்ஞானமும் எவ்வளவு நெருக்கம் உடையது என நாம் உணரலாம். முன்பு பல வீடுகளில் கூட்டி கழுவி சாணக நீர் தெளிப்பார்கள். சாணகத்தால் மெழுகி இருப்பார்கள். அந்த இடம் குளிர்மையாகவும் நோய்க்கிருமிகள் அணுகாத



இடமாகவும் இருந்துள்ளமை அறியப்பட்டது. பசுவின் எருவிற்கு கோமயம் என்று பெயர். சைவர்களுக்கு எங்கும் சிவமயமும் கோமயமும்தான் என்பது உறுதியாகிறது. கோமயம் ஒரு கிருமி நாசினி என்பது விஞ்ஞான உண்மை. பஞ்ச கவ்விய பூஜையில் கோமயம் கிடைக்காது விடின் விபூதி கொஞ்சம் போட்டு பூஜை செய்யலாம்.

ஆயுர்வேத மருந்துகளிலும் கோமயம் கோசலம் பயன்பட்டுள்ளது. பசுவின் பின்புறத்தில் லட்சுமி வாசம் செய்வதாக நூல்கள் கூறுகின்றன. எனவே விபூதி பூசினாலே செல்வம்தான். தனியாக பொருள் மட்டும் இருப்பது தான் செல்வமல்ல செல்வம் கழல் ஏற்றும் செல்வம் செல்வமே என்பதுதான் நாயன்மார்கள் முடிவு. திருநீற்றின் சிறப்பை ஆறுமுக நாவலர் அவர்கள் திருநீற்றியல் என்னும் பகுதியில் அருமையாக விளக்கியுள்ளார். பெரியவர்கள் குருமாரிடம் இருகை நீட்டி வங்கி அண்ணாந்து சிவ சிவ என்று வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் சிவ சிவ என்று சொல்லி அணிதல் வேண்டும். சிவாலய தர்சன விதி பற்றி மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் பாடல் ஒன்றும் இங்கு நாம் கவனிக்கலாம்.

நிறை அருட்பாடலாகி நிரம்பு தேவாரம் பாடும்
அறைதிருவாசகம் சீர் அமைய இசைப்பல்லாண்டு
குறைதவிர்புராணம் இன்ன கொண்டுறந் துதித்தல் செய்து
மறைபுகழ் விபூதி மேனி வளைந்திரு கையால் ஏற்க.

ஆலயங்களில் பூஜைகள் நிறைவுற்று அங்கு தரப்படும் விபூதியை இருகைகளால் வாங்கி அணிய வேண்டும். உத்தூளனம், திரிபுண்டரம் என இருவகையாகப் பூசலாம். தீட்சை பெறாதவர்கள் உத்தூளனமாக அணிவர். சைவ சமயிகள் அனைவரும் தீட்சை பெறுவதே நன்று. தீட்சை பெற்றவர்கள் பதினாறு இடங்களில் இதனை தரிப்பார்கள். அந்த பதினாறு இடங்களும் எமது உடலின் அதி முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள். முக்கியமாக வயிற்றுக்கு கீழ் விபூதி அணியக்கூடாது என்றாலும் முழங்கால் என்ற இடம் தீட்சையில் கூறப்பட்டுள்ளது. தலை, நெற்றி, முதுகு, கழுத்து நெஞ்சு, வயிறு, தோள், முழங்கை, மணிக்கட்டு இவையெல்லாம் அதிகமான மூட்டுப்பகுதிகள் அங்கு வரும் நோய்களை தடுப்பதற்கு மருத்துவ குணம் உள்ள விபூதி அணிவதுடன் இறையருளும் இணைகிறது.

முழங்கால் வாதம் மிகவும் அதிகம் எல்லோர்க்கும் வரும். அங்கும் விபூதி அணிவதால் வாத நோய்கள் குணப்படும் என்பதை அறிந்த முன்னோர்கள் தீட்சை முறையில் முழங்காலையும் உட்படுத்தி இருப்பது எமது சமயத்தின் ஆரோக்கிய தன்மையையும் உணரலாம்.

விபூதி வெண்மை, தூய்மை, பாவ வினைகளை அறுப்பது, அக்னியின் வடிவமாகப் போற்றப்படுவது எனப்பல சிறப்புக்களை உடையது. இறைவ்னும் ஜோதி வடிவம் திருநீறும் அக்னி ஆகிய ஜோதி வடிவம். எனவே இறைவன் வடிவமான விபூதியை அணிய வேண்டும். அது எமது உடலையும் உள்ளத்தையும் சுத்தப்படுத்தி ஆன்மாவை தூய்மையாக்கி இறை அருளை உள்வாங்கித் தருகிறது.

**ஒளி தரு நீற்றை உயர்வுறப் போற்றி**
**களிபெருக காலமெல்லாம் கனிவுடன் பூசி**
**இறையருள் மிகப் பெருக அன்புடன் ஏற்று**
**வழிவழியாய் விபூதி பெருமையை போற்றுவோம்**

# சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் 4வது ஆண்டு விழா

மன்னார் மாவட்டத்தில் சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் 4வது ஆண்டு விழா மன்னார் அறநெறி பாடசாலையுடன் இணைந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட சைவ மக்களுடன் சமய பேரணியுடன் "இந்து மாநாடு" மிக சிறப்பாக 08-10-2017 அன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் பேரூர் ஆதின தவத்திரு மருதாசல அடிகளாரும், சொல்வேந்தர் சுகி சிவம் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

அத்துடன் நல்லை ஆதின சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும், சரவதேச இந்து இளைஞர் பேரவை ஸ்தாபகர் சி.கணேஸ்குமார், பேராதனை தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன், பிரதி அதிபர் ஆசிரியர் கலாசாலை லஸீசன், தமிழருவி த.சிவாகுமாரன், சட்டத்தரணி விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம் திருமதி கோசலை மதன், பாராளுமன்ற உறுப்பினர் சி.யோகேஸ்வரன் மற்றும் பலர் சிறப்பு விருந்தினர்களாகவும். லண்டனிலிருந்து ரீ.யோகநாதன்,





வி.கணேசமூர்த்தி, எஸ்.பரமேஸ்வரன் ஆகியோரும் மற்றும் ஈழத்திலுள்ள சிறப்பு பேச்சாளர்களும், கலைஞர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

மாணவர்களின் பண்ணிசை, நடனம், நாடகம், பேச்சு என பல கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் மன்னார் மக்கள் தமது கலாச்சார ஆடைகளை நந்தி கொடியுடன் சைவசமய உணர்வுகளுடன் நின்றதை காணக்கூடியதாக இருந்தது. தமிழையும், சைவத்தையும், கலைத்திறமையும் எமது வருங்கால சந்ததியில் வளர்க்கும் நோக்கிலும், எமது சமூகத்திற்கு பல நற்பணி ஆற்றுபவர்களை கௌரவித்து ஊக்கம் அளிக்கும் வகையிலும் சி.கணேஸ்குமார் அவர்களால் லண்டனில் 2012ம் ஆண்டு, இலங்கையில் 2013 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச இந்து இளைஞர் பேரவை இன்று பெரும் வளர்ச்சியில் ஓங்கி நிற்பதை காணமுடிகிறது.

# லண்டன் சமூக சேவகர்களுக்கு வவுனியாவில் கௌரவிப்பு

வவுனியாவில் 07-10-2017 அன்று நடைபெற்ற முத்தமிழ் விழாவில் லண்டனில் சைவசமய பணிகளை ஆற்றிவரும் திரு வி.கணேசமூர்த்தி அவர்களுக்கு "சிவநெறிப் புரவலர்" (லூசியம் சிவன் ஆலய அறங்காவலர்) எஸ்.பரமேஸ்வரன் அவர்களுக்கு"இறைபணி ஏந்தல்" (லூசியம் சிவன் ஆலய அறங்காவலர்) ரீ.யோகநாதன் அவர்களுக்கு "அருள் நெறித்தொண்டர்" (ஈலிங் கனகதுர்க்கை ஆலய நிர்வாகசபை தலைவர்) ஆகியோர்களுக்கு பேரூர் ஆதின இளையவர் முனைவர் தவத்திரு மருதலாசல அடிகளார் விருது வழங்கி கௌரவித்து ஆசிர்வதித்தார் இவ் விழாவில் தமிழருவி க.சிவகுமார், சர்வதேச இந்து இளைஞர் பேரவை ஸ்தாபகர் சி.கணேஸ்குமார், வலய கல்விப்பணிப்பாளர் மு.இராதாகிருஸ்ணன் ஆகியோர் உரையாற்றினர்.





மாதவி சிவலீலன்

# சொந்த மண்ணைப் பிரிந்த வலி தவிப்புகளைப் பதிவு செய்யும் தர்மினி

யாவுமாகி இந்தப் பிரபஞ்ச இயக்கத்திற்கு காரணமாகி வாழ்கின்ற பெண்கள் தமக்கான உணர்வுகளுக்கான வடிகாலாக எழுத்தைக் கையிலெடுக்கின்ற போது அவர்களுக்கேயுரித்தான உலகத்தை இலக்கிய உலகம் கண்டு கொண்டது. அது கற்பனைகளுக்கு அப்பாற்பட்டதாக வலிமைகளின் உச்சங்களைத் தன்னில் அடக்கியதாக தம்மைத் தாமே ஆற்றுப்படுத்திச் சென்றது. தமிழ்ப் பெண் கவிஞர்கள் என்கின்றபோது சங்கத்தமிழ்ப் பெண்புலவர்கள் பலர் மனக்கண்ணில் தோன்றினாலும், ஔவையார் போன்றோரை முதல் கொண்டு ஆண்டாள், காரைக்கால் அம்மையாரெனத் தனித்துவமான கவிப்பாரம்பரியத்தைத் தோற்றுவித்த பெண்களை வரலாற்றில் கண்டு கொண்டோம். அதன் தொடர்ச்சியில் ஈழத்துத் தமிழ்ப் பெண் கவிஞர்களை அடையாளப்படுத்தலே இக்கட்டுரையின் நோக்கமாகவுள்ளது.

ஈழத்தில் வடபகுதியின் அழகுமிகு தீவுகளில் ஒன்று அல்லைப்பிட்டி அங்கிருந்து போரின் வதையிலிருந்து தப்பி வந்த பல்லாயிரக்கணக்கான மனிதர்களில் ஒருவராக விளங்கும் தர்மினி, தற்போது பிரான்சில் வசித்து வருகின்றார். 'சாவுகளால் பிரபலமான ஊர் (2010)', 'இருள் மிதக்கும் பொய்கை (2016)' எனும் இரு கவிதைத் தொகுதிகளை பிரசுரித்திருக்குமிவர், தூமை, எதிர் ஆகிய இணையத்தளங்களின் ஆசிரியர் குழுவிலும் அங்கத்துவம் வகித்துச் செயற்படுகின்றார்.

சொந்த மண்ணைப் பிரிந்த வலியும் போரினால் வாழ்வைத் தொலைத்த அப்பாவி மக்களின் துயரங்களையும் அந்நியத் தேசங்களில் தனித்தலையும் மனதின் தவிப்புக்களையும் தன் கவிதைகளில் பதிவு செய்யும் தர்மினி, தன் வாழ்விற்கான தளங்களைக் கவிதைகளின் மூலம் கடந்து செல்கின்றார். சாவுகளினால் பிரபலமான ஊர் கவிதைத்தொகுதி போரின் இடர்கள் பலவற்றை முன்னிறுத்துகின்றது. அங்கு மனித அவலங்களே பேசு பொருளாகி மனதைக் கலங்க வைக்கின்றன. தனது ஊர் பற்றிப் பேசுகையில்,

'எலும்புகள் எடுத்தல்'
'குண்டுகள் வெடித்த கடைகள்'
'இடித்த பள்ளிக்கூடம்
'வெடி வைத்த கோயில்'
'உயிரோடு எரித்தல்'
'கிணறுகளிற் கிழிந்த உடைப்பெண்கள்'

இப்படிப் பத்திரிகைத் தலைப்புகளாற் பிரபலமானது இவ்வூர் (சாவுகளால்) எனக் குறிப்பிடுகின்றார். அதுவே யுத்தகால நாளாந்தச் செய்திகளின் பல்வேறு தருணங்களை மீட்கச் செய்கின்றது. அத்துடன் விலாசமென சிவப்புச் சேலை சிறுசதுரம் அகன்ற ஆலமரம் அருகில் இரு பாலைமரங்கள் அக்கராயன் கிளிநொச்சி (சாவுகளால்) என அடையாளப்படுத்துகின்றார். இன்னொரு கவிதையில் தனது மக்கள், நத்தையின் கூடு போன்ற வீடொன்றை நினைந்து வெதும்பியபடியே ஏதோ ஓரிடத்தை நோக்கி ஓடிக் கொண்டிருப்பார்கள் (சாவுகளால்) எனச் சொல்வதினூடாக அகதி வாழ்வில் சூந்த இடம் தேடியலைந்த அல்லலுறு நினைவுகளைக் கிளரச் செய்கின்றார். புலம்பெயர் சூழலில் வேலையிடத்தில் விடுமுறைக்கு உன்நாட்டிற்கு அல்லது உன் வீட்டிற்குப் போகவில்லையாவெனக் கேட்பது சாதாரண சம்பாஷனை. ஆனால், அது தரும் வலியை இவர் குறிப்பிடும் போது,

கோடை விடுமுறைக்கு வீடு போகவில்லையா
நட்புகள் விசாரணை
அங்கிருக்கும் ஊரில் எங்கிருக்கிறது என் வீடு?
வீடென்பது
என் ஞாபகங்கள் (இருள்)

என்று அந்த துயரைக் கூறுகின்றார். மனிதத்தைக் கொன்ற போர்களைப் பதிவு செய்யும் போது பிணற்காட்டில் செத்துக் கிடந்த பிள்ளைகளை பெற்றவரை துணையை அயலவரை நீள் வரிசைகளில் நின்று கேட்கின்றனர் எந்த நிவாரணத்தில் வழங்குவீர் (சாவுகளால்) எனச் சாட்டையாகச் சாடுகின்றார். இது போன்றே நிகழ் தகவு கவிதை இராணுவ வீரனது அவமான வாழ்வைச் சொல்வதையும், குருதியிலெழுதும் கற்பிதங்கள் கவிதை மதங்களின் பெயரால் உலகின் அனைத்துச் சிறைகளிலும் கொல்லப்படுகின்ற மனிதர்களையும் பேசுகின்றது.



யுகந்தோறும் போர்கள் குழந்தைகளையும், பெண்களையும் முதியோரையும் அப்பாவிகளையும் தண்டித்தே தம் வெற்றியைப் பிரகடனப்படுத்தி வந்திருக்கின்றன. அவற்றின் அடிப்படையிலேயே, பேசத் தொடங்காத மழலைகள் யுத்தம் புரியாத குழந்தைகள் அரசியல் அறியாச் சிறுவர்கள் ஆயுதங்கள் மிரட்டும் போதெல்லாம் அஞ்சி நடுங்கி எதை நினைத்து அலறுவர்? (சாவுகளால் பக்-59) என்கின்றார். இவ்வாறே தந்தையைத் தேடும் குழந்தையின் மழை நாளையும் அடையாள அட்டையின் தேவையையும் குறிப்பிடுகின்றார். 1995ஆம் ஆண்டு யாழ்குடா நாட்டிலிருந்து மக்கள் ஒரே நாளில் ஒரே இரவில்



வீதிக்கு வந்த அவலம் வார்த்தைகளுக்குள் அடக்க முடியாத சோகம். ஆனால், அதனைத் தெளிவாகச் சுருக்கிச் சொல்லும் இவர் கவிதையாற்றல் பின்வருமாறு அமைகின்றது.

*அதே நாட்கள்*
*அதே மழை*
*அதே வீதி*
*அதே நாவற்குழிப்பாலம்*
*அதே சாவகச்சேரி*
*அதே கிளாலி*
*அதே கிளிநொச்சி*
*அதே பசி*
*அதே அந்தரிப்பு அதே ஆதரிப்பு*
*நாங்கள் கிட்டத்தட்ட ஐந்து லட்சம் சனங்கள் (இருள்)*

அத்துடன் படிமங்கள் குறியீடுகள் மூலம் பெண்ணின் இருப்பையும் வாழ்வின் நெருடல்களையும், தொட்டுக் காட்டுகின்றார். அவளொருத்தி கிறிய படம், மணற்பெண், இலையின் பிழை போன்ற கவிதைகள் இவ்வரிசையில் வைத்துப் பார்க்கப்பட வேண்டியவை. மென்னிதழ் மென்னிதயம்

*உடையவரெல்லாம் பூவென்றழைக்கத் தகுந்தவரெனில்*
*ஒரு பெண்ணைத்தான் பூவென்று சொல்ல*
*வேண்டுமென்றில்லை (இருள்)*

என்கின்ற தர்மினியிடம் உள்ள நியாயத்தை விருப்பத்தை மனதை விளங்கிக் கொள்ள முடிகின்றது. இது தவிர அயல் வீட்டு யன்னல் எல்லாம் சனம் வந்து

**சொந்த மண்ணைப் பிரிந்த வலியும் போரினால் வாழ்வைத் தொலைத்த அப்பாவி மக்களின் துயரங்களையும் அந்நியத் தேசங்களில் தனித்தலையும் மனதின் தவிப்புக்களையும் தன் கவிதைகளில் பதிவு செய்யும் தர்மினி, தன் வாழ்விற்கான தளங்களைக் கவிதைகளின் மூலம் கடந்து செல்கின்றார்.**



வேடிக்கை பார்க்கத் திட்டிய கணவன் அடுத்த நாள் வந்து மன்னித்துவிடு என்கின்றான்.

என் ஒரு காதுச்சவ்வும் அதிராத அவ்வசனம்

எட்டிப் பார்த்து அத்தனை வீடுகளுக்கும் எப்படிக் கேட்கும் (சாவுகளால்) என எமைக் கேட்பது ஒரு பெண்ணின் கையாலாகாத்தனத்துடனான வலியை உணர்த்துகின்றது. நோவா, காகம், சம்மனசு, ஆதாம், ஏவாள், அப்பிள் போன்ற பைபிள் குறிப்புகளினூடாகவும் கவி சொல்லும் பாவனையும் நோக்குதற்குரியனவாகின்றன.

பிறந்து வளர்ந்து ஆசைகள் பலவற்றைச் சுமந்து கொண்டிருந்த வேளை திடீரென எந்த விதத்திலும் ஒட்டாத அந்நிய மண்ணில் நூல் பிடித்து மேலெழும்புதல் என்பதன் நோவுகளையும் எதிர்கொள்ளும் வசவுகளையும் வலிமைகளையும் தனக்கேயுரித்தான வகையில் தன் அந்நிய வாழ்வின் அனுபவங்களின் வழி நின்று பதிவு செய்திருப்பதும் பெற்றதன் விளைபொருளாகின்றது. தர்மினியின் 'இருள் மிதக்கும் பொய்கை' கவிதைத் தொகுப்பின் தலைப்பே இவரின் கவிப்பொருள் தாங்கிக் கிடக்கின்றது. நூல் முழுவதும் இரவுகளையும் இருளையும் அது தருகின்ற தனிமைகளையும் அவற்றினூடாக பிரவகிக்கும் எண்ணங்களையும் அவற்றோடு ஊடாடுகின்ற மனோபாவங்களையும் எழுத்தாக வடித்திருக்கின்றார். இவருக்குத் தனிமையும் மென்னிருளும் தருகின்ற சுதந்திரம் தன் படைப்பாற்றலுக்கு உந்துசக்தியெனக் கூறுமிவர் தன்னைப் பருகச் சொல்கிறது இரவு என அதனை உள்வாங்கி அதில் நின்று கொண்டு பேச வேண்டிய அனைத்தையும் பேசுகின்றார். இரவின் கணங்கள் ஒவ்வொன்றையும் அதன் சலனங்களையும் ஆழமாக அனுபவித்துக் கவியாக்கியமையைக் கவிதைகள் பலவும் சுமந்து நிற்கின்றன. பெரும்பாலான கவிதைகளினதும் நிறைவுப் பகுதிகள் சொல்லும் சேதிகள் கவிதை வாசிப்பின் பின்னும் வாசகர் மனதைத் துரத்துவனவாக உள்ளன. இதுவும் இவரது கவிதைக்கான வெற்றிகளிலொன்றெனலாம்.

(மீண்டும் இன்னொரு பெண் கவியுடன்)

# ஈழத் தமிழ் இளைஞனுக்கு விருது வழங்கி கௌரவித்த பிரித்தானிய பிரதமர்

மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் கற்கும் ஈழத் தமிழ் மாணவர் ஒருவர் பிரித்தானிய பிரதமரினால் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

வளரும் நாடுகளுக்கு உயிர் காக்கும் மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்காக தனது சொந்த செலவில் தொண்டு நிறுவனத்தை உருவாக்கியமைக்காகவே அந்த மாணவர் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

முழுநேர மருத்துவ பட்டப்படிப்பைத் தொடரும் 24 வயதான ராதவன் குணரட்ணராஜா என்ற இளைஞர், *Little Things* என்ற பெயரில் தனது தொண்டு நிறுவனத்தை இயக்கி வருகிறார்.

தன்சானியாவில் ஒரு மருத்துவமனையில் தன்னார்வ தொண்டு நிறுவனத்தை ஆரம்பித்தவர், மற்ற நாடுகளில் மருத்துவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளார்.

குறித்த மாணவனின் தொண்டு மற்றும் நிதி திரட்டும் அமைப்பின் பணி பிரித்தானிய பிரதமர் தெரசா மே மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய தன்னார்வமாக பணிபுரியும் மக்களுக்கு வழங்கப்படும் பிரித்தானியாவின் 787வது *Point of Light* விருதும் அந்த மாணவருக்கு, பிரித்தானிய பிரதமரால் வழங்கப்பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டில் *Little Things* தொண்டு நிறுவனத்தை ஆரம்பித்ததிலிருந்து ராதவன் மூன்று



சுகாதார திட்டங்களை முன்னெடுத்துள்ளார்.

இந்த திட்டங்களுக்கு அவசியமான 95,000 பவுண்ட் நிதி சேகரிப்பதற்காக பிரித்தானியா முழுவதும் உள்ள தன்னார்வ மாணவர்கள் உதவியுள்ளனர். இந்த தொண்டு நிறுவனத்திற்காக நிறுவனங்கள், பாடசாலை மற்றும் உள்ளூர் சமூகத்தினரின் ஆதரவுகள் பெற்று வரப்படுகின்றது.

கடந்த 2015ஆம் ஆண்டு அவரது முதல் திட்டமாக தன்சானியாவிலுள்ள கண் மருத்துவமனைக்கு உதவிகளை மேற்கொண்டிருந்தார்.

அதன் பின்னர் 2016ஆம் ஆண்டு இலங்கை கிளிநொச்சி குழந்தை மருத்துவமனைக்கு உதவிகளை வழங்கியிருந்தார். தெல்லிப்பழை மருத்துவமனைக்கும் அவரது இரண்டாவது திட்டத்தின் ஊடாக உதவப்பட்டது.

தற்போது அவர் நேபாளத்தில் உள்ள *Tamakoshi* மருத்துவமனைக்கு உதவுவதற்காக 50,000 பவுண்ட் நிதி சேகரித்து வருகின்றார்.

பிரித்தானியாவில் வாழ்ந்து வரும் ராதவனுக்கு பிரதமரின் விருது மேலும் ஊக்கப்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார். இது தனது தனிப்பட்ட சாதனை அல்ல எனவும் தனக்கு பின்னால் உதவுவதற்கு தன்னார்வமாக பலர் உள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதே வேளை, ராதவனுக்கு ஒரு தனிப்பட்ட கடிதம் அனுப்பிய பிரதமர் தெரசா மே, "உங்கள் வேலை ஆயிரக்கணக்கான மக்களுக்கு முக்கிய மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படுவதோடு, உலகெங்கிலும் உள்ள சமூகங்களில் உண்மையான வித்தியாசத்தை உருவாக்குகிறது. உங்கள் உறுதிப்பாடு மிகவும் பாராட்டுக்குரியது. அதற்காக மற்றவர்களிடம் நீங்கள் ஊக்கப்படுத்தியதைப் பற்றி நீங்கள் பெருமிதம் கொள்ள வேண்டும்" என குறிப்பிட்டுள்ளார்.

## 5ம் பக்க தொடர்ச்சி

"இது உன் தவறு அல்ல. உன் பெற்றோர் வற்புறுத்தியதால் என்னைத் திருமணம் செய்திருக்கத் தேவையில்லை. நீயே விவாகரத்துக்கு விண்ணப்பம் செய். என் மீதே நடத்தை சரியில்லை என்று குற்றச்சாட்டைப் போட்டு விவாகரத்தைப் பெற்றுக் கொள்" என்கிறாள் அல்தியா.

மனைவியான உன்னுடன் உடல் உறவு எனக்கு ரசிக்கவில்லை . யாரையோ நினைத்தபடி கைகளால் சுய இன்பம் அனுபவிப்பது போல இருக்கிறது என்கிறான் கணவன்

இருவரும் விவாகரத்துப் பெறுகிறார்கள்; ஆனால், அல்தியா கர்ப்பம் என்று கணவனுக்கோ, மனைவிக்கோ அப்போது தெரியாது. கணவன் இப்போது எங்கே என்றுகூட அவளுக்குத் தெரியாது.

தன்னைப் படுக்கைக்கு வரும்படி அழைக்கும் தன் ஆபீஸ் நிர்வாகி மற்றும் பலர் மத்தியில் பிரபுநாத் போன்ற ஒரு நல்லவன். அவளைப் படுக்கைக்கு வரும்படி அழைக்காமல் அவளுடன் வாழ விரும்பி அந்த வீட்டிற்குள் பிரவேசிக்கின்றான்.

வாழத் தொடங்கியதும் ஒரு சாமானிய, பொறாமை கொண்ட ஆணாதிக்க வெறிகொண்ட ஒருவனாக மாறுகிறான் பிரபுநாத்.

"எனக்கு பேஸ் புக்கில் 100 பேர்தான் - உனக்கு எப்படி 2 ஆயிரம் பேர்" என்று நச்சு வார்த்தைகளால் திட்டுகிறான் அவன்.

பிரபுநாத்தும் அல்தியாவும் படுக்கை அறையில் உரத்துச் சண்டையிடும் காட்சி, எந்தப் படத்திலும் வராத காட்சி. ஒரு பழைமைவாத ஆணாதிக்க இளைஞனுக்கும் இன்றைய ஆணாதிக்க



சமூகத்தில் தினமும் போர் நடத்திக் கொண்டிருக்கும் பெண்ணியக் கொள்கை கொண்ட ஒரு யுவதிக்கும் இடையில் நடக்கும் போராட்டம். வாக்குவாதத்தின்போது வசனங்கள் மீது எமது கவனத்தைப் பதிய வைப்பதற்காக பயங்கர திகில் இசை எதுவும் கிடையாது. ஆண்டிரியாவும் வசந்தும் ஒழுக்கம் பற்றி வாதிடுகிறார்கள்.

மறுபுறத்தில் தமிழ் குடும்பங்களில் கணவர் ஒருபுறம், மனைவி மறுபுறம் ஒழுக்க முறைகேடுகளில் ஈடுபடுவதும் படத்தில் விரிவாகக் காட்டப்படுகிறது.

ஒட்டுமொத்தமாக தரமணி இயக்குனர் ராம் தமிழர்களாகிய எங்கள் முன்னால் ஒரு பெரிய கண்ணாடியை தூக்கி காட்டுகிறார் . அதில் எங்களை நாங்களே பார்க்கிறோம் ..மிகவும் வெட்கப்படுகிறோம்

ஆண் புறாவைப் பிரிந்து தனித்து விடப்பட்ட பெண் புறாக்கள் இருக்கும் இடம் தரமணியோ, கிளிநொச்சியோ, முள்ளிவாய்க்காலோ... நிலைமை ஒன்றுதான்.

ஆணாதிக்க வெறியும் முரண்பாடுகளும் கொண்ட கள்ளப் புறாக்கள் மத்தியில் இந்தப் பெண் புறாக்களும் குஞ்சுகளும் நடத்த முற்படும் வாழ்வு மிகமிகச் சிரமமானதுதான்.

## 19ம் பக்க தொடர்ச்சி

இதை நம்பலாமா? நம்பலாம். இதை யாராவது பார்த்திருக்கிறார்களா? பார்த்திருக்கிறார்கள்.

இரண்டாயிரத்தி ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு- போகியாகப் பிறந்து- போதி மரத்தடியில் யோகியாக மாறியவன் இதைப் பார்த்தான்- தெளிவாகப் பார்த்தான். அந்த மகான் நிர்வாணமடைந்த அன்றைய தினம்- அன்றைய இரவு- தான் அடைந்த அனுபவத்தை பின்வருமாறு கூறுகிறார்:

"நான் கடந்து வந்த எத்தனை எத்தனையோ பிறவிகள் எனது நினைவுக்கு வந்தன. ஒன்று- இரண்டு-மூன்று- நான்கு-ஐந்து- ஐம்பது-நூறு- ஆயிரம் என எத்தனை எத்தனையோ கால கட்டங்களில் எத்தனை எத்தனையோ பிறவிகள் எனக்கு. எனது இந்த ஒவ்வொரு பிறவியையும் நான் மிகத் துல்லியமாக நினைவு கூர்ந்தேன். ஒவ்வொரு பிறவியிலும் எனது ஜனனம் எங்கு சம்பவித்தது- அந்தப் பிறவியில் எனது பெயர் என்ன- எனது பெற்றோர்களின் பெயர்கள் என்ன- அவர்களின் குடும்ப வரலாறு என்ன- எல்லாமே துல்லியமாகத் தெரிந்தன. ஒவ்வொரு பிறவியிலும் எனது சுகமான வாழ்க்கை- துக்கமான வாழ்க்கை- எனது மரணம்- நான் மீண்டும் மீண்டும் பிறவியெடுத்தது எல்லாமே துல்லியமாகத் தெரிந்தன. அது மட்டுமல்ல- மனிதக் கண்களுக்கு புலப்படாத தெரியாத வேறு பல விடயங்களையும் பார்த்தேன். பிரபஞ்சத்தில் உயிர்கள் தோன்றுவதைப் பார்த்தேன்- வாழ்வதைப் பார்த்தேன்- அவற்றின் மரணத்தைப் பார்த்தேன். ஒவ்வொரு உயிரினமும் செய்த கர்மத்தின் பிரகாரம்- அவற்றிற்கு வாழ்வு அமைவதைப் பார்த்தேன். ஒவ்வொரு உயிரினமும் செய்த கர்மத்தின் பிரகாரம்- அவற்றின் மறுபிறப்பு அமைவதையும் பார்த்தேன்."

புத்தன் மட்டுமா பார்த்தான்? பகிர்ந்தான்?

"பேத கன்மத்தால் வந்த பிராரத்துவம் நானாவாகும்- ஆதலால் விவகாரங்கள் அவரவர்க்கானவாகும்" சொன்னவர் தாண்டவ முனிவர்.

"பல மிருகமாக- பறவையாக- பாம்பாக- எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்" சொல்வது சிவபுராணம்.

எனது உடலும் ஒரு நாள் என்னைச் சுற்றியுள்ளவர்களால் பிணம் என்று அழைக்கப்பட்டு மயானத்தில் எரிக்கப்படும் போது என்னுடன் கூட வருவது எனது கர்மபலன்கள் மட்டுமே- இந்த உண்மை நமது மனதில் அழுத்தமாகப் பதிந்தால்- இந்த உண்மையை நாம் அடிக்கடி நினைவு கூர்ந்தால்- அப்பொழுது கூட இருப்பவனுக்குக் குழி பறிக்க மனம் தூண்டாது- அடுத்தவன் வாழ்க்கையை கெடுப்பதற்கு மனம் தூண்டாது- ஊரை ஏமாற்றிப் பிழைப்பதற்கு மனம் தூண்டாது- வேடம் போட்டு ஏமாற்றுவதற்கு மனம் தூண்டாது.

**போர்வைகளற்ற நிர்வாணம் இந்த அவதானம்.**
**அகத்தே மாசில்லாதவனுக்கு நிர்வாணம் ஒரு புனிதம்.**
**அது ஒரு சத்தியம்.**





# அறமே ஆக்கம் தரும்



உலகின் நலன்கள் அனைத்தும் நேர்மை, தூய்மை, உண்மை, வாய்மை, மெய்மை, சான்றாண்மை முதலான அனைத்துப் பண்புகளும் அறம் எனப்படும். அறம் என்பதன் பொருள் 'அற்றது' என்பது ஆகும். உள்ளம் மாசு அற்றதாக இருத்தல், தன்னலம் அற்றதாக இருத்தல், பற்றற்றதாக இருத்தல் அனைத்தும் அறத்துள் அடங்கும். அறத்தில் அன்பும் அருளும் அடங்கும்.

'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்' என்ற வள்ளுவர் இலக்கணம் மிகவும் நுட்பம் மிகுந்தது. அறத்திற்குச் செயல் திறம் வேண்டும் என்பதை வலியுறுத்தும் வரிகள் இவை. உள்ளொன்றும் புறமொன்றுமாகவும் இல்லாமல் அகமும் புறமும் தூய்மையுடன் ஒத்திருக்க வேண்டும். மனம் அழுக்கற்று, அவாவற்று, வெகுளியற்று, இன்னாச்சொல் அற்று இருக்க வேண்டும்.

தூய்மையான செயல் வேண்டுமென்றால் துணையாக நிற்பவை தூய்மையான மனமும், தூய்மையான சொல்லும் ஆகும். அறத்தின் செயல்நோக்கம் கருதி அறவினை என்று குறிப்பிடுவார் வள்ளுவர். ஔவையும் 'அறஞ்செயவிரும்பு' என வள்ளுவர் வழிநின்று பேசுவார். இவைகளே, மெய்மை, வாய்மை, உண்மை என வழங்கப்படுபவை. வாய்மை என்றால் கண்ணால் கண்டதைக் கண்டபடியே சொல்வதா? உள்ளத்தால் உணர்ந்ததை அப்படியே உரைப்பதா? அவ்வாறு கூறும் போது சில சமயம் பிறருக்குத் தீங்கு நேருமாயின் அது வாய்மையால் வந்த தீமை என்று கருதப்படும் அல்லவா? அப்படியாயின் வாய்மைக்கு இலக்கணம் என்ன?

வாய்மைக்கு அரியதோர் இலக்கணம் கூறுகிறார் வள்ளுவர். மற்ற மனிதர்களுக்கோ, உயிர்களுக்கோ, தீங்கு செய்யாத சொற்களைச் சொல்வதெல்லாம் வாய்மை என்று சொல்லப்படும். நடந்ததைச் சொல்வது மட்டுமின்றிப் பிறருக்குத் தீங்கு நிகழாமல் நினைப்பதும், சொல்வதும் செய்வதும் வாய்மையாகும்.

**'வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்'**

சில சமயங்களில் ஒரு பொய்யால் நன்மை விளைவதைப் பார்க்கிறோம். பொய் ஒன்று பேசி, அதனால் நன்மை விளைகிறதா? ஆராய்ந்து பார்க்கிறார். முடிவாகச் சொல்கிறார். அப்பொய்யும் மெய்யைச் சார்ந்தது என்று. ஆனால், ஒரு நிபந்தனை விதிக்கிறார். அப்பொய் விளைவிக்கும் நன்மை களங்கமற்றதாய், கறையற்றதாய் குற்றமற்ற நன்மையைப் பிறருக்குத் தருமாயின் அப்பொய்யும் மெய்தான் எனப் பேசுகிறார், பொய்யா மொழிப் புலவர். 'பொய்மையும்' என்ற சொல் இங்கு நயமுடையது.

**"பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"**

உண்மையை வணங்கி அதன் ஒளிச் சுடரைப் பின்பற்றியவர்கள் நம் சான்றோர்கள். வாய்மையின் ஆற்றல் இறையாற்றல் என உணர்ந்தவர்கள். உலகங்கள் அனைத்திலும் அறிவாய், அனுபவங்களாய், உள்ளுணர்வுகளாய் எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்கும் மெய்ம்மையே இறை எனக் கண்டவர்கள் நம் சான்றோர்கள். உலக வாய்மையை உணர்ந்தவர்கள் உயர்வுடையவர்களாய் மகான்களாக மகாத்மாக்களாக உயர்கின்றனர். அவர்கள் பெருமையை உணர்ந்து போற்றுகிறார் வள்ளுவர்.

பொய்மை நீங்கிய உள்ளத்துச் சான்றோர்களை உலக மக்கள் தங்கள் உள்ளங்களை எல்லாம் காணிக்கை ஆக்கிப் போற்றிப் பாராட்டுவார்கள். என்றும் தம் உள்ளங்களில் நிலைநிறுத்திப் புகழ்வர் என்று பொய்யாமையின் சிறப்பைக் கூறுவார்.

உடலின் புறத்தே படிந்த அழுக்குகள் தண்ணீரால் நீங்கிவிடும். சோப்புப் போன்ற வாசனைப் பொருள்களால் உடலை வாசமுறச் செய்யலாம். ஆனால், உள்ளத்தில் உள்ள அழுக்குகளை நீக்கிட உள்ளம் அறவொளியால் நிறைந்திட உதவும் ஆற்றலுடையது உண்மையே. உண்மை உள்ளழுக்குகளை நீக்கி, இருள் நீக்கும் ஒளிவிளக்குப் போல் நெஞ்சின் இருள் போக்கி என்றும் உள்ளத்தை ஒளியுடையதாய் ஆக்கும்.

**"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.** (குறள்)

**"யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத் தொன்றும்
வாய்மையின் நல்ல பிற"** (குறள்)

தாம் அறிந்த பேருண்மைகளில் தலையானது எனத் தன்னை முன்னிலைப்படுத்தி வாய்மையைப் போன்று பெருநன்மையும் நலமும் தரும் செயல் வேறொன்றும் இல்லை என அறுதியிட்டு உறுதியாகக் கூறுகிறார்.

மனத்தோடு வாய்மை மொழிந்து, சொல்வேறு, செயல்வேறு என்று மாறுபடாமல் உண்மையானர்களாய் நல்ல அரியசெயல் செய்பவர்களால்தான் உலகம் வாழ்கிறது.

அறவாழ்வால் விளையும் நன்மைகள் என்ன? வாழ்வு துன்பமில்லாமல், சுமையாக இல்லாமல் மகிழ்வும் இனிமையும் மிக்கதாய் விளங்க வேண்டுமானால் வாழ்வு அறம் நிறைந்து இருக்க வேண்டும். செம்மையாகத் திருத்தப்பட்ட சிறந்த பாதையிலே பாதுகாப்புடன் செல்லும் துன்பமில்லாப் பயணம் போல் வாழ்வுப் பயணமும் பயமில்லாததாய்ப் பயன்மிகுந்ததாய்ப் பிறருக்கும் இவ்வறவாழ்வின் பயன்தந்து நலம் நல்கும். தீவினை வந்து தாக்கும் வாழ்வையும், பிறவியையும் தாண்டலாம். நீண்ட நிலைத்த புகழும், அமைதியும், அன்பும், இன்பமும் கொலுவீற்றிருக்கும்.

**"சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு"**

**"வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்"**

அறத்திற்கு இணையானது அறமே ஆனதால் அறத்தை மேற்கொள்வதே பாதுகாப்பானது. இயன்ற வழியெல்லாம் அறச்செயல் செய்து வரவேண்டும். ஆரவாரம் ஒழிந்து தூய்மை மிகுந்து உள்ளத்தில் ஒளி மிகுந்து வாழ்வில் இன்பமும், நிறைவும் மிகுதல் வேண்டும். உலகில் மக்கள் கள்ளால், மதுவால், காமத்தால், சூதால், ஆபாசத் திரைப்படங்களால் இன்பம் பெறுவதாக மயங்கித் திரிகின்றார்கள். இவையனைத்தும் நிலையில்லாத சிறுமை இன்பங்கள். இறுதியில் துன்பத்தில் ஆழ்த்தி மனிதனை அழித்துவிடும் ஆகாஇன்பங்கள்.

அறத்தால் வரும் இன்பம்தான் நிலையானது. வாழ்நாள் வழியடைக்கும் தடைக் கல்லாயும் நிற்பது.

செய்யத்தக்கது அறனே என்றும் நீக்கத்தக்கது பழியே என்றும் அறம் பாடினார் வள்ளுவர். அறத்தால் புகழும், அறமில்லாச் செயலால் பழியும் பாவமும் நிறையும். அறவொழுக்கம் உடையவர்களுக்கும் அறஇயக்கங்களுக்கும் இன்று மதிப்புக் குறைந்து வருகிறது. அறனறிந்து மூத்த அறிவுடையோர் கேண்மை போற்றும் பண்பு தேய்ந்து வருகிறது. ஆரவாரம் மிக்கவர்கள் தீயவர்கள். காமம், வெகுளி, மயக்கங்கள் உடையவர்கள் பெருகி வருகிறார்கள். மக்களின் உணர்வுகளை மயக்கி ஆரவாரத்தால் போலிச் செல்வாக்கைப் பெருக்கி அவற்றை ஓர் ஆற்றலாக்கி, தகுதியற்றோர் எல்லாம் பெருமதிப்புப் பெற்றும், சான்றோர்கள் ஒதுக்கப்பட்டு வரும் அவல நிலையும் மலிந்து வருகிறது.

**"வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்"**

என்கிறார் திருவள்ளுவர்.

ஆதலால் அறிஞர்களும் சான்றோர்களும் போற்றப்பட வேண்டும். தீது விரைந்து வளர்ந்தாலும் வளர்ந்த விரைவுக்கு ஏற்ப விரைந்து அழிந்து மறைந்துவிடும் என்பது உலக நியதி. ஆதலால் மக்கள் ஆரவாரங்களுக்கும் மயக்க உணர்வுகளுக்கும் மயங்காமல் துணிவோடும் நம்பிக்கையோடும் ஒற்றுமையோடும் அறநெறி போற்றி வாழ வேண்டும். வறுமையில் மிகப் பெரிய வறுமை சிந்தனை வறுமையும் நற்செயல் செய்யாத வறுமையுமாகும். அறவோர்கள் துணிவு மிக்கோராய், வலிமையான அமைப்புகளின் துணைகொண்டு அறநெறிகள் தழைத்தோங்கப் பாடுபட வேண்டும். அறமே ஆக்கம் தரும். நீண்ட நிலைத்த இன்பத்தையும் புகழையும் அமைதியையும் தரும் என்ற உண்மைகளை உணர்த்த வேண்டும்.

வாய்மைக்கு இலக்கணம்
என்ன? மற்ற மனிதர்களுக்கோ,
உயிர்களுக்கோ, தீங்கு செய்யாத
சொற்களைச் சொல்வதெல்லாம்
வாய்மை என்று சொல்லப்படும்.
நடந்ததைச் சொல்வது மட்டுமின்றிப்
பிறருக்குத் தீங்கு நிகழாமல்
நினைப்பதும், சொல்வதும், செய்வதும்
வாய்மையாகும். அப்படி வாழ்வாங்கு
வாழ்ந்த பெருந்தகை திருக்குறள்
செம்மல் ந.மணிமொழியன்.

திருச்செந்தூரில் இருந்து இணுவை ச.சிறீரங்கன்

# ஆறுமுகநாவலர் அடிச்சுவட்டில் திருச்செந்தூரில் ஆறு திருமுருகன்

முருகப்பெருமானுக்குரிய சிறப்புத் திருவிழாவான கந்தசஷ்டி நோன்புக் காலத்தில் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகனின் தொடர் பேச்சைப் பன்னாட்டு அடியார்கள் கேட்டுச் சுவைத்தனர். இந்தியாவின் தமிழகம் மட்டுமின்றி இலங்கை, மலேசியா, கனடா, லண்டன், அவுஸ்திரேலியா ஜெர்மனி, சுவிட்சர்லந்து ஆகிய நாடுகளிலிருந்து வந்து கூடிய பலர் அவரது பேச்சை செவிமடுத்து கைதட்டி மகிழ்ந்தனர்.

கொழும்பு ஜிந்துபிட்டி சிவசுப்பிரமணிய கோவில் அறங்காவலர் தெ. பெரமநாயகம் மலர்மாலை சூடி, பொன்னாடை அணிவித்து இந்த நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார். இந்த தொடர் சொற்பொழிவுக்கு லண்டன் பக்த பிரமுகர் விஸ்வநாதன் யோகநாதன் அனுசரனை வழங்கினார். நிகழ்ச்சிகளை நெறிப்படுத்திய பா.பாலசுப்பிரமணிய குருக்கள் மகாமணி ஆகியோருக்கு விக்ரமசிங்க மலர் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தினார்.

முருகப் பெருமானின் அறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூர் ஆலயக் கலையரங்கில் தொடர்ச்சியான உபநியாசமாய் அவரது சொற்பொழிவு இடம் பெற்றமை. சைவத் தமிழர் பெற்ற அளப்பரிய பேறென்றே சொல்லக் கூடியதாக இருந்தது. ஆறுமுக நாவலர் முதன்முதலாக திருவாசகத்தை பதிப்பித்தார். நாவலர் பெருமானின் காலத்திற்கு பின்பாக எமது தாய் நாட்டின் அறிஞர் ஒருவர் மூன்றாவது தடவையாக தமிழ்நாட்டில் தொடர் உரையாற்றினார் என்ற பெருமையையும் திருமுருகன் பெற்றுள்ளார். கந்த சஷ்டி கலாச்சாரம், விழிக்கு துணை, மேன்மை கொள் சைவ நீதி, ஆத்மீக சிந்தனைகள் என்ற தலைப்புகளில் இவரின் பேச்சுக்கள் செறிந்திருந்தன. கச்சியப்பரின் கந்தபுராண வரலாறே தமிழ்க் கலாச்சாரமாக அமைகிறதென்று இவர் குறிப்பிட்ட ஏட்டு வடிவத்தில் இருந்த கந்தபுராணத்தை தமிழ் அச்சு வடிவில் ஆறுமுக நாவலரே முதன் முதலாக பதிப்பித்தார் எனவும். இதனை தமிழ்நாட்டின் பெரும் தமிழறிஞர்களே பாராட்டியுள்ளதாகவும் ஆதாரத்துடன் விளக்கினார். இதன் வாயிலாக நாவலர் பெற்ற மகிமை ஈழ நாட்டு மக்களையும் சேர்கின்றதென இவர் கூறியபோது சபையினர் உற்சாகப்பட்டு கைதட்டினார்கள்.

"விழிக்குத் துணை" என்பது முருகப் பெருமானின் பாதகமலத்னைநபெ அடியவர்கள் உற்று நோக்க வேண்டும். முருகப்பெருமான் குழந்தை வடிவானவன். அந்த குழந்தை சினப்பட்டு வெறும் கச்சையுடன் மலையில் சென்று அமர்ந்தமையின் உட்பொருளை பக்தர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். முருகப் பெருமான், தாழ்ந்த



குல வேடுவப் பெண்ணை தனது மனைவி வள்ளியாக ஏற்றுக் கொண்டார் என்றால் இதன் மூலம் அடக்கம் பெற்றுள்ள கந்தபுராண தத்துவத்தை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். வேடுவ குல பெண்ணான வள்ளியை அவளது வேண்டுகோளை ஏற்று தன் மனைவியாக்கிக் கொண்ட முருகன் மெய்யடியார்களின் வேண்டுதல்களை புறக்கணிக்கவே மாட்டார். கந்த புராணம் எமக்கு கதைகள் ஊடாக மாபெரும் தத்துவ பொருளையே சுட்டி நிற்கிறது. எம்மிடையே சாதி வேறுபாடு என்பது இல்லை. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற வள்ளுவர் கூற்றே கந்தபுராண செய்தியாக தருகின்றது. அத்துடன் ஒருவர் பிழை செய்யின் அதனை மன்னிக்கும் பண்பையும் கந்தபுராணம் எமக்கு பாடமாக தருகின்றது. அரக்கனாகிய சூரனை துவம்சம் செய்து அவனை சேவலும் மயிலுமாக முருகன் அரவணைத்தமை "பகைவனுக்கருள்வாய்" என்ற தர்ம சிந்தனைப் பண்பை கந்த புராணம் போதிக்கின்றது. கந்தபுராண கருத்துக்களை மிக ஆழமாக மனத்தே பதித்துவிட்டால் முருகப்பெருமான் அப்படிப்பட்ட நெஞ்சங்களை தேடி வருவார். இது சத்தியம் என்றும் ஆறுதிருமுருகன் தனது பேச்சிலே எடுத்தியம்பினார்.

காகத்தின் விருந்தோம்பும் பண்பினை நாம் கைகொள்ள வேண்டும். மிருகமாகிய நாயை பாருங்கள். நன்றியறிவுள்ள மிருகம் அதுவாகும். இத்தகைய பண்புகளாலேதான் எமது முன்னோர்கள் பறவைகளையும் மிருகங்களையும் இறைவர்க்கு வாகனமாக அமைத்தார்கள். எங்காவது மனித வடிவை வாகனமாக அமைத்துள்ளார்களா?" என்றும் திருமுருகன் கேட்டார்.

தொடர் உரையின் இறுதி நாளில் தமிழக மக்களுக்கு ஆறுதிருமுருகன் நன்றிக்கடன் தெரிவித்தபோது எங்கள் கண்களில் நீர் கசிந்தது. எமது மக்கள் விடிவுக்காக தமிழக மக்களாகிய நீங்கள் குரல் எழுப்பியதை மறக்க முடியாது. சிலர் தீயில் தங்களை ஆகுருதியாக்கி கொண்டார்கள். இவற்றை ஈழத் தமிழர் மறக்கமாட்டார்கள். இன்னமும் சிறையில் அடைக்கப்பட்ட பல இளைஞர்களும் யுவதிகளும் விடுதலைக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். அவர்களை நான் சிறையில் சென்று பார்த்து ஆறுதல் கூறி வருகின்றேன். அவர்களுக்காகவும் தயவு செய்து பிரார்த்தனை செய்யுங்கள்" என்று மன்றாட்டமாகக் கேட்டுக்கொண்டார்.

வடமொழியில் உப-வாசம் என்றால் "அருகிருத்தல்" என்று பொருள்படும். உப வாசம் என்பது முருகன் அருகே இருந்து விரதம் பிடிப்பதாகும். அதற்கு சிலர் தவறான விளக்கம் கொண்டுள்ளனர். பால், பழம் அல்லது ஒரு வேளை சோறு உண்டுவிட்டு உப வாசம் பிடிப்பது விரதமல்ல. திருச்செந்தூர் வந்து முருகன் அருகிருந்து நோன்பு செய்வதென்பது நீங்கள் பெற்ற பெரும் பேறாகும் என்றும் ஆறு திருமுருகன் தனதுரையில் விளக்கமளித்தார்.

ஆறுதிருமுருகன் பேச்சினை லண்டன் 'தமிழர் தகவல்' ஆசிரியர் சிவானந்தசோதி ஒழுங்கு செய்திருந்தார். ■

## லண்டனில் திருமுருகன்

28.10.2017 அன்று லண்டன் வோல்தம் ஸ்ரோவில் நடந்த சைவ முன்னேற்றச் சங்கத்தின் பிரமாண்ட 40வது ஆண்டு விழாவில் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இரு வாரங்கள் லண்டனில் தங்கியிருப்பார்.



## வாசகர் கடிதம்

### அண்ணன் என்னடா தம்பி என்னடா...

அண்ணனும் தம்பியும் சேர்ந்து ஒரு அழகான பூவை ஈவிரக்கமின்றிக் கசக்கிப் பிழிந்து இரக்கமின்றி சாக்கடையில் எறிந்துவிட்டுப் போக எப்படித்தான் மனம் வந்ததோ? சுவிஸ்குமார் என்ற மிருகத்தைப் பற்றித்தான் சொல்கிறேன். தங்கள் இதழில் அவர்களுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பைப் படித்தேன். தாயகத்தில் நமது தலைவன் ஆட்சி நடத்திய காலத்தில், நள்ளிரவிலும் நம் பெண்கள் 'பாரதி கண்ட' புதுமைப் பெண்களாக வாழ வழி சமைத்தார். ஆனால் அவரைத் தொடரவிடாமல், அழிப்பதற்கு துணைபோனவர்களும், நம்மவர்கள் தான்! அண்ணன் சுவிஸ் குமாருடன் தம்பியும் ரவுடிகளும் சேர்ந்து நமது சகோதரியைக் கெடுத்து சின்னாபின்னமாக்கி, சிதைத்து கொலை செய்திருக்கிறான்களே. இவங்களுக்கெல்லாம் சவூதியில் கால் கை முறித்து, கல்லெறிந்து அணுவணுவாக சித்திரவதைக்குள்ளாக்கி, பகிரங்கமாகக் கொல்ல வேண்டும்!

– எஸ்.அருணானந்தம்
NORTH HALT

### அரசியல் அலசல் சபாஷ்!

கொழும்பு, மற்றும் இணையத்தளங்களில் வெளிவரும் அரசியல் கட்டுரைகளைப் படித்து வருகிறேன். அந்த அரசியல் அலசல்களை தொடர்ந்து படித்து வருகிறேன். உங்கள் பத்திரிகையில் வரும் முதல் பக்க அரசியல் அலசல். 'கடுகு சிறிது, காரம் பெரிது' என்பது போல. அடிதான்! உள்ளே திறந்ததும் மூன்றாம் பக்க அரசியல் அலசல். 'பனங்காட்டான்' எழுத்து வன்மையை பாராட்டாமல் இருக்க முடியாது!

– என்.சூரியகுமாரன் SOUTH HARROW

### அனுபவம் பேசுகிறது

'விமல் பக்கம்' மிகவும் சிறப்பாக உள்ளது. அதையும், இதையும் எப்படி இணைத்து எழுதுகிறார் என்று யோசிப்பேன். எந்த விஷயத்தை எப்படி எப்படி எழுத வேண்டும் என்ற ரகசியம் தெரிந்தவர் விமல் சொக்கநாதன்!

– சுப்பிரமணியம் சுரேஷ்
HAYES

### சுவைத்தேன்

அவ்வப்போது கலைஞர்கள் நினைவுகளை எழுதினாலும், ரசித்துப் படிக்கக் கூடியதாக எழுதுகிறார் டாக்டர் எஸ்.நவரத்தினம். 'பவளஸ்' பாழுவைப் பற்றியும், அவர் மனைவியைப் பற்றியும் எழுதியிருப்பதைப் படித்துச் சுவைத்தேன்.

– ஹரி ரவிச்சந்திரன்
NEW MALDEN

# LycaFly

## NO.1 Agent to **COLOMBO**

fr **£402** incl. tax

### COME STRAIGHT TO US. SAVE TIME & MONEY.

- Direct flight deals with over **200 AIRLINES.**
- **FREE LYCAMOBILE** UK bundle with every booking.
- **INSTALMENT PAYMENTS** facility for your booking.

Finance provided by Fly Now Pay Later. *T&Cs apply

### WORLDWIDE FLIGHT OFFERS

| | | | |
|---|---|---|---|
| CHENNAI | fr £392 | MELBOURNE | fr £561 |
| TRICHY | fr £517 | LOS ANGELES | fr £408 |
| KOCHI | fr £392 | TORONTO | fr £305 |
| MUMBAI | fr £356 | BANGKOK | fr £348 |
| DELHI | fr £329 | SINGAPORE | fr £339 |
| GOA | fr £407 | KUALA LUMPUR | fr £383 |

The fares above include taxes and are subject to availability.

**CALL 0207 132 32 32** lines open **24x7**

IATA

**WEMBLEY**
14 Ealing Road, Wembley,
London HA0 4TL · 0207 132 0055

**EAST HAM**
180 High Street North,
East Ham E6 2JA · 0207 132 0056

**CANARY WHARF**
Walbrook Building, 195 Marsh Wall
London E14 9SG · 020 7132 0100

All fares shown above are subject to availability. The Lycamobile UK bundle offer applies for fully paid adult return tickets and will not be offered to child/infant and one way tickets. Free UK bundle must be redeemed within 30 days of booking. Free UK bundle is valid for 30 days from the day it is activated. This offer is not valid for any of the bookings made online. Not to be used in conjunction with any other offer. Full terms are available on our website. LycaFly reserves the right to withdraw this offer before the expiry date, without notice.

Lycaremit
Send money home for less

£5 FREE
LYCAMOBILE CREDIT
when you transfer over £300*

உலகின் எந்த நாட்டிற்கும் மிகக் குறைந்த செலவில் பணம் அனுப்ப...

- குறைந்த கட்டணம்,
- மிகக் கூடிய பணமாற்று வீதம்

Visit www.lycaremit.com
or
one of our branches

Our branches

**East Ham (Lycafly)**
180 High Street North,
London, E6 2JA.

**Mitcham (Food world)**
117 - 119 London road,
Mitcham CR4 2JA

**East Ham (Shakthi)**
245-247 High Street North
London, E12 6SJ

**Tooting**
198/B Upper Tooting Road,
Tooting SW17 7EW

**Gants Hill**
639 - 643 Cranbrook Road,
Ilford, IG2 6SX

**Wembley**
14 Ealing Road,
Wembley HA0 4TL



Visit
lycaremit.com

For more info call
0207 132 0015

Or FREE from your Lycamobile
305

LMFS